REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

2024 ஏப்ரல் 12 வெள்ளிக்கிழமை


# தினகரன்

THINAKARAN 92 தினகரன்

வருட. 92 இல. 89 | Friday 12, April, 2024 | 12 பக்கங்கள் | 50/-


## பாராளுமன்ற உறுப்பினர்களின் குடும்பங்களுக்கும் காப்புறுதி

### எம்.பி.க்கள் பலர் கோரிக்கை




தமது குடும்ப உறுப்பினர்களுக்கும் காப்புறுதித் தொகையை வழங்குமாறு பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தற்போதுவரை பாராளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமே 04

## புதுப்பிப்புகளின் அடிப்படையிலேயே நாடு, தேசம், உலகம் முன்னேற முடியும்

### ஜனாதிபதி ரணிலின் புத்தாண்டு வாழ்த்து



புதுப்பித்தல் வாழ்க்கைக்கு புதிய நம்பிக்கை தருமென்பதுடன், புதுப்பிப்புகளின் அடிப்படையிலேயே நாடு, தேசம், உலகம் முன்னேற முடியும். புதிய சிந்தனைகளினாலேயே புத்தாக்கம் பிறக்குமென, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

புதிய வருடம் பிறத்தல், புதிய நாட்காட்டி, பருவத்துக்கு பருவம் ஏற்படும் புதிய மாற்றங்கள் உலக மக்களுக்கான வாய்ப்புகளை புதுப்பிப்பதாகவும், ஜனாதிபதி தெரிவித்துள்ளார். 04

## புத்தாண்டின் உண்மையான உரிமை எமது பிள்ளைகளுக்கே உரித்தானது

### பிரதமரின் புத்தாண்டு வாழ்த்து



"தமிழ், சிங்கள புத்தாண்டு அல்லது சித்திரைப் புத்தாண்டு இலங்கை தேசத்தின் மாபெரும் கலாசார விழாவாகும். இப்புத்தாண்டின் உண்மையான உரிமை எமது பிள்ளைகளுக்கே உரித்தானதாகும். புத்தாண்டின் மகிழ்ச்சியையும் பாரம்பரியத்தையும் எமது அடுத்த தலைமுறையினருக்கு பாதுகாத்து வழங்குவது எம் அனைவரினதும் கடமையாகும்" என பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார். தனது புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் பிரதமர் மேலும் தெரிவித்துள்ளதாவது, 04

## பெருமைமிகு நாட்டை உருவாக்க அனைவரும் ஒன்றிணைவோம்

### எதிர்க்கட்சி தலைவர் சஜித் புதுவருட வாழ்த்து



"அமைதியும் மகிழ்ச்சியும் நிம்மதியும் கொண்ட பெருமைமிக்க நாட்டை உருவாக்க நாம் அனைவரும் ஒன்றிணைய வேண்டிய தருணம் வந்துவிட்டது" என, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

சிங்கள, தமிழ் புத்தாண்டை முன்னிட்டு அவர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். தனது புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் பிரதமர் மேலும் தெரிவித்துள்ளதாவது, "மீன ராசியிலிருந்து மேஷ ராசிக்கு சூரியன் 04

## தோட்ட தொழிலாளர்களின் சம்பள உயர்வு விவகாரம்

# கம்பனிகள் அலட்சியப் போக்கு; கடும் அதிருப்தியில் இ.தொ.கா.

### தொழிற்சங்க நடவடிக்கையில் இறங்கவும் தயாராவதாக செந்தில் தெரிவிப்பு

**தொழில் அமைச்சுடன் மீண்டும் பேச்சு நடத்தவும் தயாராவதுடன் 1,700 ரூபா சம்பள அதிகரிப்பு, கம்பனிகளும் நட்டமடையாது, தொழிலாளர்களுக்கும் நியாயமான வேதனம் கிடைக்கும் இதுவே இ.தொ.கா.வின் கணிப்பு என்றும் தெரிவிப்பு**



தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வுக்கான தீர்வு, கூட்டு ஒப்பந்தத்தில் சாத்தியப்படாததால் ஜனநாயக முறையில் இரு தரப்புக்கும் நடுநிலையான தொழில் அமைச்சுடன் பேச்சுவார்த்தை நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும், கம்பனிகள் அலட்சியப் போக்கை பின்பற்றுவதாக தெரிவித்த இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான், தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு குறித்து தொழில் அமைச்சுடன் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகவும் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள இ.தொ.கா. தலைமையகமான சௌமியபவனில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு அவர் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கம்பனிகளுக்கு எதிராக தொழிற்சங்க நடவடிக்கை எடுப்பதாக இ.தொ.கா. நேற்று முன்தினம் தீர்மானம் எடுத்திருந்தது. இது தொடர்பாக இ.தொ.கா. உயர்மட்டக் குழு நேற்று இ.தொ.கா. தலைமையகத்தில் கூடி தொழிற்சங்க போராட்டங்களை எவ்வாறு முன்னெடுப்பது என்பது குறித்து 04

## பாதுகாப்பு அமைச்சு நலன்புரிப் பிரிவின்

### சித்திரைப் புத்தாண்டு நிகழ்வில் ஜனாதிபதி ரணில் பங்கேற்பு



பாதுகாப்பு அமைச்சின் நலன்புரிப் பிரிவால் பத்தரமுல்லையிலுள்ள பாதுகாப்பு படைத் தலைமையக வளாகத்தில் நேற்று முன்தினம் (10) ஏற்பாடு செய்யப்பட்ட தமிழ், சிங்களப் புத்தாண்டு நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்துகொண்டார். சம்பிரதாயங்களுக்கு முன்னுரிமை அளித்து 04

## கொழும்புத் துறைமுக நகரில் விமானப்படையின் கண்காட்சி

### மே 29 முதல் ஜூன் 02வரை நடைபெற ஏற்பாடு



இலங்கை விமானப்படையினரின் கண்காட்சி எதிர்வரும் மே மாதம் 29ஆம் திகதி முதல் ஜூன் 02ஆம் திகதி வரை கொழும்புத் துறைமுக நகரத்தில் நடைபெறவுள்ளதாக, விமானப்படை தளபதி எயார் 04

## சுமார் 13 இலட்சம் பேர் சொந்த இடங்களுக்கு பயணம்

### சித்திரைப் புத்தாண்டையிட்டு விசேட ரயில், பஸ் சேவைகள்



சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு தமது சொந்த இடங்களுக்குச் செல்லவுள்ள பயணிகளின் நன்மை கருதி விசேட ரயில், பஸ் போக்குவரத்துச் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சுமார் 13 இலட்சம் பயணிகள் தமது சொந்த இடங்களுக்கு செல்லும் நிலையில் மேலதிக ரயில் சேவைகள் இடம்பெறுவதாக, ரயில்வே திணைக்களம் தெரிவித்தது.

05 பிரதான பிரிவுகளின் கீழ் பஸ் சேவைகள் முன்னெடுக்கப்படுவதுடன், இதற்கமைய வழமையான போக்குவரத்துச் சேவைகளை விட மேலதிகமாக 700 பஸ்கள் சேவையில் ஈடுபடுவதாக, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பதில் பணிப்பாளர் நாயகம் நவோமி ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

இதேவேளை பயணிகளின் பாதுகாப்புக் கருதி விசேட பாதுகாப்பு வேலைத்திட்டம் மேற்கொள்ளப்படுவதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

## சித்திரைப் புத்தாண்டு 2024 சுபநேரங்கள் - வாக்கிய பஞ்சாங்கம்

- ★ வருடப் பிறப்பு – 13.04.2024 சனிக்கிழமை இரவு 08 மணி 15 நிமிடத்தில் குரோதி வருடம் பிறக்கின்றது.
- ★ விஷு புண்ணியகாலம் (மருத்து நீர் வைக்கும் நேரம்) 13.04.2024 சனிக்கிழமை பிற்பகல் 04.15 முதல் நள்ளிரவு 12.15 வரை தலை – ஆலிலை, கால் புங்கை இலை, திசை – வடக்கு
- ★ கை விஷேட நேரம்
  14ஆம் திகதி காலை 07.57 முதல் காலை 09.56 வரை
  14ஆம் திகதி காலை 09.59 முதல் நண்பகல் 12.01 வரை
- ★ அணியும் ஆபரணங்கள் நீலக்கல் பதித்த அல்லது வைரக்கல் பதித்த ஆபரணங்கள்
- ★ அணியும் ஆடைகள் கபிலம் அல்லது வெள்ளை நிறம் கொண்ட ஆடைகள்
- ★ சங்கிரமதோஷ நட்சத்திரங்கள் - மிருகசீரிடம், திருவாதிரை, புனர்பூசம் (01ஆம், 02ஆம் பாதங்கள்), சித்திரை, விசாகம் (04 ஆம் பாதம்), அனுஷம், கேட்டை, அவிட்டம்
- ★ வியாபாரம், புதுக் கணக்கு ஆரம்பித்தல் 15.04.2024 திங்கட்கிழமை காலை 09.08 தொடக்கம் காலை 09.51 வரை அதே நாள் காலை 09.55 தொடக்கம் காலை 10.31 வரை.

## தினமின பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் சரத் குரே காலமானார்

**அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று பொரளை கனத்தை மயானத்தில்**



லேக் ஹவுஸ் நிறுவனத்தின் முன்னாள் ஆசிரியர் பீட பணிப்பாளரும் தினமின பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியருமான சரத் குரே தனது 84ஆவது வயதில் காலமானார். அன்னாரது பூதவுடல் நேற்று 04

## மியன்மார் அடிமை முகாமிலிருந்து

### எட்டு இலங்கையர் மீட்பு; விரைவில் நாடு திரும்புவர்

மியன்மாரிலுள்ள சட்டவிரோத அடிமை முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்ட எட்டு இலங்கையர்கள் தாய்லாந்திலுள்ள இலங்கை தூதரகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட இவர்கள், அடுத்த சில நாட்களில் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படவிருப்பதாக மியன்மாருக்கான இலங்கைத் 04

## நாட்டில் 30 இலட்சம் குடும்பங்களுக்கு

### சித்திரைப் புத்தாண்டுக்கு முன் தலா 10Kg அரிசி விநியோகம்



தலா 10 கிலோகிராம் படி 30 இலட்சம் குடும்பங்களுக்கு வழங்க திட்டமிடப்பட்டிருந்த அரிசியை சித்திரைப் புத்தாண்டுக்கு முன்னர் வழங்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆலோசனை வழங்கியுள்ளார்.

30 இலட்சம் குடும்பங்களில் ஒவ்வொரு குடும்பத்துக்கும் 10 கிலோகிராம் படி 04

## பேலியகொடை மீன் சந்தை 13,14,15ஆம் திகதிகளிலும்

### நுகர்வோருக்காக திறப்பு



தமிழ், சிங்கள புத்தாண்டின் போது நுகர்வோரின் நன்மை கருதி கொழும்பு, பேலியகொடை மீன் சந்தை நாளை 13ஆம் திகதியும் நாளை மறுதினம் 14ஆம் திகதியும் எதிர்வரும் திங்கட்கிழமை 04

## தமிழ், சிங்கள புத்தாண்டுக் காலத்தில்

### சட்டவிரோத மதுபானம் விற்பனை இன்றும் நாளையும் சுற்றிவளைப்பு

**கலால் திணைக்களம் விசேட சோதனை முன்னெடுப்பு**




சட்டவிரோதமாக மதுபானம் விற்பனை செய்பவர்களை இலக்கு வைத்து கொழும்பில் விசேட சோதனை நடவடிக்கையை முன்னெடுக்க கலால் திணைக்களம் ஆரம்பித்துள்ளது. 04

## தேசிய பூங்காக்களை பார்வையிட சுற்றுலாப் பயணிகள் அதிகரிப்பு

### 03 மாதங்களில் 02 இலட்சம் பேர் வருகை



நாட்டின் தேசிய பூங்காக்களை பார்வையிட வந்த வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை வரலாறு காணாதளவுக்கு 04







# தமிழ், சிங்கள இனங்களிடையேயான பாரம்பரிய ஐக்கியத்தின் அடையாளம்

குரோதி வருடம் நாளை பிறக்கின்றது. இலங்கைத் திருநாட்டில் இரு மதத்தினருக்கு மட்டுமன்றி, இரு இனத்தினருக்கும் உரிய ஒரு பண்டிகையாக சிறப்பித்துச் சொல்லப்படும் வகையில் சித்திரைப் புதுவருடம் அமைந்துள்ளது. இந்து தமிழ் மக்களும், பௌத்த சிங்கள மக்களும் பொதுப்பண்டிகையாக சித்திரைப் புத்தாண்டைக் கொண்டாடுகிறார்கள். வேறுபட்ட மதங்களையும் மொழிகளையும் கொண்டுள்ள மக்கள் இணைந்து பொதுவான பண்டிகையொன்றை பெருவிழாவாகக் கொண்டாடும் பாரம்பரியம் உலகில் வேறெங்கும் இருப்பதாகத் தெரியவில்லை. அந்த வகையில் இரு மதம், இரு மொழி சார்ந்த வகையில் சித்திரைப் புதுவருடம் இருப்பதால் இலங்கையில் இது ஒரு தேசியப் பொருவிழாவாக முக்கியத்துவம் பெறுகின்றது.



சித்திரைப் புதுவருடப் பிறப்பின் போது தமிழ், சிங்கள மக்கள் வெவ்வேறு பாரம்பரிய சமய அனுட்டான முறைகளை மேற்கொண்டு வருகிறார்கள். புதுவருடப் பிறப்பன்று விஷு புண்ணிய காலத்தில் தலைக்கு மருத்துநீர் தேய்த்து ஸ்நானம் செய்வது இந்து மக்களது வழக்கம் என்பதுடன் அதுவே புதுவருடத்தில் முதற்கருமமாகவும் அமைகிறது.

புதுவருடம் பிறந்ததும் சுபநேரத்தில் தலைக்கு எண்ணெய் வைத்து ஆசி பெறுவது பௌத்த மக்களது பாரம்பரிய வழக்கமாகப் பின்பற்றப்பட்டு வருவதுடன் அதுவே அவர்களது புதுவருடத்தில் ஆரம்பக் கருமமாகவும் இருக்கிறது.

இந்து மக்கள் மருத்துநீர் தேய்த்து ஸ்நானம் செய்வது என்பது முக்கியத்துவம் வாய்ந்தது மட்டுமல்ல, அனைவராலும் தவறாது பின்பற்றப்படவும் வேண்டியதுமாகும்.

புதுவருடம் பிறப்பதற்கு முன்னரும், வருடப் பிறப்புக்கு முன்னருமான விஷு புண்ணிய காலத்தில் கிழக்கு அல்லது வடக்கு திசையை பார்க்கும் வகையில் நின்றவாறு தலைக்கு மருத்துநீர் தேய்த்த பின்னர் பஞ்சாங்கத்தில் சொல்லப்பட்டவாறு தலையிலும் காலின் அடியிலும் குறிப்பிட்ட இலைகளை வைத்து ஸ்நானம் செய்தல் வேண்டும்.

ரிஷிகள், முனிவர்கள் மற்றும் சித்தர்களால் அறிமுகம் செய்யப்பட்ட மூலிகை மருத்துவ முறைகளுடன் தொடர்புள்ளதான இலைகளையும் மற்றும் திரவியங்களையும் சேர்த்து காய்ச்சிப் பெறும் இந்த மருத்துநீரானது மருத்துவக்குணம் கொண்டிருக்கிறது.

எனவே இதனை தலையிலும் உடலிலும் தேய்ப்பதால் தோலிலும் உடலின் உள்ளேயும் இருக்கும் வியாதிகள் நீங்கப் பெறுவதுடன், வாழ்வில் பீடித்துள்ள தோஷங்களும், கர்மவினைகளும் தெய்வீக ரீதியில் அகன்று விமோசனம் கிடைக்கக் கூடியதாக இருக்கிறது. பொதுவாக ஆலயங்களில்தான் மருத்துநீர் காய்ச்சப்படுவதால் ஒருவகையில் இது தெய்வீகத்தன்மை வாய்ந்ததாகவும் அமைந்திருக்கிறது என்று சொல்லலாம்.

ஸ்நானம் செய்த பின்னர், அனைவரும் பஞ்சாங்கத்தில் குறிப்பிட்டுள்ளவாறான நிறத்திலான புதிய வஸ்திரங்களை அணிந்து, முதலில் வீட்டுப் பூஜை அறையிலும் பின்னர் ஆலயங்களுக்கும் சென்று இறைவழிபாடு செய்தல் வேண்டும்.

தாய் தந்தையர், குரு, பெரியோர்கள் முதலானவர்களை வணங்கி அவர்களது ஆசியைப் பெறுவதும், ஏழ்மை நிலையிலுள்ளவர்களுக்கு பணம் அல்லது பொருட்களை வழங்கி தானதருமங்களைச் செய்வதும், குறிக்கப்பட்ட சுபநேரத்தில் கைவிசேடம் பரிமாறிக் கொள்வதும், உறவினர்கள் நண்பர்களது வீடுகளுக்குச் சென்று வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதும், விருந்துபகாரங்களில் கலந்து கொள்வதும், சுபதினம் மற்றும் சுபநேரம் பார்த்து புதுக்கருமங்களை தொடங்குவதும் புதுவருடப் பிறப்பின் பின்னரான சிறப்புப் பாரம்பரியங்களாகும்.

## இலங்கையின் இருஇன மக்களுக்கான முதன்மைப் பண்டிகை சித்திரைப் புத்தாண்டு



சித்திரைப் புதுவருடக் கொண்டாட்டத்தின் போது தமிழ், சிங்கள மக்கள் தனித்தனியான பாரம்பரிய கலாசார நடைமுறைகளைப் பின்பற்றி வருகிறார்கள். தமிழ் மக்களது கொண்டாட்ட செயற்பாடுகள் கூட இடத்துக்கிடம் மாறுபடுகிறது. அதாவது இலங்கையின் வடக்கு, கிழக்கு மற்றும் மலையகப் பகுதிகளிலும் அந்தந்தப் பிரதேசங்களின் கலாசார மரபுகளுக்கு அமைய வைபவ நிகழ்வுகளும் கொண்டாட்ட நடைமுறைகளும் வேறுபட்டு இருப்பதையும் காண முடிகிறது.

இந்த வகையில் வடபகுதியில் குறிப்பாக யாழ்குடாநாட்டை நோக்கினால், வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, மற்றும் நகரப் பகுதிகளில் சித்திரைப் புதுவருட கொண்டாட்ட நிகழ்வுகளும் சம்பிரதாய நடைமுறைகளும் ஒரே மாதிரியானதாகவே அமைந்திருக்கின்றன.

பேராசிரியர் அ. சண்முகதாஸ் தனது கட்டுரையொன்றில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

“சித்திரைப் புதுவருடத்தையொட்டிய தமிழ் மக்களது பாரம்பரிய நடைமுறைகளுள் ஒன்றாக குறிப்பாக யாழ்குடாநாட்டு மக்களிடையே நிலவும் வழக்கமாக போர்த்தேங்காய் அடித்தல் விளையாட்டு பெரும்பாலும் கோயில் வீதிகளில் நடைபெறுவதுண்டு. சித்திரைப் புதுவருடப் பிறப்புக்கு பல நாட்களுக்கு முன்பதாகவே போர்த் தேங்காய்களை சேகரிக்கும் முயற்சி தொடங்கி விடும். தேங்காய்களை சிதறடிப்பதற்காக பயன்படுத்தப்படும் காய் ‘கையான்’ என்று சொல்லப்படும்.

இந்த விளையாட்டிலே கைதேர்ந்தவர்களை ‘அடிகாரர்கள்’ என்று சொல்வார்கள். இரு பக்கத்து அடிகாரர்களும் எதிரெதிரே இருந்து கொள்வர். ஒருவர் உருட்டிவிடும் தேய்காயை மற்றவர் தன்னுடைய கையில் வைத்திருக்கும் கையானால் அடித்து நொருக்குவார். இப்போது இந்த விளையாட்டு வெகுவாகக் குறைந்து விட்ட போதிலும், யாழ்குடாநாட்டின் சில கிராமங்களிலும் நடைபெற்று வருவதை காணக் கூடியதாக இருக்கிறது.” இவ்வாறு பேராசிரியர் சண்முகதாஸ் எழுதியிருக்கிறார்.

யாழ்குடாநாட்டில் இன்னொரு பாரம்பரிய போட்டி நிகழ்வாக கோழிச்சண்டை அமைந்திருக்கிறது. சண்டை செய்வதற்கென்றே சேவல்கள் வளர்க்கப்பட்டு வந்தன. யாழ்குடாநாட்டு கிராமங்களில் ஏற்கனவே ஒருகாலத்தில் இந்த விளையாட்டு பாரம்பரியம் பெற்றுத் திகழ்ந்தது.

இப்போது வெகுவாகக் குறைந்து விட்டது என்றே சொல்ல வேண்டும். சித்திரைப் புதுவருடத்தின் போது கிளித்தட்டு, சடுகுடு, கோலாட்டம் போன்ற விளையாட்டுகளை ஏற்பாடு செய்து நடத்துவதுடன் ஊஞ்சலாட்டம், கும்மியடித்தல், கொக்கான் வெட்டுதல், பல்லாங்குழி, சொக்கட்டான் போன்ற பெண்கள் கலந்து கொள்ளும் விளையாட்டுக்களும் அக்காலத்தில் இடம்பெறுவதுண்டு.

அத்துடன் மாட்டுவண்டிச் சவாரி, துவிச்சக்கரவண்டி ஓட்டம், மரதன் ஓட்டம் போன்ற விளையாட்டுகளும் புதுவருட சிறப்பு நிகழ்வுகளாக நடைபெற்று வருகின்றன. பழையனவற்றையெல்லாம் மறந்து விட்டு புதிய எதிர்பார்ப்புகளையும், நம்பிக்கைகளையும் வைத்து வரவேற்கப்படும் சித்திரைப் புதுவருடமானது ஒவ்வொருவருக்கும் வாழ்வில் வசந்தம் வீசும் வகையில் நல்ல எதிர்காலத்தை தோற்றுவிப்பதாக அமைய இறையருளை வேண்டிப் பிரார்த்திப்போமாக!

அ. கனகசூரியர்

### சித்திரைப் புத்தாண்டு - 2024
#### சுபநேரங்கள் – (வாக்கிய பஞ்சாங்கம்)

- ★ புது வருடப் பிறப்பு– 13.04.2024 சனிக்கிழமை இரவு 08 மணி 15 நிமிடத்தில் குரோதி வருடம் பிறக்கின்றது.
- ★ விஷூ புண்ணியகாலம் _மருத்து நீர் வைக்கும் நேரம் 13.04.2024 சனிக்கிழமை பிற்பகல் 04.15 முதல் நள்ளிரவு 12.15 வரை
  தலை – ஆலிலை, கால் புங்கை இலை, திசை – வடக்கு
- ★ கைவிஷேடம் பரிமாறும் நேரம்_ 14ஆம் திகதி காலை 07.57 முதல் காலை 09.56 வரை
  14ஆம் திகதி காலை 09.59 முதல் நண்பகல் 12.01 வரை
- ★ அணியும் ஆபரணங்கள்_ நீலக்கல் பதித்த அல்லது வைரக்கல் பதித்த ஆபரணங்கள்.
- ★ அணியும் ஆடைகள்_ கபிலம் அல்லது வெள்ளை நிறம் கொண்டஆடைகள்
- ★ சங்கிரமதோஷ நட்சத்திரங்கள் மிருகசீரிடம்,திருவாதிரை, புனர்புசம் (01ஆம், 02ஆம் பாதங்கள்), சித்திரை, விசாகம் (04 ஆம் பாதம்), அனுஷம், கேட்டை, அவிட்டம்
- ★ வியாபாரம், புதுக் கணக்கு ஆரம்பித்தல்_15.04.2024 திங்கட்கிழமை காலை 09.08 தொடக்கம் காலை 09.51 வரை. அதே நாள் காலை 09.55 தொடக்கம் காலை 10.31 வரை.

# தமிழர்களுக்குரிய புதிய ஆண்டு பிறப்பதை குறிக்கும் பண்டிகை



சித்திரைப் புத்தாண்டை தமிழ்ப் புத்தாண்டு என்றும் கூறுவர். அதாவது தமிழர்களுக்குரிய புதிய ஆண்டு பிறப்பதைக் கொண்டாடும் விழா இதுவாகும். இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளிலும், புலம்பெயர் நாடுகளிலும் வாழும் தமிழ் மக்கள் சித்திரை மாதத்தின் முதல் நாளை சித்திரைப் புத்தாண்டாகக் கொண்டாடுகின்றனர்.

இலங்கையில் இதனை தமிழ் சிங்களப் புத்தாண்டு என்றும் குறிப்பிடுவர். ஏனெனில் தமிழர்களுக்கும், சிங்களவர்களுக்குமான பொதுப்பண்டிகையாக இப்புத்தாண்டு கொண்டாடப்படுகின்றது.

ஒரு தமிழ் ஆண்டு என்பது வானியல் ரீதியாகவும், அறிவியல் ரீதியாகவும் அளவிடப்பட்ட காலத்தைக் கொண்ட காலப்பகுதியாகும். பூமி, சூரியனை ஒரு தடவை சுற்றி வருவதற்கு 365 நாட்கள், 6 மணி, 11 நிமிடம், 48 செக்கன்கள் ஆகின்றது. இதுவே தமிழ் வருடத்தினதும் கால அளவாகும்.

சூரியன் மேச இராசியில் பிரவேசிக்கும் போது தொடங்கும் ஆண்டு, மீன இராசியிலிருந்து வெளியேறும்போது முடிவடைகின்றது. ஆகவே தமிழ் வருடத்தின் கால அளவு எப்போதும் சீரானதாகவே இருக்கிறது. இதன் அடிப்படையிலேயே தமிழ்ப் புத்தாண்டு பிறக்கும் நாள், நேரம் கணிக்கப்படுகிறது.

ஆங்கில கிரெகொரிய நாட்காட்டியில் பெரும்பாலும் ஏப்ரல் 14 ஆம் திகதி தொடங்கும் தமிழ் ஆண்டு சில ஆண்டுகளில் ஏப்ரல் 13 அல்லது 15 ஆம் திகதிகளில் தொடங்கும். இதற்குக் காரணம் ஆங்கில (கிரகோரியன்) நாட்காட்டி ஒரே சீரானதாக இல்லை என்பதேயாகும்.

நடைமுறைக்கு ஏற்றதாக தமிழ்ப் புத்தாண்டு ஒரு குறிப்பிட்ட நாளில் கொண்டாடப்பட்டாலும், தமிழ்ப் பஞ்சாங்கங்களில் அந்த நாளில் ஆண்டு பிறக்கும் சரியான நேரம் குறிப்பிடப்பட்டிருக்கும். அதன் அடிப்படையிலேயே ஆண்டுக்காலம் கணிக்கப்படுகிறது.

தமிழரிடையே சித்திரைப் புத்தாண்டு என்ற பண்டிகை எப்போதிருந்து வழக்கில் இருந்ததென்பதற்கான சரியான ஆதாரங்கள் இல்லை. ஆனால் இப்புத்தாண்டு மிகத் தொன்மையானதாகக் கருதப்படுகின்றது.

தமிழ் நாட்காட்டியானது இராசிச் சக்கரத்தை காலக்கணிப்பில் பயன்படுத்தும் ஒரு சூரிய நாட்காட்டி என்பதால், பன்னிரு இராசிகளில் முதல் இராசியான மேழத்தில் சூரியன் நுழையும் சித்திரையே முதல் மாதமாகக் கருதப்பட்டதாகச் சொல்லப்படுகின்றது.

சங்க இலக்கியமான நெடுநல்வாடையில் மேழமே முதல் இராசி என்ற குறிப்பு காணப்படுவதால், அதை மேலதிக சான்றாகக் கொள்வர். எனினும், பத்தாம் நூற்றாண்டுக்குப் பிந்திய அகத்தியர் பன்னீராயிரம், பதினைந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த புட்பவிதி முதலான நூல்கள் தெளிவாக சித்திரை முதல் மாதம் என்று சொல்கின்றன.

பங்குனியின் இறுதிநாட்களில் அல்லது சித்திரை முதல் நாளில்தான் வழக்கமாக வேங்கை மரம் பூக்கும். மலைபடுகடாம் ‘தலைநாள் பூத்த பொன் இணர் வேங்கை’ என்றும், பழமொழி நானூறு ‘கணிவேங்கை நன்னாளே நாடி மலர்தலால்’ என்றும் பாடுவதால் இளவேனில் தொடக்கமான சித்திரையே அக்காலத்தில் தலைநாளாக மிளிர்ந்தது என்றும் சொல்கிறார்கள்.

இலங்கையில் தமிழ் மக்களும் சிங்கள மக்களும் சித்திரை ஒன்றையே முதன்மையான புத்தாண்டாகக் கொண்டாடுகிறார்கள். இலங்கை தம்பதெனியா இராச்சிய மன்னனாகவிருந்த பராக்கிரமபாகுவின் அரசகுருவான தேனுவரைப்பெருமாள் எழுதிய ‘சரசோதி மாலை’ எனும் நூலில் வருடப்பிறப்பின் போது செய்ய வேண்டிய சடங்குகள் விபரிக்கப்பட்டுள்ளன.

மேலும், திருக்கோணேஸ்வரம், 1622 ஆம் ஆண்டு சித்திரை மாதம், தமிழர் புத்தாண்டு அன்று கொள்ளையிடப்பட்டதாக போர்த்துக்கேயர் பற்றிய குறிப்புகள் சொல்கின்றன.

சித்திரைப் புத்தாண்டில் பரிமாறப்படும் மரபார்ந்த சிற்றுண்டிகள் சிறப்பு வாய்ந்தவையாகும். இலங்கையில் தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்குமிடையில் சித்திரைப் புத்தாண்டுக் கொண்டாட்டங்களில் பல ஒற்றுமையான அம்சங்கள் உள்ளன. புத்தாண்டுப் பட்சணங்களிலும் ஒற்றுமை உள்ளது.

புத்தாண்டுக்கு முந்திய நாட்களை வீடு வாசலை சுத்தம் செய்வதிலும், அலங்கரிப்பதிலும் தமிழர் செலவழிப்பர். மா, பலா, வாழை ஆகிய முக்கனிகள், வெற்றிலை, பாக்கு, நகைகள், நெல் முதலான மங்கலப் பொருட்கள் வைத்த தட்டை வழிபாட்டறையில் வைத்து, அதை புத்தாண்டு அதிகாலையில் காண்பது புனிதமாகக் கருதப்படுகின்றது. ஆனாலும் அந்தப் பாரம்பரியம் பெரும்பாலும் வழக்கொழிந்து விட்டதென்றே கூற வேண்டும்.

புத்தாண்டு தினத்தன்று அதிகாலையில் நீராடி கோலமிட்டு, புத்தாடை அணிந்து, கோயிலுக்குச் சென்று வழிபடுவர். மாலை வேளையில் உறவினர் வீடுகளுக்குச் செல்வதும், பலகாரங்களை பகிர்ந்துண்பதும் நிகழும். வாழ்க்கை என்றாலே கசப்பும் இனிப்பும் கலந்தது தான். இப்புத்தாண்டிலும் கசப்பும் இனிப்பும் இருக்கும் என்பதன் அடையாளமாக வேப்பம்பூ பச்சடி, மாங்காய் பச்சடி என்பவற்றை உண்பது குறிப்பிடத்தக்க மரபாகும்.






தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2024 ஏப்ரல் 12 வெள்ளிக்கிழமை
# தினகரன்
THINAKARAN
தினகரன்



**தொழுகை நேரம்**

சுபஹ் - 04.50
லுஹர் - 12.14
அஸர் - 03.16
மஃரிப் - 06.19
இஷா - 07.30

**இன்றைய சுபதினம்**

சோபகிருது வருடம் பங்குனி 30

ராகுகாலம் : காலை : 10.36 - 12.06வரை
சுபநேரம் : பகல் : 6.06 - 7.36வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி

பூர்வீக வாழ்விடங்கள் என கூறுபவர்கள்

# பொன்னாவெளி கிராமத்தில் குடியேற முன்வந்தால் ஏற்பாடு செய்ய தயார்

*அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு*



பொன்னாவெளி கிராமத்தை பூர்வீக கிராமம் என்று கூறுகின்றவர்கள், அங்கு குடியேறுவதற்கு முன்வருவார்களாயின், அவர்களுக்கான வீட்டுத் திட்டத்தை ஏற்பாடு செய்து வழங்குவதற்கு தயாராக இருப்பதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். செயலகத்தில் நேற்று (11) நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர்,

பொன்னாவெளி பிரதேசத்திலிருந்து தற்போதுதான் மக்கள் வெளியேறியதாக ஒரு பொய்யான கருத்து வெளியிடப்பட்டு வருகின்றது. ஆனால் அதில் உண்மை கிடையாது. மக்களை அங்கு வாழ விடாது எவரும் தடுக்கவில்லை.

ஆனால் அங்கு வாழும் சூழலுக்கேற்ற வகையிலான குடிநீர் முழுமையாக அற்றுவிட்டது. நிலப்பரப்புகள் எல்லாம் உவர் நிலமாக மாறிவிட்டது. அதனால் எதுவிதமான பயிர் செய்கைகளையும் மேற்கொள்ள முடியாத நிலை உருவாகியது. இதனால் யுத்தம் நிறைவுக்கு வருவதற்கு முன்னரே இப்பகுதியில் மக்கள் வாழ்ந்ததாக தெரியவில்லை.

அதுமட்டுமல்லாது சுண்ணக்கல் அகழ்வதற்கான திட்டம் உடனடியாக முன்னெடுக்கப்படும் விடயம் ஒன்றல்ல. அதுமட்டுமல்லாது மக்களது கருத்துக்களும் அதில் உள்வாங்கப்படும். அதேநேரம் குறித்த பகுதியை ஆய்வு செய்தால்தான் அங்கு குறித்த செயற்பாட்டை முன்னெடுக்கலாமா அல்லது கைவிட வேண்டுமா? என்ற நிலைக்கு வரமுடியும்.

குறிப்பாக ஆய்வுகளின் பெறுபேறுகள் சென்றபோதும் திட்டமிட்டவகையில் சில விசமிகள் அதை தடுக்கின்றனர். இதே நேரம் ஆய்வு செய்தால் தான் ஒரு நிலைப்பாட்டை எட்டமுடியும். மாறாக ஆய்வின் முடிவுகள் பாதகமாக வருமாயின் அதை தடுப்பதற்கும் பின்னிற்கமாட்டேன்.

04

**அறிவித்தல்**

**திருகோணமலை மாவட்ட நீதிமன்றில்**

**வழக்கு இல:**
TR/194/2024 முதல்
TR/208/2024 வரை

இ. சிவநாதன்
4ம் வட்டாரம்
வாழையூற்று, இறக்கண்டி.
திருகோணமலை.

**மனுதாரர்**

மேற்குறித்த வழக்கானது மேலே பெயர் குறிக்கப்பட்ட மனுதாரரினால் மனுவின் ஆதன அட்டவணையில் குறிப்பிடப்படும் கணபதி முத்து காசிநாதர் தர்ம சொத்து உரித்தாக்கல் / உடமையாக்கல் (Vesting Order) கட்டளையை நிவாரணமாகக் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்குறிப்பிடப்பட்ட வழக்கில் மனுவில் கோரப்பட்ட நிவாரணங்கள் தொடர்பில் ஏதேனும் ஆட்சேபனைகள் இருப்பின் எதிர்வரும் 15.04.2024ம் திகதி காலை 9.00 மணிக்கு இம்மன்றில் தோன்றி கோப்பிடுமாறு அறிவித்தல் தரப்படுகின்றது.

**"மன்றின் கட்டளைப்படி"**

**திகதி: 12.04.2024**

**பதிவாளர்**
**மாவட்ட நீதிமன்றம்**
**திருகோணமலை**

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board

புதன்
2024.04.10

உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk

NLB

**மஹஜன சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம் 5446
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 29,047,880.00
ஆங்கில எழுத்து U | வெற்றி இலக்கங்கள் 7 9 1 5 5 8
ரூ.1,000,000/- அதிர்ஷ்ட இலக்கம் 362688
இலட்சாதிபதி அதிர்ஷ்ட இலக்கம் 30378
Motorbike Winning Number 2890299 1996823 1143885
புத்தாண்டு போனஸ் இலக்கம்
Gold Coin Winning Numbers 0755942 0358063 2259087 2828604 1921484 1612571 2641636

**அத சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம் 021
ஆங்கில எழுத்து U
வெற்றி இலக்கங்கள் 1 5 5 8

**கொவிசெத**
சீட்டிழுப்பு இலக்கம் 3688
சீட்டிழுப்பு திகதி 2024.04.10
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 73,598,685.36
ஆங்கில எழுத்து C | வெற்றி இலக்கங்கள் 18 49 56 69 | விசேட எழுத்து C
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 24527

**Mega POWER**
சீட்டிழுப்பு இலக்கம் 1794
2024.04.10
35606
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 430,105,236.00
ஆங்கில எழுத்து K | சுப்பர் இலக்கம் 07 | வெற்றி இலக்கங்கள் 17 34 53 64
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

**VIP**
திகதி 2024.04.10
சீட்டிழுப்பு இலக்கம் 0272
ஆங்கில எழுத்து E | வெற்றி இலக்கங்கள் 4 3 4 1 0 1
L7 எழுத்து E
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 28,359,920.88

**ராசி சுப பலன்**
திகதி 2024.04.10
சீட்டிழுப்பு இலக்கம் 755
செவ்வாய் அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 3,232,997.16
வெற்றி இலக்கினம் கடகம் | வெற்றி இலக்கங்கள் 15 35 37 45
தனயோக இலக்கம் 24721
நாளுக்கான விதி எண் 06

**தன நிதானய**
சீட்டிழுப்பு இலக்கம் 1476
2024.04.10
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 88,562,863.60
ஆங்கில எழுத்து X | வெற்றி இலக்கங்கள் 46 49 66 78 | விசேட எழுத்து X
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 62975

**பெயர் மாற்றம்**

கொழும்பு மாவட்டம், திம்பிரிகஸ்யாய பிரதேச செயலாளர் பிரிவில் இல. 71, ஜாவத்த வீதி, கொழும்பு-05 எனும் முகவரியில் வசிக்கும் ஜயசந்திரன் சக்முகம் எனும் பெயரில் அறியப்படும் நான், இன்று முதல் ஜே. குறோசட் சண்முகம் எனும் பெயரில் அழைக்கப்படுவதாக இலங்கை குடியரசிற்கும், பொதுமக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

**இப்படிக்கு**
**ஜே. குறோசட் சண்முகம்.**



சென்னையில் ஹலால் இந்தியா பிரைவேட் லிமிடட் ஏற்பாடு செய்த இப்தார் நிகழ்வில் பிரதம அதிதியாக சென்னைக்கான இலங்கையின் பிரதி உயர்ஸ்தானிகர் கலாநிதி டி.வெங்கடேஷ்வரன் கலந்துகொண்டார். இந் நிகழ்வில் மலேசியாவின் கவுன்சில் ஜெனரல் கே.சரவணகுமார், ரஷ்யாவின் பிரதி கவுன்ஸிலர் அலெக்சாண்டர் டோடோனோவ், இந்தோனேசிய வர்த்தக மேம்பாட்டு நிலைய பணிப்பாளர் நுக்ரோஹோ பிரியோ பிரதோமோ ஆகியோரும் கலந்துகொண்டனர்.

**இறுதி விருப்பாவணம் இல்லாத ஆதனத்திற்காக உரிமைத்துவத்தை முன்வைக்குமாறு விடுக்கும் அறிவித்தல்**

**1998 இல. 21 எனும் உரிமைத்துவம் பதிவு செய்யும் சட்டம் 55வது அத்தியாயம்**

கொழும்பு மாவட்டத்தின் ஹோமாகம பிரதேச செயலாளர் பிரிவில் ஹோமாகம கிராமத்தில் கெடஸ்தர் வரைபடம் இலக்கம் 520016 வலய இலக்கம் 01 துண்டு இலக்கம் 0038 எனும் காணிகளுக்குச் சொந்தக்காரரான இல. 49/75, சந்துன் உயன, மாபுல்கொட, பன்னிபிட்டிய (முகவரி) எனும் முகவரியில் வசித்த திஸ்னா கல்யாணி ரத்நாயக்க (முழுப்பெயர்) என்பவர் 2024-02-02ஆம் திகதி இறந்து விட்டதால், அவரின் வாரிசுகள் 2024-05-12ஆம் திகதிக்கு முன் இல. 06, முதலாவது ஒழுங்கை, புகையிரத நிலைய வீதி, ஹோமாகம முகவரியில் அமைந்துள்ள காணி உரிமைத்துவ நிருணய பிரதேச அலுவலகத்திற்கு முன் தோன்ற வேண்டும்.

**ஆணையாளர் நாயகம், காணி உரிமைத்துவ நிருணயத் திணைக்களம்.**

# INVITATION FOR BIDS (IFB)

## DEPARTMENT OF LOCAL GOVERNMENT, NORTHERN PROVINCE

## VALIKAMAM SOUTH WEST PRADESHIYA SABHA, MANIPAY

## LOCAL DEVELOPMENT SUPPORT PROJECT

1. The Democratic Socialist Republic of Sri Lanka has received **Grant** from the **European Union** towards the cost of **Local Development Support Project (LDSP),** and intends to apply part of the proceeds of this credit to payments under the Contract for the works stated in the Table below.
2. The **Chairman, Local Authority Procurement Committee, Local Development Support Project (LDSP)** on behalf of the **Valikamam South West Pradeshiya Sabha, Manipay** now invites sealed bids from eligible and qualified bidders for the works stated in the Table below.

| No. | Contract Name | Contract Name | Employer's Estimated Cost (Rs. Mn) | Required CIDA Grade & Specialty | Contract Period (Days) | Bid Validity Period | Bid Security Amount (Rs) | Bid Security Validity Period |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | LDSP/NP/JAF /VSWPS/2024 / PT-3/03 | Reconstruction of Internal Road at Kallundai Solid Waste Management Centre | 8.22 | C7 and above Highway | 90 | 77 Days | 82,200.00 | 16-Aug-2024 |
| 02 | LDSP/NP/JAF /VSWPS/2024 / PT-2/04 | Construction of Children park at Koolavady - Balance work | 18.86 | C6 and above Building Construction | 120 | 77 Days | 188,600.00 | 16-Aug-2024 |

3. Bidding will be conducted through **National Competitive Bidding (NCB)** Procedure.
4. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered in the specialty mentioned in Schedule for grade mentioned in the table above with the Construction Industry Development Authority (CIDA).
5. Qualification requirements to qualify for contract award are included in Section 4 (Qualification Information) and Section 5 (Bidding Data and Contract Data) in the Bidding Document.
6. Interested bidders may obtain further information from **Secretary, Valikamam South West Pradeshiya Sabha, Jaffna Road, Manipay. (T.P No: 021 225 5381 , Fax No: 021 225 6643)** and inspect the bidding documents at **Valikamam South West Pradeshiya Sabha, Jaffna Road, Manipay** from **12-Apr-2024** until **02-May-2024** between **09:00 Hrs and 15:00 Hrs** on normal working days.
7. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Secretary, Valikamam South West Pradeshiya Sabha, Jaffna Road, Manipay** from **12 - Apr-2024** until **02-May-2024** between **09:00 Hrs and 15:00 Hrs** on normal working days upon payment of a non-refundable fee of **Rs.3,500.00**. The method of payment will be **by cash.**
8. Bids (Original and Copy)shall be delivered to **Chairman, Local Authority Procurement Committee, Valikamam South West Pradeshiya Sabha, Jaffna Road, Manipay, Jaffna** at or before **10:30 Hrs** on **03-May-2024.** Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.
9. All bids shall be accompanied by a **Bid Security** as stated in the Table above.
10. The Pre-Bid Meeting will be held at **Valikamam South West Pradeshiya Sabha, Jaffna Road, Manipay, Jaffna** on 22nd Apr- 2024 at 11:00 Hrs. Interested Bidders may participate in this meeting at their own expenses.

**Chairman,**
**Local Authority Procurement Committee (LAPC),**
**Valikamam South West Pradeshiya Sabha,**
**Jaffna Road, Manipay, Jaffna.**
**12.04.2024**

**இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு**
**போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

# பதவி வெற்றிடம்

வீதி அபிவிருத்தி அதிகாரசபையில் பின்வரும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. மேலதிக பணிப்பாளர் நாயகம் (கட்டுமானம், சொத்து செயல்பாடுகள் மற்றும் பராமரிப்பு) HM 2-2
2. மேலதிக பணிப்பாளர் நாயகம் (நெடுஞ்சாலை முகாமைத்துவம் மற்றும் செயற்திட்டங்கள்) HM 2-2
3. பிரதிப் பணிப்பாளர் நாயகம் (தகவல் அமைப்புகள் மற்றும் பிணைய முகாமைத்துவம்) HM 2-1

**HM 2-2 சம்பள அளவு - ரூ: 93,020 - 12 X 2,700 - 125,420/-**
**HM 2-1 சம்பள அளவு - ரூ: 91,645 - 12 X 2,700 - 124,045/-**

இப்பதவிகள் தொடர்பான ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட தகுதிகள் மற்றும் விண்ணப்பங்கள் **www.rda.gov.lk / www.mohsl.gov.lk** இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்யப்பட வேண்டும்.

முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள், கல்வி, தொழில்முறை தகுதிகள் மற்றும் அனுபவம் தொடர்பான சான்றிதழ்களின் நகல்களுடன் விண்ணப்பம் இடப்பட்ட கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியினைத் தெளிவாக குறிப்பிட்டு 2024.04.26 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியவாறு மேலதிக பணிப்பாளர் நாயகம் (மனித வளங்கள்) வீதி அபிவிருத்தி அதிகாரசபை, "மக நெகும மஹ மெதுர", 4ஆம் மாடி, இல.216, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, கொஸ்வத்தை, பத்தரமுல்லை எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாக அனுப்பி வைக்க வேண்டும்.

மேலதிக தகவல்களுக்கு : மேலதிக பணிப்பாளர் நாயகம் (மனித வளங்கள்) அலுவலகம்,
வீதி அபிவிருத்தி அதிகாரசபை,
011 2046393 / 011 2046200.

SELACINE

தலைவர்,
வீதி அபிவிருத்தி அதிகாரசபை.

**INVITATION FOR BIDS (IFB)**

**NALLUR PRADESHIYA SABHA**

**LOCAL DEVELOPMENT SUPPORT PROJECT**

1. The Democratic Socialist Republic of Sri Lanka has received a **loan & grant** from the **World Bank & European Union** towards the cost of **Local Development Support Project**, and intends to apply part of the proceeds of this credit to payments under the Contract for the work stated in the Table below.
2. The **Chairman, Local Authority Procurement Committee** on behalf of the **Nallur Pradeshiya Sabha** now invites sealed bids from eligible and qualified bidders for the work stated in the Table below.

| No | Contract No | Contract Name | Employer's Estimated Cost (Rs. Mn) | CIDA Grade & Specialty | Contract Period (Days) | Bid Validity Period | Bid Security Validity Period |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | LDSP/NP/JAF/NPS /2024/PT3/03 | Landscaping and Improvement of Sanitary Facilities of Kokkuvil Market, Nallur | 8.92 | C 7 or above | 84 | 17-July-2024 | 14-Aug-2024 |
| 02 | LDSP/NP/JAF/NPS /2024/BT4/03 | Improvement of Drainage at Kulapiddy Lane, Kokkuvil | 6.1 | C 7 or above | 84 | 17-July-2024 | 14-Aug-2024 |

3. Bidding will be conducted through **National Competitive Bidding (NCB)** Procedure.
4. Interested bidders may obtain further information from **Secretary, Nallur Pradeshiya Sabha, 14/5 Karuvappulam Road, Kokkuvil (T.P No: 0212222700, Fax No: 0212220138)** and inspect the bidding documents at **Nallur Pradeshiya Sabha, 14/5 Karuvappulam Road, Kokkuvil** from **12-April-2024** until **01- May -2024** between **09:00 Hrs** to **15:00 Hrs** on normal working days.
5. Qualification requirements include to qualify for contract award are included in Section 4 (Qualification Information) and Section 5 (Schedule) in the Bidding Document.
6. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered in the specialty mentioned in Schedule for grade mentioned in the table above with the Construction Industry Development Authority (CIDA).
7. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Secretary, Nallur Pradeshiya Sabha, 14/5 Karuvappulam Road, Kokkuvil** from **12-April-2024** until **01- May -2024** between **09:00 Hrs** to **15:00 Hrs** on normal working days and upon payment of a non-refundable fee of **Rs. 3,000.00**. The method of payment will be **by cash.**
8. Bids must be delivered in Original and Duplicate to **The Chairman, Local Authority Procurement Committee (LAPC), Nallur Pradeshiya Sabha, 14/5 Karuvapulam Road Kokkuvil, Jaffna** on or before **10:00** Hrs on **02-May-2024.** Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend. All Bids shall be accompanied by a **Bid Security** as stated in the Table above
9. The pre bid meeting will be held on **26-April-2024** at **10:00hrs** at Nallur Pradeshiya sabha. Interested Bidders may participate in this meeting their own expenses.

**Chairman**
**Local Authority Procurement Committee (LAPC)**
**Nallur Pradeshiya Sabha,14/5 Karuvapulam Road Kokkuvil, Jaffna**
**12-April-2024**

# தமிழ், சிங்கள புத்தாண்டு சுபீட்சம் நிறைந்தாக அமைய வாழ்த்துகள்



பிறக்கும் தமிழ், சிங்கள புத்தாண்டு இலங்கை வாழ் மக்களுக்கு மகிழ்ச்சியும் சுபீட்சமும் நிறைந்ததாக அமைய வேண்டுமென, ஜனாதிபதியால் சமகால பொருளாதார நெருக்கடிகளுக்கு தொழிற்சங்க ரீதியாக தீர்வு காண நியமிக்கப்பட்ட மூவர் கொண்ட விசேட குழு உறுப்பினர் சுப்பையா ஆனந்தகுமார் தெரிவித்துள்ளார்.

சித்திரைப் புத்தாண்டு தொடர்பாக விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அச்செய்தியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"நாட்டின் நல்லிணக்கம், சுகவாழ்வை வலுவூட்டும் மற்றும் பொருளாதார ரீதியாக நாடு சுபீட்சத்தை நோக்கி நகரும் ஆண்டாக இப்புத்தாண்டு அமைய வேண்டும். இப்புத்தாண்டில் இனங்களுக்கிடையில் நல்லிணக்கம் மற்றும் புரிந்துணர்வு ஏற்பட வழிகோல வேண்டும்.

நாடு எதிர்கொண்ட உணவு மற்றும் பொருளாதார நெருக்கடி நிலைமைகளுக்கு மத்தியில் புத்தாண்டின் எதிர்பார்ப்பை நிறைவேற்றியுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனைவரும் இத்தருணத்தில் நன்றி கூற வேண்டும்" என்றார்.

# வளமான நாட்டை கட்டியழுப்ப புத்தாண்டில் உறுதி பூணுவோம்

## அமைச்சர் ஜீவன் தொண்டமான்



"புதிய சாதனை படைத்து, புதிய வெற்றி பெற்று, தடைகளை தகர்த்து, வளமான நாட்டை கட்டியழுப்ப இப்புத்தாண்டில் அனைவரும் உறுதி பூணுவோம்" என, இ.தொ.கா. பொதுச் செயலாளரும் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

சித்திரை புத்தாண்டை முன்னிட்டு அமைச்சர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளதாவது,

" சித்திரை புத்தாண்டை கொண்டாடும் அனைத்து மக்களுக்கும் வாழ்த்து தெரிவித்துக்கொள்கிறேன். மக்கள் வாழ்வில் புதிய எழுச்சியையும் வளர்ச்சியையும் வழங்கும் வருடமாக இவ்வருடம் அமையட்டும்.


இலங்கையில் இன நல்லிணக்கத்துக்கு சிறந்த அடையாளமாக சித்திரை புத்தாண்டு திகழ்கின்றது. அனைத்து இன மக்களும் இக்காலகட்டத்தில் ஐக்கியத்துடன் செயற்படுவார்கள். இந்நிலைமை நீடிக்க வேண்டும்" என்றார்.

# இன்றைய பலன்கள் (12.04.2024)




கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம் :** சிறு சிறு தொழில்கள் உண்டாகும். இருப்பினும் உங்கள் முயற்சியால் நல்ல மாற்றத்தை நோக்கி செல்வீர்கள்.



**ரிஷபம் :** கொடுக்கல் வாங்கல்களில் கவனம் தேவை. சிலருக்கு எதிர்பாராத தன லாபம் வந்து சேரும். நகைச் சுவை சம்பந்தப்பட்ட பணியில் இருப்பவர்கள் திடீர் புகழை அடைவார்கள்.



**மிதுனம் :** கொஞ்சம் தொல்லைகளையும் பின்னர் நன்மைகளையும் பெறுவீர்கள். உத்தியோகத்தில் இடம் மாற்றமோ பதவி மாற்றமோ வந்து சேரும் .



**கடகம் :** இதுவரை உங்களுக்கு இருந்து வந்த எதிரிகளின் தொலை விலகும். உங்கள் பொருளாதார முன்னேற்றத்தில் இருந்த தடைகள் அகலும்.



**சிம்மம் :** அதிக தொல்லைகள் இல்லாத வாரமாக இந்த வாரம் அமையும். குடும்பத்தில் குழப்பங்கள் குறைவதற்கான வழி பிறக்கும். சில தைரியமான முடிவுகளை எடுப்பீர்கள்.



**கன்னி :** உங்களுக்கு பெரும்பாலும் நன்மைகளை ஏற்படும் வாரம் இது. இதுநால் வரைக்கும் உங்களுக்கு இருந்த வெளிநாட்டு பயணத்தடை விலகும்.




**துலாம் :** நன்மைகள் கூடுதலாகவும் சிரமங்கள் குறைவாகவும் இருக்கக்கூடிய வாரம் இது. சிரமங்களையும் கூட திறம்பட சமாளிப்பீர்கள்.




**விருச்சிகம் :** அரசு மற்றும் அரசு சார்ந்த பணி செய்பவர்கள் நல்ல மாற்றங்களை சந்திக்க போகிறீர்கள். காவல் துறையில் பணியாற்றும் நபர்களுக்கு சாகசங்கள் நிறைந்த வேலை வந்து சேரலாம்.



**தனுசு :** உங்களுக்கு பலவிதமான நன்மைகள் ஏற்படும் மகத்தான வாரம் இது. என்றாலும் பூமி சம்பந்தப்பட்ட விஷயங்களிலும் ஆரோக்கியத்திலும் கூடுதல் கவனம் தேவை.



**மகரம் :** சொந்தத் தொழில் செய்பவர்களுக்கு ஏற்றம் மிகு வாரம் இது. தங்க நகை வியாபாரம் செய்பவர்களுக்கு அதை வாங்கி விற்பவர்களுக்கும் அனுகூலமான காலமாகும்.



**கும்பம் :** உங்கள் செயல்கள் சிலவற்றில் தடுமாற்றத்தை சந்திப்பீர்கள். பிள்ளைகளின் கல்வி மற்றும் குடும்ப சூழ்நிலை மன சஞ்சலத்தை ஏற்படுத்தும்.



**மீனம் :** வியாபாரம் அனைத்தும் நன்மையாக மாறும். உடல் நலனில் சிறுசிறு பாதிப்புகள் தென்பட்டாலும் அது பற்றி கவலைப்பட வேண்டாம்.



## சைபர் தாக்குதலுக்கு இலக்கான

# கல்வி அமைச்சு இணையத்தளம் இயல்பு நிலைக்கு திரும்பியது

***லோரன்ஸ் செல்வநாயகம்***

சைபர் தாக்குதலுக்கு இலக்கான கல்வி அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளம் தற்போது இயல்பு நிலைக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாக இலங்கை கணினி அவசர பரிசோதனை மன்றம் தெரிவித்துள்ளது.

அந்த மன்றத்தின் பிரதம தகவல் பாதுகாப்பு அதிகாரி நிரோஷ் ஆனந்த அது தொடர்பில் நேற்று தெரிவிக்கையில்,

அதனை சீர்திருத்தும் நடவடிக்கைகள் நேற்று நிறைவு பெற்றதாகவும் அதேவேளை சைபர் தாக்குதலினால் பாதிப்புக்கு இலக்கான அனைத்து தரவுகளும் மீள பெறப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். சைபர் தாக்குதலை மேற்கொண்ட நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அந்த சைபர் தாக்குதல் தொடர்பான விசாரணை அறிக்கை கல்வியமைச்சுக்கு ஒப்படைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மேற்படி சைபர் தாக்குதல் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ள நிலையில் நேற்றுவரை கல்வியமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளம் செயற்படவில்லை என்று குறிப்பிட்டுள்ள அவர், அவ்வாறு சைபர் தாக்குதல் நடத்தியவர்கள் உள்நாட்டில் இணையத்தள தொடர்புகளை கொண்டவர்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## தேசிய பூங்காக்களை பார்வையிட...

அதிகரித்துள்ளதாக வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களம் தெரிவித்துள்ளது. இந்த வருடத்தின் கடந்த சில மாதங்களில் குறிப்பாக ஜனவரி மற்றும் மார்ச் மாதங்களுக்கிடையில் 200,000க்கும் அதிகமான வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் தேசிய பூங்காக்களுக்கு வருகை தந்துள்ளதாகவும் அத்திணைக்களம் தெரிவித்துள்ளது.

அவர்களில் 100,000க்கும் மேற்பட்ட வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் யால தேசிய பூங்காவை பார்வையிட வந்துள்ளனர். வஸ்கமுவ, குமண, வில்பத்து, புத்தல, உடவளவை, மின்னேரியா, கவுடுல்ல போன்ற தேசிய பூங்காக்களுக்கு அதிகளவான வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர். தேசிய பூங்காக்களுக்கு வருகை தந்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் மூலம் கடந்த 03 மாதங்களில் 200 கோடி ரூபாவுக்கும் அதிகமான வருமானம் கிடைத்துள்ளது.

## கம்பனிகள் அலட்சியப் போக்கு;...

ஆராய்ந்தது. இக்குழுவின் பரிந்துரைக்கமைய கம்பனிகளுக்கு எதிராக தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட இ.தொ.கா. இன்று அல்லது நாளை தீர்மானம் எடுக்குமென்றும் தெரிவித்தார்.

இ.தொ.கா. எதற்காக 2,000 ரூபா, 3,000 ரூபா சம்பள உயர்வு கேட்காமல் வெறுமனே 1,700 ரூபா சம்பள உயர்வு கோரி கோரிக்கை முன்வைத்துள்ளதென சிலருடைய கேள்விகளாக உள்ளது.

சம்பள பேச்சுவார்த்தை எவ்வாறு முன்னெடுப்பது என்று சிலருக்கு தெரியாது. கடையில் போய் அரிசி, பருப்பு வாங்குவது போன்று சம்பளப் பேச்சுவார்த்தையை நடத்த முடியாது. ஒரு சம்பள உயர்வு பற்றி பேசப்படும் போது, இன்று காணப்படும் உற்பத்தி செலவு,வெளிநாடுகளில் தேயிலையின் சந்தை விலை, அடுத்த 02 வருடங்களுக்கான நாட்டின் காணப்படும் அமெரிக்க டொலரின் பெறுமதி, வாழ்வாதார செலவு என்பவற்றை ஒப்பிட்டு ஆய்வு செய்து, தொழிலாளர் பாதிப்படையாத வகையில் கம்பனியால் வழங்கக்கூடிய தொகையை ஆராய்ந்து தான் தொழிலாளர்களின் சம்பளம் கணக்கிடப்பட்டு பேச்சுவார்த்தை நடத்தப்படுகிறது.

சம்பள பேச்சுவார்த்தையின் போது எமது கோரிக்கை சம்பள நிர்ணய சபைக்கு நியாயமானதாக இருந்தால் மாத்திரமே பிரச்சினைகளின்றி தொழிலாளர்களின் சம்பள உயர்வு சாத்தியப்படும்.

இதற்கு அப்பால் 2,000, 4,000 ரூபா கொடுக்க வேண்டுமென வியாக்கியானம் பேசினால் சம்பள நிர்ணய சபை எமது கோரிக்கையை நிராகரித்து விடும்.

தொழிலாளர்களுக்கு சரியான சம்பள உயர்வு பெற்றுக் கொடுப்பதில் காங்கிரஸ் முன்னின்று செயற்படும். இ.தொ.கா. முன்வைத்த தொகையை தாண்டி தோட்ட தொழிலாளர்களுக்கு வேறு எவரும் அதிக தொகையை பெற்று கொடுப்பார்கள் என்றால் இ.தொ.கா அதை முழுமையாக வரவேற்கும்.

இ.தொ.காவின் கணக்கீட்டின்படி 1,700 ரூபா சம்பள அதிகரிப்பின் மூலம் கம்பனிகளும் நட்டமடையாது, தொழிலார்களுக்கும் நியாயமான வேதனம் கிடைக்கும். இதை தொழில் அமைச்சு ஏற்றுக்கொள்ளும் என்பதை இ.தொ.கா நம்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

பல அரசியல்வாதிகள் இலங்கை தொழிலாளர் காங்கிரஸை குறை கூறிக் கொண்டிருக்கின்றனர். அது எனக்கு வியப்பாகவுள்ளது. சம்பள பேச்சுவார்த்தைக்கு வருகை தராத கம்பனிகளை குறை கூறாமல் இலங்கை தொழிலாளர் காங்கிரஸை குறை கூறும் போது, கம்பனிகள் மீது மக்களுக்கு இருக்கும் வெறுப்பை திசை திருப்ப கம்பனிகளுக்கு கைக்கூலியாக இவர்கள் செயற்படுகிறார்களா? என்ற அச்சம் என் மனதில் எழுகிறது" எனத் தெரிவித்துள்ளார்.

## பொன்னாவெளி கிராம...*(03ஆம் தொடர்ச்சி)*

மக்களுக்கு ஏதாவதொரு அபிவிருத்தி அல்லது பிரச்சினைகளுக்கான தீர்வு கிடைக்க வரும் சந்தர்ப்பங்கள் அல்லது ஏதுநிலைகள் வரும்போதெல்லாம் இதர தமிழ் தரப்பினர் அவற்றை தடுக்கத்தான் முயற்சித்தார்களே தவிர அதை ஆராய்ந்து சிறப்பான தீர்மானங்களை எடுப்பதற்கு ஒருபோதும் முன்வருவதில்லை. குறிப்பாக இலங்கை இந்திய ஒப்பந்தத்தினூடாக கிடைத்த 13 ஆவது அரசிலைமைப்பினூடாகத்தான் எமது பிரச்சினைகளுக்கான தீர்வுக்கு ஓர் ஆரம்பமாக அமையும் என நான் அன்றிலிருந்து கூறிவருகின்றேன்.

ஆனால் அதை கடுமையாக எதிர்த்தார்கள். நடைமுறைக்கு கொண்டுவர விடமாட்டோம் என கூச்சலிட்டார்கள். ஆனால் இன்று அவ்வாறு கூச்சலிட்டவர்களே 13 தான் ஒரே வழி என இன்று முணுமுணுக்கின்றார்கள்.

இதேபோன்றுதான் இந்த பொன்னாவெளி விவகாரத்திலும் நான் மக்களுக்கு சாதகமான நன்மை விளைவிக்கும் ஒன்றுதான் என கருதுகின்றேன்" என்றார்.

அதேநேரம் பாதகம் என்று ஆய்வுகள் தெரிவித்தால் அதை நிறுத்துவதற்கும் பின்னிற்கமாட்டேன் என்றும் தெரிவித்திருந்த அமைச்சர் பொன்னாவெளியில் குடியேறுவதற்கு மக்கள் முன்வருவார்களாயின், அவர்களுக்கான வீட்டுத் திட்டத்தை ஏற்பாடு செய்து வழங்குவதற்கு தயாராக இருப்பதாக தெரிவித்தார்.

## பாராளுமன்ற உறுப்பினர்களின்...

காப்பீட்டுத் தொகையை பெறுகின்றனர். ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினரும் ஆண்டு தோறும் பெறும் காப்பீட்டுத் தொகையின் மதிப்பு பத்து இலட்சம் ரூபாவாகும்.

தங்களது சம்பளத்திலிருந்து குறிப்பிட்ட தொகையை அறவீடு செய்து, தங்கள் குடும்ப உறுப்பினர்களுக்கும் காப்பீட்டுத் தொகையை வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

## எட்டு இலங்கையர் மீட்பு;...

தூதுவர் ஜனக பண்டார தெரிவித்துள்ளார். மியன்மார் அதிகாரிகளின் உதவியுடன் கடந்த மார்ச் மாதம், எட்டு இலங்கையர்கள் மீட்கப்பட்டனர். மீட்கப்பட்ட 06 ஆண்கள் மற்றும் 02 பெண்கள் மியன்மார் பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டனர்.

இலங்கைத் தூதரகம், வெளிநாட்டலுவல்கள் அமைச்சுடன் அதிகாரிகள், மீட்கப்பட்ட இலங்கையர்களை பாதுகாப்பாக நாட்டுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொண்டனர். இது தொடர்பாக தாய்லாந்தின் பிரதி பிரதமரும் வெளிவிவகார அமைச்சருமான Parnpree BahiddhaNukara உடன் அமைச்சர் அலி சப்ரி தொலைபேசியில் உரையாடினார்.

மியன்மாரிலுள்ள இலங்கைத் தூதரகத்தின் ஒருங்கிணைப்புடன் வெளிவிவகார அமைச்சு, மனிதக் கடத்தலினால் பாதிக்கப்பட்டு மியன்மாரில் சிக்கியுள்ள சுமார் 56 இலங்கையர்களை மீட்டு நாட்டுக்கு திரும்புவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது.

மியன்மார் அதிகாரிகளுடனான பேச்சுவார்த்தையை தொடர்ந்து இலங்கைத் தூதரகம் கடந்த ஆண்டு பயங்கரவாதக் குழுவிடமிருந்து 32 இலங்கையர் மீட்கப்பட்டது.

## புதுப்பிப்புகளின் அடிப்படையிலேயே...

சிங்கள, தமிழ் புத்தாண்டை முன்னிட்டு விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். தனது வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளதாவது,

"இந்த புதுப்பித்தல்களுக்கு பின்னால் மற்றொரு மிக முக்கியமான விடயமும் உள்ளது. அதுவே சமூக ஒற்றுமையும் ஒருமைப்பாடும் ஆகும். தமிழ், சிங்களப் புத்தாண்டை உறவுகளையும் ஒற்றுமையையும் அடிப்படையாகக் கொண்டே புதுப்பித்துக்கொள்கிறோம். உலக நாடுகள் அனைத்தும் இந்த சம்பிரதாயத்தை பின்பற்றியே புத்தாண்டுக் கொண்டாட்டங்களை கட்டமைத்துள்ளன. புத்தாண்டு நமக்கு சொல்லும் பாடத்தை இந்தத் தருணத்தில் சுட்டிக் காட்டுவது பொருத்தமானதென நம்புகிறேன்.

புதிய ஆண்டில் ஒரு நாடு என்ற வகையில் சரியான வழியில் முன்னேறுவதற்கு சமூக உறவுகளும் ஒற்றுமையுமே அடிப்படைக் காரணிகளாகும் என்பதை நினைவுகூருவதோடு, அனைவருக்கும் புத்தாண்டுப் பிறப்பு சிறப்பானதாக அமையட்டுமென பிரார்த்திக்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

## பெருமைமிகு நாட்டை உருவாக்க...

பெயர்ச்சியுடன் தொடங்கும் சிங்கள, தமிழ் புத்தாண்டை உலகிலுள்ள மற்றும் இலங்கை வாழ் சிங்கள, தமிழ் மக்கள் வெகு விமர்சையாகக் கொண்டாடுகின்றனர். இலங்கையின் மாபெரும் கலாசார விழாவாக அறியப்படும் இந்நாளில் அனைவரும் ஒரே சுபநேரத்தில் ஒரே கடமையில் ஈடுபடும் சம்பிரதாயத்தின் காரணமாக சிங்கள, தமிழ் புத்தாண்டு உலகம் முழுவதும் மிகவும் பிரபலமாக உள்ளது.

இந்நன்நாளில் அனைத்து மக்களும் செழிப்பு மற்றும் சௌபாக்கியத்தை எதிர்பார்த்து, தங்களால் இயன்றவரை மத வழிபாடுகளில் ஈடுபடுகின்றனர்.

வரிச்சுமை அதிகரிப்பு, பொருட்களின் விலையேற்றம், நாட்டில் உள்நாட்டு நெருக்கடி என பல பிரச்சினைகளை நாடு எதிர்கொண்டதுடன் தற்போது தேர்தல் ஆண்டாகவும் காணப்படுகின்றது. இந்த வருடம் மக்கள் எதிர்பார்க்கும் அரசாங்கம் நாட்டில் உருவாகும் என்பதும், மீண்டும் எமது தாய்நாட்டுக்கு சுபீட்சம் வரும் என்பதும் எனது நம்பிக்கையாகும்.

ஒவ்வொரு இருண்ட யுகத்திலும் ஒரு வெள்ளிக் கோட்டைப் பார்ப்பது போல இந்த இருண்ட யுகத்தை முடிவுக்கு கொண்டு வரவும், வார்த்தையின் உண்மையான அர்த்தத்தில் ஒரு வளமான யுகத்தை உருவாக்கவும் அணிதிரள்வோம்" எனத் தெரிவித்துள்ளார்.

## சித்திரைப் புத்தாண்டுக்கு முன்...

அரிசி வழங்க அரசாங்கம் திட்டமிடப்பட்டிருந்தது. இம்மாதம் 21ஆம் திகதி மற்றும் மே மாதத்தில் அரிசி வழங்க அரசாங்கத்தால் திட்டமிடப்பட்டிருந்தாக, நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்தார்.

எனினும் புத்தாண்டுக்கு முன்னர் விநியோகிக்க முடிந்த வகையில் அனைத்து பிரதேசங்களிலும் அரிசியை விநியோகிக்குமாறு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## முன்னாள் ஆசிரியர்...

மாலை 6.00 மணியளவில் பொரளை கனத்தை மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

1994ஆம் ஆண்டு தினமின பத்திரிகையின் பிரதம ஆசிரியராக நியமிக்கப்பட்ட அவர், பிரபல வெளிநாட்டு ஊடக செய்தியாளர் மற்றும் வர்ணனையாளராகவும் பல வெளிநாட்டு முகவர் செய்தி நிறுவனங்களுடன் இணைந்து சேவையாற்றியுள்ளார்.

பாணந்துறை ஸ்ரீசுமங்கல வித்தியாலயத்தின் பழைய மாணவரான சரத் குரே, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் வெளியீடான மௌபிம பத்திரிகையின் பிரதி ஆசிரியராகவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உத்தியோகபூர்வ பத்திரிகையான தினகர பத்திரிகையின் பிரதம ஆசிரியராகவும் பணிபுரிந்துள்ளார்.

## புத்தாண்டின் உண்மையான உரிமை...

"மங்களகரமான சம்பிரதாயங்கள், அனுஷ்டானங்கள் மற்றும் சமயக் கிரியைகளுக்கு முன்னுரிமை அளித்து, பாரம்பரிய மரபுகளை பேணி, ஒரேநேரத்தில் ஒரே நோக்கத்துடன் ஒரே சுபநேரத்தில் ஒன்றிணைந்து செயற்படுவதை உலகில் வேறு எந்த நாட்டின் கலாசாரத்திலும் காண முடியாது. இயற்கையோடு ஒன்றித்திருந்த எமது முன்னோர்கள், புத்தாண்டில் அதை இன்னும் நிஜமாக்கினார்கள். அவர்களின் வழிவந்தவர்கள் என்ற முறையில் உணவுப் பாதுகாப்பு, சிக்கனம், கலாசாரம், ஐக்கியம் பற்றி நாம் மீண்டும் மீண்டும் கூறிக்கொண்டிருக்க வேண்டிய தேவையில்லை. தேவை செயற்படுவது மட்டுமேயாகும்.

உணவு மற்றும் பொருளாதார நெருக்கடி நிலைமைகளுக்கு முகங்கொடுத்து, நாட்டை உணவுத் தேவையில் தன்னிறைவடையச் செய்யும் சவாலை வெற்றிகொள்வதற்கு விவசாய சமூகத்தினர் ஆற்றிய பங்களிப்பை இந்தப் புத்தாண்டில் நன்றியுடன் நினைவுகூர வேண்டும்.

கடந்த காலம் நாம் சிந்திப்பதற்கு நிறையவே கற்றுத் தந்துள்ளது. அண்மைக்கால வரலாற்றில் ஏற்பட்ட நோய்கள், பொருளாதார மற்றும் சமூக நெருக்கடிகள் நாம் முன்னெப்போதும் கண்டிராதவையாகும். மீண்டும் அத்தகைய நிலைமைகளுக்கு முகங்கொடுக்காதிருக்க, அடுத்த தலைமுறைக்கு அவற்றை விட்டுவைக்காதிருக்க, புதிய சிந்தனைகளால் வளம் பெற்ற புதியதோர் ஆண்டில் காலடி எடுத்து வைப்போம்" எனத் தெரிவித்துள்ளார்.

## சித்திரைப் புத்தாண்டு நிகழ்வில்...

ஏற்பாடு செய்யப்பட்ட புத்தாண்டுக் கொண்டாட்டம் பல பாரம்பரிய விளையாட்டுகளை உள்ளடக்கியிருந்ததுடன், பாதுகாப்பு அமைச்சு ஊழியர்களின் கலாசார அம்சங்களும் நிகழ்வை வண்ணமயமாக்கின.

புத்தாண்டு விழா நடைபெறும் வளாகத்துக்கு வருகை தந்த ஜனாதிபதிக்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் (ஓய்வு) கமல் குணரட்ண வால் வரவேற்பளிக்கப்பட்டதுடன், புத்தாண்டு அழகிப் போட்டியில் பங்குபற்றி வெற்றி பெற்றவர்களுக்கு ஜனாதிபதி பரிசில்களை வழங்கினார்.

ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் (ஓய்வு) கமல் குணரட்ண, விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ மற்றும் பாதுகாப்பு அமைச்சின் ஊழியர்களும்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## கொழும்புத் துறைமுக நகரில்...

மார்ஷல் உதேனி ராஜபக்ஷ தெரிவித்தார்.

காலை 9.00 மணிக்கு கண்காட்சி ஆரம்பமாகி நள்ளிரவு 12.00 மணிக்கு நிறைவடையுமெனத் தெரிவித்த அவர், கண்காட்சிக்கான நுழைவுச்சீட்டுக் கட்டணம் பெரியோருக்கு 200 ரூபாவும் சிறுவர்களுக்கு 100 ரூபாவெனவும் கூறினார்.

கண்காட்சியில் உலங்கு வானூர்தி சாகசம், நீர் விளையாட்டுகள், சாகச சவாரிகள், இசை நிகழ்ச்சிகள், உணவுத் திருவிழாக்கள் உள்ளிட்டவை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

## பவள விழாக்காணும்... *(08ஆம் தொடர்ச்சி)*

*ஒரு நூலை வாசிக்கிற போது வாசகருக்கு அது இன்னும் பல ஆய்வுப் பிரச்சினைகளையும் ஆய்வுக் கருதுகோள்களையும் அது உருவாக்குமாக இருந்தால் அதுவே அந்நூலின் உத்தமமான பணியாகும். அது இந்நூலின் மூலம் நிறைவேறியிருக்கிறது.*

*அவருடைய முகநூல் பதிவுகள் கூட ஆரோக்கியமான பண்புமிக்கது. மிகப்பயனும் தேடல் மிக்கதுமாகும். ஒலிபரப்புத் துறையில் அவருக்கு முன்னர் பணியாற்றிய ஏ.எல். சலீமைப் பற்றி அவருடைய குறிப்பு அவருடைய முகநூல் பதிவுகளில் முக்கியமானது இது தவிர உலகளாவிய அளவில் அவரது ஒலிபரப்புப் பணியும் தமிழ்ப்பணியும் பதிவு செய்யப்பட்டிருக்கின்றது.*

*எப்படி அவருடைய நூல் முக்கியமானதோ அதே போல் அவருடைய முகநூல் பதிவுகளும் முக்கியமானவை. B.H.அப்துல் ஹமீட் இவ்வளவு தூரம் சர்வதேச புகழ் வாய்ந்தவராக இருந்தும் மிகப் பணிவுமிக்கவர் அற்புதமான மனித குணங்களைச் சுமந்தவர். பணிவும் பக்குவமும் அவரது மெச்சத்தக்க குணங்கள் ஆட்களோடு பழகுவதும் அவர்கள் குணம் அறிந்து நடப்பதுவும் அவரது மிகச் சிறந்த கலை. மிகக்கவர்ச்சிமிக்க ஒரு துறையில் அதிகம் கண் திருஷ்டி மிக்க ஒரு துறையும் அழுக்காறு நிறைந்த ஓர உலகில் கவனமாக தன் பயணத்தைத் தொடரும் ஒரு வழிப் போக்கர் அவர்.*

*யுனஸ்கோ நிறுவனம் ஊடகவியல் பணியினை மிகவும் கடினமானதாக வரையறுக்கிறது. பத்திரிகை, திரைப்படம், வானொலி தொலைக்காட்சி என்று எந்த ஒரு ஊடகத்தை எடுத்தாலும் தொழில்நுட்பம் மிகப்பெரிய அளவில் முன்னேறிவிட்டது ஊடகவியலாளனுக்கு தொழில்நுட்பத் திறனும் அறிவும் அவசியப்படுகிறது நவீன கால வாழ்க்கை சிக்கலானதாக விரைந்து மாற்றம் அடைவதாக உள்ளது. இதனைப் புரிந்து கொள்ளும் ஆற்றலும் பிறருக்கு இதனை புரிய வைக்கும் ஆற்றலும் ஊடகவியலாளனுக்குரிய அடிப்படைத் தேவைகளாகும். இந்த வயதிலும் தளராத பிசிறு பிடிக்காத அவர் காந்தக் குரல் இன்னும் உலகைக் கவர்ந்து இழுக்கிறது. 'குறளைப் போலே குரலால் புகழ் கொண்டவர்' என வைரமுத்து அவர் பற்றிக் குறிப்பிடுகின்றார்.*

*அவரது ஒலிபரப்புத்துறை அறிவு விளம்பரக்கலை தொழில்நுட்ப ஆற்றல் விடயங்களை தேடிப்பிடிக்கும் பண்பு தகவல்களைச் சுமந்த அறிக்கை முறை இவை யாவுமே இளைய தலைமுறையினருக்கு முன்னுதாரணம் மிக்க பணிகளாகும்.*

*இந்தக் குறிப்பினை எனது அவசரத்துக்குள் எழுத முனைந்த போது அவரது ஆற்றலின் விரிவு அவர் பற்றிய பெரிய ஆய்வொன்றினை மேற் கொள்ள வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்துகிறது. அவரது ஒலிபரப்புத் துறையின் ஆற்றலும் அறிவும் அதன் பதிவாக எழுந்த நூலும் அறிவுலகின் கவனத்தைப் பெற வேண்டும்.*

*அவர் பணி சிறக்கவும் ஆயள் நீடிக்கவும் பிரார்த்திப்போம். தமிழ் வாழும் மட்டும் BH என்ற நாமமும் வாழும்.*

## சட்டவிரோத மதுபானம் விற்பனை...

தமிழ், சிங்கள புத்தாண்டுக் காலத்தில் சட்டத்தை கடுமையாக நடைமுறைப்படுத்தும் நோக்குடன் இத்திடீர் சோதனை நடத்த கலால் திணைக்களம் திட்டமிட்டுள்ளது. கலால் திணைக்கள ஆணையாளர் நாயகம் எம்.ஜே.குணசிறியின் பணிப்புரைக்கமைய, கலால் திணைக்களத்தின் கொழும்பு நகர உதவி ஆணையாளர் ஜயந்த சில்வா உள்ளிட்ட குழுவினரால் விசேட சோதனை மேற்கொள்ளப்படவுள்ளது. கலால் திணைக்கள சட்ட விதிகளுக்கமைய குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமென, கலால் திணைக்களத்தின் கொழும்பு நகரை மேற்பார்வை செய்யும் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். கெஸ்பேவ, பாதுக்கை, பத்தரமுல்ல மற்றும் கொழும்பு நகரிலுள்ள 04 பிரதான கலால் நிலையங்களுடன் இணைந்து கூட்டு நடவடிக்கையை முன்னெடுக்க ஏற்பாடு செய்துள்ளதாகவும், அவர் தெரிவித்தார். இன்று 12ஆம் திகதியும் நாளை 13ஆம் திகதியும் கலால் திணைக்களத்தின் உத்தவை மீறி மதுபானம் விற்பனை செய்பவர்களை தேடிக் கண்டுபிடிப்பதற்காக 50க்கும் மேற்பட்ட அதிகாரிகள் பல குழுக்களாக நியமிக்கப்பட்டுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

## பேலியகொடை மீன் சந்தை...

அரசாங்க விடுமுறை தினமான 15ஆம் திகதியும் திறக்கப்பட்டிருக்குமென பேலியகொடை மீன் வர்த்தகர்கள் சங்கத் தலைவர் ஜயசிறி விக்கிரமாராச்சி தெரிவித்தார்.



# புலமைக் கதிர்

தரம்–5 வகுப்பு மாணவர்களுக்கான





திருமதி.பத்மா சந்திரமோகன்
உதவி அதிபர், கொ/ புனித அன்னம்மாள் மகளீர் மகாவித்தியாலயம், கொழும்பு 13

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

**I. பின்வரும் பந்தியை நன்றாக வாசிக்க.**

முன்னொரு காலத்தில் சிபி என்னும் அரசன் நீதி தவறாது ஆட்சி புரிந்து வந்தான். உதவி கேட்டுத் தன்னை நாடுபவர்களுக்கு வேண்டிய உதவிகளை அளித்து உபசரிக்கும் பண்பு கொண்டவன். தன்னிடம் அடைக்கலம் தேடி வந்தவர்களை எவ்வாறாயினும் காப்பாற்றும் சிறந்த குணம் படைத்தவன். ஒரு முறை தனது மடியில் விழுந்த புறாவைக் காப்பாற்றியமை இதற்கொரு சிறந்த உதாரணமாகும்.

01. இப்பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அரசனின் பெயர் என்ன?

.................................................................................................

02. அவரிடம் காணப்பட்ட சிறந்த குணம் என்ன?

.................................................................................................

03. பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பறவை எது?

.................................................................................................

04. விசிறியும் சுழியும், விசிறியும் உள்ள ஒரு சொல்லைத் தெரிந்து எழுதுக.?

.................................................................................................

05. தஞ்சம் எனும் சொல்லுக்கான ஒத்த கருத்துச் சொல்லைப் பந்தியில் இருந்து தெரிவு செய்து எழுதுக.

.................................................................................................

06. பந்தியிலுள்ள இறந்தகால ஆண்பால் வினைச் சொல் ஒன்றை எழுதுக.

.................................................................................................

**07. இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

(i) வாகன (ஓட்டுனர் / ஓட்டுநர்) அனுமதிப் பத்திரத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(ii) புகையிரதம் (தண்டவாலத்தின் / தண்டவாளத்தின்) மேல் சென்றது.

(iii) மரவள்ளிக்கிழங்கு அவிக்கும் போது (தோளை / தோலை) உரிக்க வேண்டும்.

(iv) மாணவர்களிடத்தில் வாசிப்புப் (பலக்கத்தை / பழக்கத்தை) ஏற்படுத்த வேண்டும்.

08. பின்வரும் சொற்களை ஒழுங்கமைத்து கருத்துள்ள ஒரு வாக்கியம் எழுதுக.
அன்பு / நாம் / செலுத்த / உயிர்களிடத்தில் / வேண்டும்

.................................................................................................

09. தனிச் சொல்லில் எழுதுக.
i. விசாரணை முடிவில் வழங்கப்படுவது - ..............................................
ii. கணவனை இழந்தவள் - ..............................................

10. இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிந்து கோடிடுக.

i. ஆட்டுக் குட்டி வேகமாக ........................................ (ஓடியது / ஓடின)
ii. மாணவர்கள் வரிசையாகச் ................................ (சென்றார் / சென்றனர்)
iii. மயில் அழகாக ............................................. (ஆடின / ஆடியது)
iv. நீங்கள் பாடசாலைக்கு ........................... (வருவீர்களா? / வருவார்களா?)
v. நாம் ஒழுக்கமுள்ளவராக ................................. (வாழ்வீர் / வாழ்வோம்)

11. வெற்றிடத்திற்குப் பொருத்தான எழுத்தின் கீழ்க் கோடிடுக.
i. மின்விசி....... (ரி / றி) ii. தி......விழா (ரு / று)

12. பொருத்தமான நிறுத்தற்குறிகளை இடுக.
i. ஐயோ இது எப்படி நடந்தது

.................................................................................................

ii. நான் நண்பனிடம் நாளை பாடசாலைக்கு வருவாயா எனக் கேட்டேன்

.................................................................................................

**II.**

- **தரப்பட்ட வாக்கியங்களை பன்மை வாக்கியமாக எழுதுக.**

13. அந்தப் பாலம் மிகவும் நீளம் கூடியதாகும்.

.................................................................................................

14. காட்டில் மான் கூட்டம் அலைந்து திரிந்தது.

.................................................................................................

15. கடற்கரையில் மீனவன் மீன் பிடித்தான்.

.................................................................................................

16. பின்வரும் சொற்களில் ஏனையவற்றில் இருந்து வேறுபட்ட சொல்லின் கீழ்க் கோடிடுக.
i. புத்தகம், நூலகம், நூல், பனுவல்
ii. ஆரணியம், கானகம், பாலைவனம், காடு
iii. விசும்பு, வானம், நட்சத்திரம், ஆகாயம்

17. பின்வரும் செற்களுக்குரிய ஆங்கிலச் சொல்லை எழுதுக.

i. வானம் - .............................. ii. சமையலறை - ..........................

18. பின்வரும் சொற்களின் தமிழ்க் கருத்தை எழுதுக.

i. Happy New Year - ........................... ii. Lotus - ............................
iii. What is this? - ................................ iv. Hands up - .........................

19. பின்வரும் தமிழ்ச் சொற்களின் சிங்கள ஒலிப்பினை தமிழில் எழுதுக.

i. தண்ணீர் - ............................ ii. பாற்சோறு -..............................

**III.**


20. பின்வரும் சிங்களச் சொற்களுக்குப் பொருத்தமான தமிழ்ச் சொற்களை எழுதுக.

i. வதுர தென்ன - ......................... ii. ச(ந்)துதா - ...........................

21. கீழே தரப்பட்டுள்ள எண்ணுக்கு முன்னால் உள்ள எண்ணையும் பின்னால் உள்ள எண்ணையும் உரோமன் எண் குறியீடுகளில் எழுதுக.

..................... XV ..................

22. நான்முகி ஒன்றில் உள்ள உச்சிகளின் எண்ணிக்கை யாது? .........................

23. 

i. நிறந்தீட்டப்பட்ட பகுதியை பின்னத்தில் எழுதுக. .............
ii. நிறந்தீட்டப்படாத பகுதியை பின்னத்தில் தருக. ............

24. இந்த உருவுக்கு எத்தனை சமச்சீர்க் கோடுகளை வரையலாம்?



.........................................

25. 136 பழங்களை 10 பேர்களிடையே சமமாகப் பங்கிடும் போது எஞ்சும் பழங்களின் எண்ணிக்கை யாது?

.................................................................................................

26. சுதா பிற்பகல் 3.30 மணிக்கு வீட்டில் இருந்து புறப்பட்டு, 35 நிமிடங்கள் பயணஞ் செய்து நூலகத்தை அடைந்தாள். அவள் நூலகத்தை சென்றடைந்த நேரத்தை இருபத்து நான்கு மணித்தியாலக் கடிகாரத்தில் காட்டப்படும் விதத்தை இலக்கத்தில் எழுதுக?

.................................................................................................

27.


| | |
|---|---|
| 133 | 121 |
| 319 | |
| 100 | 217 |

பெட்டியிலுள்ளே உள்ள எண்களில் இரண்டு எண்களைக் கூட்டினால் 350 கிடைக்கும் அவ்விரண்டு எண்களையும் தெரிவு செய்து எழுதுக.

.................................................................................................

28. 267, 486, 329, 276, 392 ஆகிய எண்களில் உள்ள சிறிய எண்ணுக்கும் பெரிய எண்ணுக்கும் இடையிலான வித்தியாசம் யாது?

.................................................................................................

29. 


i. பிரதான வாயிலிலிருந்து வைத்தியசாலை எத்திசையில் அமைந்துள்ளது?

.........................................................


ii. நபரொருவர் A எனும் பிரதான வாயிலிலிருந்து B எனும் தபாலகத்துக்கு சென்று C எனும் வைத்தியசாலையை அடைவாராயின் அவர் பயணம் செய்த தூரத்தை மீற்றரில் எழுதுக.

.........................................................

**IV. சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

30. வளர்வதற்கு கொழுகொம்பு தேவைப்படும் தாவரம் அல்லாதது
i. வெற்றிலை ii. புடோல் iii. குரக்கன்

31. நிழலைப் பெற்றுக் கொள்வதற்கு வளர்க்கப்படும் 'கத்தாப்புத்' தாவரத்தின் இலை

i.  ii.  iii. 

32. வானவில்லுக்கு உரித்துடையதல்லாத நிறம் அடங்கிய விடை
i. சிவப்பு, செம்மஞ்சள் ii. மஞ்சள், காவி iii. பச்சை, நீலம்

33. கொடிகளில் காய்க்கும் பழம்
i. நெல்லி ii. திராட்சை iii. மாதுளை

34. கிளைகளிலும் தண்டிலும் காய்கள் உண்டாகும் தாவரம்
i. பலா ii. வாழை iii. தென்னை

35. அழகுக்காக வைக்கப்படும் பூச்சாடிகளில் பூக்களை அதிக நாட்கள் வாடாமல் வைத்திருப்பதற்காக சாடியிலுள்ள நீருடன் சேர்ப்பதற்குப் பொருத்தமான பொருள் யாது?
i. ஓமத்திராவகம் ii. ஓடிக்கொலோன் iii. அஸ்பிரின்

36. இலங்கைக்கே உரித்தான முலையூட்டி விலங்கு
i. நீலப்புள் ii. புள்ளிக்கோட்டி iii. கருங்குரங்கு

37. சக்தியைத் தரும் உணவு
i. பசளி ii. போஞ்சி iii. மரவள்ளி

38. பயிர்களுக்கு நாசம் விளைவிக்கும் நத்தைகளை உணவாகக் கொள்ளும் பிராணி
i. கீரி ii. செண்பகம் iii. முள்ளம்பன்றி

39. எலியின் உடலில் வாழும் தெள்ளு மூலம் பரவும் நோய் எது?
i. கழிச்சல் ii. யானைக்கால் iii. பிளேக்

40. 

இவ்வீதிச் சமிக்ஞை காணக்கிடைப்பது,
i. நீதிமன்றத்திற்கு அருகில்
ii. தபாற்கந்தோருக்கு அருகில்
iii. சந்தைக்கு அருகில்


தொடர்ச்சி 08ஆம் பக்கம்

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் பங்குனி மாதம் 29ஆம் நாள் வெள்ளிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ஷவ்வால் பிறை 03

**குறள் தரும் சிந்தனை**



தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை

வேறு தெய்வம் தொழாதவளாய்த் தன் கணவனையே தெய்வமாகக் கொண்டு தொழுது துயிலெழுகின்றவள் பெய் என்றால் மழை பெய்யும்.

# இன ஐக்கியம் வலுவடைவதற்கு புத்தாண்டில் உறுதிகொள்வோம்!

தமிழ், சிங்கள புத்தாண்டான குரோதி வருஷம் நாளை இரவு பிறக்கின்றது. நாட்டில் நிலவிய மிகமோசமான பொருளாதார நெருக்கடி படிப்படியாக நீங்கி, நாடு பெருமளவில் மீண்டெழுந்துள்ள தற்போதைய வேளையில் சித்திரைப் புத்தாண்டு நாளை பிறக்கின்றது. ஆகவே சில வருட காலத்துக்குப் பின்னர் இம்முறை தமிழ், சிங்கள மக்கள் சித்திரைப் புத்தாண்டை குதூகலத்துடன் கொண்டாடவிருக்கின்றனர்.

தமிழ், சிங்கள மக்களால் கடந்த சில வருட காலமாக சித்திரைப் புத்தாண்டை கோலாகலமாகக் கொண்டாட முடியாமல் போயிருந்தது. முதலில் உலகப் பெருந்தொற்றான கொவிட் பரவல் காரணமாக எமது நாடும் முடங்கிப் போயிருந்த காரணத்தினால் மக்களால் அவ்வேளையில் சித்திரைப் புத்தாண்டை கொண்டாட முடியாமல் போயிருந்தது.

கொவிட் பெருந்தொற்று ஒருவாறு நீங்கியதும் நாட்டில் பொருளாதார நெருக்கடி உருவெடுத்தது. அதனைத் தொடர்ந்து நாட்டில் ஆங்காங்கே ஆர்ப்பாட்டங்களும் அமைதியற்ற நிலைமையும் தோன்றின. அதன் தொடர்ச்சியாக நாட்டின் தலைவரும், அவர் தலைமையிலான அரசாங்கமும் பதவி விலக வேண்டிய நிலைமை உருவானது.

நாட்டின் தலைமைப் பொறுப்பை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏற்றுக் கொண்டதையடுத்து குறுகிய காலப்பகுதியில் இலங்கையின் பொருளாதாரம் பெருமளவில் மீண்டெழுந்துள்ளது. அவரது ஆளுமையான தலைமைத்துவம் காரணமாக இலங்கை விரைவில் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டெழ முடியுமென்ற நம்பிக்கையும் தோன்றியுள்ளது.

இவ்வாறான நம்பிக்கை மிகுந்த காலகட்டத்திலேயே சிங்கள தமிழ்ப் புத்தாண்டை மக்கள் மிகவும் நம்பிக்கையுடன் கொண்டாடவிருக்கின்றனர். நாட்டில் பொருளாதார நெருக்கடி வெகுவிரைவில் முற்றாகவே நீங்கி விடுமென்று சித்திரைப் புத்தாண்டு தினத்தில் நாம் ஒவ்வொருவரும் நம்பிக்கை கொள்வோம். அவ்வாறான மனஉறுதியுடன் தமிழ் சிங்களப் புத்தாண்டை நாம் வரவேற்போம். சகிப்புத் தன்மையும் நம்பிக்கைகளுமே நமது எதிர்கால சுபிட்சத்துக்குக் கைகொடுக்குமென்பதை மறந்து விடலாகாது.

எமது தேசத்தைப் பொறுத்தவரை சித்திரைப் புத்தாண்டென்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பண்டிகையாகும். இலங்கையின் பிரதான பண்டிகையாக இப்புத்தாண்டைக் கொள்ள முடியும். இரு வெவ்வேறு மதங்களைப் பின்பற்றுகின்ற, இரு வெவ்வேறு மொழிகளைப் பேசுகின்ற தமிழர்களும் சிங்கள மக்களும் கொண்டாடுகின்ற பொதுப்பண்டிகையாக சித்திரைப் புத்தாண்டு விளங்குகின்றது. அதுவே சித்திரைப் புத்தாண்டுக்கான சிறப்பும் தனித்துவமும் ஆகும்.

இலங்கையில் வாழ்கின்ற சிங்களவர்களும், தமிழர்களும் மதத்தாலும் மொழியாலும் வேறுபட்டவர்களாக இருந்த போதிலும், சமய மற்றும் பாரம்பரிய கலாசார ரீதியாக அவர்களுக்குள் நிறைய ஒற்றுமைகள் உள்ளன. இவ்விரு இன மக்களுக்கிடையே பாரம்பரிய பிணைப்புகளும் காணப்படுகின்றன. இந்து மதத்துக்கும் பௌத்தத்துக்கும் இடையே நெருக்கம் உள்ளது. அவ்விரு மதங்களின் பூர்வீகம் இந்தியா ஆகும். அம்மதங்களால் பின்பற்றப்படுகின்ற வழிபாட்டு முறைகளும், மதக்கோட்பாடுகளும் ஒன்றாகவே இருக்கின்றன.

அதேபோன்று அவ்விரு மொழிகளுக்கிடையேயும் பலவிதமான ஒற்றுமைகள் காணப்படுகின்றன. தமிழர்கள் மற்றும் சிங்கள இனங்களின் பூர்வீகம் இந்தியா என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. எனவேதான் இவ்விரு இனங்களும் மிக நெருங்கிய சமய கலாசார தொடர்புகளைக் கொண்டதாக விளங்குகின்றன. பௌத்த பெருமானை இந்துக்கள் வழிபடுவதும், இந்து தெய்வங்களை பௌத்த மக்கள் வழிபடுவதும் தொன்றுதொட்டு நாம் கண்டு வருகின்ற நடைமுறைகளாகும்.

எமது நாட்டின் பண்டைய மன்னர்களின் ஆட்சிக் காலத்தின் போது தமிழ், சிங்கள மக்களுக்கிடையே சமயரீதியான நல்லிணக்கமும் ஐக்கியமும் நெருக்கமும் நிலவியதாக இலங்கையின் வரலாற்று மூலதாரங்கள் கூறுகின்றன.

கடந்த கால அரசியல் தலைவர்களின் தவறான வழிநடத்தல்களின் விளைவாகவே தமிழ், சிங்கள இனமக்கள் ஐக்கியமின்றி அந்நியப்பட்டுப் போனார்கள். அவ்வினங்களுக்கிடையிலான நிலவி வருகின்ற சந்தேகங்களை, பிளவை நீக்கி, பாரம்பரிய இணைப்பை கட்டியெழுப்புதில் கவனம் செலுத்தப்பட வேண்டும். நாட்டின் நிரந்தர ஐக்கியத்துக்கு அதுவே முதல் வழியாகும். எமது சிங்கள மற்றும் தமிழ் அரசியல்வாதிகள் இவ்விடயத்தில் இதயசுத்தியுடன் கரிசனை செலுத்தினாலேயே நாட்டில் உண்மையான ஐக்கியம் தோன்றும்.

இன ஒற்றுமைக்கான மனஉறுதிப்பாட்டை இம்முறை தமிழ் சிங்களப் புத்தாண்டில் இரு இன மக்களும் ஏற்படுத்திக் கொள்வதுடன், நாளை பிறக்கப் போகின்ற சித்திரைப் புத்தாண்டானது எமது தேசத்தில் வாழ்கின்ற அனைத்து இன மக்களுக்கும் வாழ்வில் சுபிட்சம் தர வேண்டுமென பிரார்த்திப்போம்.

editor.tkn@lakehouse.lk

# கல்வி, காணி, வீட்டு உரிமைகளை வழங்கி மக்களை பொருளாதாரத்தில் பங்குதாரர்களாக ஆக்குவோம்!

## கொழும்பு, கஜீ மாவத்தையில் தீக்கிரையான வீடுகளுக்கு பதிலாக 294 வீடுகள் கொண்ட ரன்திய உயன வீட்டுத்தொகுதியை மக்களிடம் கையளித்து ஜனாதிபதி உரை




கல்வி, காணி, வீடு, வியாபார உரிமைகளை உறுதிப்படுத்தி, மக்களை பொருளாதாரத்தில் வலுவான பங்குதாரர்களாக மாற்றிக் கொள்ள நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்தார்.

கொழும்பு முகத்துவாரத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை (09) நடைபெற்ற ரன்திய உயன வீட்டுத் தொகுதியை பயனாளிகளுக்குக் கையளிக்கும் நிகழ்விலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

இதன்போது 2010 ஆம் ஆண்டில் கஜீ மாவத்தையில் தீக்கிரையான வீடுகளுக்குப் பதிலாக 294 வீடுகள் அடங்கிய இந்த வீட்டுத்தொகுதியை ஜனாதிபதி, பாதிக்கப்பட்ட மக்களுக்குக் கையளித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டதாவது:

"பத்து வருடங்களுக்கு மேலாக கஜி மாவத்தை மக்கள் நரகத்தில் வசித்துள்ளனர். அந்த வாழ்க்கையை கற்பனை செய்து பார்க்க முடியவில்லை. அதனால்



இந்தக் குடியிருப்புகளை மக்களுக்கு விரைவில் கையளிக்க முடிந்துள்ளதையிட்டு மகிழ்ச்சி அடைகிறோம். முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க இது தொடர்பில் அதிக அக்கறை காட்டினார். இன்று நீங்கள் பெற்றுக்கொள்ளும் இந்த வீடு உங்களுக்கு மிகவும் மதிப்புள்ள சொத்தாகும். அதனைப் பாதுகாப்பது உங்கள் பொறுப்பு. கடந்த பத்து வருடங்களாக கஷ்டப்பட்ட நீங்கள் இந்த வீடுகளை அடகு வைக்கவோ விற்கவோ கூடாது. இந்த வீடுகளை உங்கள் உயிரைப் போல பாதுகாக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இன்று வரையிலான இரண்டு வருடங்களுக்குள் நிம்மதியாக மூச்சு விடக்கூடிய சூழலை எம்மால் உருவாக்க முடிந்துள்ளது. உணவு, எரிவாயு, எரிபொருள் வரிசையில் நின்று அவதிப்பட்ட மக்கள் இன்று சுமுகமாக வாழ்கின்றனர். வரிசை யுகத்தில் கொழும்பு மக்கள் பெரும் அவதிப்பட்டனர்.

பொருளாதாரத்தைப் பலப்படுத்த நாம் அமுல்படுத்திய வரிக்கொள்கை வாழ்க்கைச் சுமையை மேலும் அதிகப்படுத்தியது. ஆனால் அந்தக் கஷ்டங்களை நீங்கள் தாங்கிக் கொண்டதாலேயே கடன் வாங்காமலும், பணம் அச்சடிக்காமலும் அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரிக்க முடிந்தது. அதனால்தான் இந்த வருடத்தில் அரச ஊழியர்களுக்கு 10,000 ரூபா சம்பள அதிகரிப்பை வழங்க முடிந்தது. ரூபாவின் பெறுமதியும் வலுவடைந்துள்ளது.

அவ்வாறு பாதிக்கப்பட்ட மக்களுக்கு நன்றிக் கூறும் வகையிலேயே நிரந்தர காணி உரிமை, நிரந்தர வீட்டுரிமையை வழங்குவதாக கருதுகிறேன். எதிர்காலத்தில் 50,000 வீடுகள் மக்களுக்கு கையளிக்கப்படும். நான் பிரதமராக பதவி வகித்த காலத்தில் சீன அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட 1996 வீடுகளை நிர்மாணிக்கும் பணிகளையும் இரண்டு வருடங்களுக்குள் நிறைவு செய்ய எதிர்பார்க்கிறோம்."

இவ்வாறு ஜனாதிபதி தெரிவித்தார்.

சுற்றுலா, காணி, விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ உரையாற்றுகையில், "2022 ஆம் ஆண்டை விடவும் இன்று பத்து மடங்கு நிம்மதியாக மூச்சு விடக்கூடிய சூழலை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உருவாக்கியுள்ளார். அக்காலத்தில் மூன்று வேளை உணவு கேள்விக் குறியாக காணப்பட்டது. மக்கள் வரிசைகளில் நின்று அவதிப்பட்டனர்.

அப்போதைய ஆட்சியாளர்கள் ஜனாதிபதி பதவியை ஏற்று கொண்டு மக்களுக்கு சேவையாற்றுமாறு பல முறை கோரியிருந்த போதும், அந்தச் சவாலை ஏற்றுக்கொள்ளக்கூடிய தலைவர்கள் எவரும் பாராளுமன்றத்தில் இருக்கவில்லை. பாராளுமன்றத்தில் தனியொரு ஆசனத்தை மட்டும் பெற்றிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அந்தச் சவாலை ஏற்றுக் கொண்டு தகுந்த பொருளாதார நிலையை உருவாக்கினார். அதன்படி கடந்த 23 மாதங்களில் நாட்டை முன்னைய பொருளாதார நிலைக்கு கொண்டு வந்துள்ளார்.

இன்று புறக்கோட்டை, மஹரகம, பதுளை அல்லது இலங்கையின் எந்த நகரத்திலும், பெருந்திரளான மக்கள் பண்டிகைக் காலத்தில் பெருமளவில் பொருட்களை கொள்வனவு செய்கின்றனர். நாட்டின் பொருளாதாரம் மீண்டுள்ளது என்பதற்கு இதுவே சிறந்த உதாரணமாகும். பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் சவாலை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏற்றிருக்காவிடின் இன்று நாட்டின் நிலை என்னவென்பதை சிந்தித்துப் பாருங்கள்.

பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவது தொடர்பில் இன்று விவாதத்திற்கு அழைப்பு விடுக்கும் எதிர்க்கட்சிகளிடம், ஏன் அன்று சவாலை ஏற்கவில்லை என்று கேட்க வேண்டும். அந்தக் குழுக்களுக்கு பொருளாதாரக் கோட்பாடு மட்டுமே தெரியும். அவர்களுக்கு நடைமுறை பொருளாதாரம் தெரியாது. அரச ஊழியர்களின் சம்பளத்தை 10,000 ரூபாவினால் அதிகரிக்கவும் ஜனாதிபதி ஏற்பாடு செய்தார். தொழிலாளர்களுக்காக பேசும் எந்த கட்சியும் இவ்வளவு சம்பளத்தை அதிகரிக்கவில்லை. இன்று ரூபாவின் பெறுமதி அதிகரித்துள்ளது. நாட்டிற்கு சுற்றுலாப் பயணிகள் அதிக அளவில் வருகின்றனர்" என்று தெரிவித்தார்.

தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க உரையாற்றுகையில், "இரண்டு வருடங்களுக்கு முன்பிருந்த நெருக்கடியிலிருந்து நாடு மீண்டு சுமுகமான நிலைக்கு வந்துள்ளது. நாட்டில் பொருளாதார ஸ்திரத்தன்மையை ஜனாதிபதி ஏற்படுத்தினார்.

மேலும், மற்றொரு பொருளாதார நெருக்கடி ஏற்படாமல் இருக்கும் வகையிலான சட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இலங்கையின் பொருளாதாரம் மீது நம்பிக்கை இருப்பதால் சுற்றுலாப் பயணிகள் இன்று நம்பிக்கையுடன் நாட்டிற்கு வருகிறார்கள். அத்துடன், இந்த நாட்டின் பொருளாதார வளர்ச்சி வீதத்தை அதிகரிப்பதற்கான திட்டங்களை ஜனாதிபதி ஏற்கனவே தயாரித்துள்ளார். அதன் மூலம் வருமானத்தைப் பலப்படுத்தி மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த முடியும்.



விவசாயத்தை நவீனமயப்படுத்தி உற்பத்தி மற்றும் ஏற்றுமதி பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. புதுப்பிக்கத்தக்க எரிசக்தி குறித்து அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையில் முதலீடுகளை அதிகரிக்கவும், அதிக வருமானத்தை அடைவதற்குமான திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன" எனத் தெரிவித்தார்.

முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க உரையாற்றுகையில், "கஜிமாவத்தையில் 2015 ஆம் ஆண்டில் தீக்கிரையான வீடுகளுக்குப் பதிலாக புதிய வீடுகள் அமைக்கத் தீர்மானிக்கப்பட்ட போதிலும், அப்போதைய நாட்டின் தலைவர் அதற்கு அனுமதி வழங்கவில்லை. ஆனால் ஒன்பது வருடங்களின் பின்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கஜீ மாவத்தை மக்களுக்கு நீதி வழங்கியுள்ளார். பதினான்கு ஆண்டுகளுக்குப் பிறகு மக்களுக்கு வீட்டு உரிமை கிடைக்கிறது.



இந்த வீடுகளை நிர்மாணிப்பதற்காக 12,855 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. அரசியல் கட்சிகள் இந்த வீடுகளை வழங்குவதில் அக்கறை காட்டவில்லை. இந்த அனைத்து வீடுகளினதும் உரிமை பயனாளிகளுக்கு வழங்கப்படுவதால் 4500 மாத வாடகை செலுத்த வேண்டிய அவசியம் இருக்காது. அந்த பணத்தை உங்கள் கல்வி, சுகாதார சேவைகளுக்கு பயன்படுத்துங்கள். கொழும்பில் உள்ள 53,800 மாடிக்குடியிருப்புத் தொகுதி வீடுகள் அடுத்த இரண்டு மாதங்களில் மக்களிடம் கையளிக்கப்படும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது கொள்கைகளை மாற்றியதில்லை. ஆட்சியை இழந்தாலும் தனது கொள்கைகளை கடைப்பிடித்தார். பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பவும் நாட்டை இந்த இடத்திற்கு கொண்டு வரவும் உழைத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை இம்முறை கட்சி சார்பற்ற பொது வேட்பாளராக களமிறக்குவோம். அவரை வெற்றி பெறச் செய்ய கொழும்பு மக்கள் பாடுபடுவர் என்று நம்புகிறேன்" என்றார்.

கஜீமாவத்த வீட்டு உரிமையாளர்கள் சார்பில் ஹில்மா முகேஷ் உரையாற்றுகையில், "சுதந்திரமாக சுவாசிக்கக் கூடிய சூழல் இரண்டு வருடங்களின் பின்னர் உருவாகியுள்ளது. தொழிலுக்கு புறப்படும் முன்பாக மண்ணெண்ணெய், பால்மா, சமையல் எரிவாயு வரிசையில் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அப்போது எந்தத் தலைவரும் நாட்டைக் கைப்பற்ற முன்வரவில்லை. ஆனால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அந்த சவாலை ஏற்று வரிசை யுகத்தை இல்லாதொழித்தார்.

நாட்டின் பொருளாதாரத்தை மீட்டு, இவ்வாறான வீடுகளை எமக்கு வழங்கியமைக்காக ஜனாதிபதிக்கு நாம் நன்றி தெரிவிக்கிறோம். எங்கள் வீடுகள் தீக்கிரையான பின்னர், 200 குடும்பங்கள் 14 ஆண்டுகளாக ஒரு சிறிய கூடாரங்களில் வசித்து வந்தன. அதற்கு தனிமனித சுதந்திரம் கேள்விக்குறியானது. இன்று எமக்கான வீடு கிடைத்துள்ளது. அதேபோல் மாத வாடகை பெறுவதை நிறுத்தியுள்ளமை பெரும் நிவாரணமாகும்" என்று தெரிவித்தார்.



துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, சப்ரகமுவ மாகாண ஆளுநர் சட்டத்தரணி நவீன் திசாநாயக்க, பாராளுமன்ற உறுப்பினர்களான ஏ.எச்.எம்.பௌசி, மேல்மாகாண மற்றும் மாநகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் சத்தியானந்த சுபசிங்க, ஜனாதிபதி தொழிற்சங்க அலுவல்கள் பணிப்பாளர் நாயகம் சமன் ரத்னபிரிய உள்ளிட்ட பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

(ஜனாதிபதி ஊடகப் பிரிவு)

# தமிழகம் இழந்துள்ள சிறந்த தலைவர்களில் ஒருவர் ஆர்.எம்.வி

எம்.ஜி. ஆரின் இதயக்கனி, புரட்சித் தலைவரின் மனசாட்சி என்றெல்லாம் போற்றப்பட்ட அருளாளர் இராம வீரப்பன் தமிழக அரசின் அறநிலையத்துறை அமைச்சராக இருந்த காலம் அது .

சென்னை எழும்பூர் இம்பிரியல் ஹோட்டலில் நடைபெற்ற கவிதை உறவு ஆண்டுவிழாவில் அதன் அமைப்பாளர் ஏர்வாடியாரின் தொண்டரடிப்பொடியாழ்வாராக இருந்த நான், அருளாளர் திருக்கரங்களால் பாராட்டுப் பெற்ற போது தமிழக அரசே பாராட்டியது போன்று மகிழ்ச்சியில் திளைத்தேன்.

அருளாளர் அவர்களுக்கு எப்போதுமே பத்திரிகையாளர்கள் மீது மிகுந்த மரியாதை உண்டு. குறிப்பாக சிற்றிதழ்களை படித்துப் பாராட்டுவது அவருடைய சிறந்த பண்பாடு. அந்த வகையில் நம் 'உரத்த சிந்தனை' மாத இதழுக்கு வாழ்நாள் உறுப்பினர் கட்டணம் வழங்கி ஆதரவு தந்தார்.

எம்.ஜி.ஆர் மறைவுக்குப் பின்னர் அ.தி.மு.க ஜெ அணி, ஜா அணி எனப் பிரிந்த போது, புரட்சித் தலைவரின் மனைவி ஜானகி அம்மாவை அவரது அடுத்த வாரிசாக அறிமுகப்படுத்தி அரசியலில் அவரை ஈடுபட வைத்ததில் வீரப்பன் அவர்களுக்கு பெரும் பங்குண்டு

தாய் வார இதழின் பதிப்பாளர் எம். ஜி.ஆரின் வளர்ப்பு மகனாக விளங்கய அப்பு என்கிற ரவீந்திரன், ஆசிரியர் வலம்புரி ஜான் உட்பட அனைவரும் ஜானகி அணியின் பின் திரண்டனர்.

அப்போதெல்லாம் இப்போது உள்ளது போல் கருத்துக் கணிப்பு எல்லாம் கிடையாது

எம்.ஜி.ஆரின் மனைவி என்னும் நன் மதிப்பு, ஆர்.எம்.வி யின் வழிகாட்டல், புதிதாய் கட்சி ஆரம்பித்த சிவாஜி கணேசன் மீது மக்களுக்கு உள்ள மரியாதை, இரட்டை இலைக்கு பதிலாக இரட்டைப் புறா சின்னம்...

இவற்றையெல்லாம் கணக்கில் கொண்டு அப்போது எனக்கிருந்த அரசியல் அறிவைக் கொண்டு 'அடுத்த முதல்வர் ஆர்.எம்.வி' என்று ஒரு கட்டுரையை எழுதி தாய்க்கு அனுப்ப... அதிரடியாய்

ஆர். எம்.வி அவர்களின் முகத்தை அட்டைப்படத்தில் தாங்கி அந்தக் கட்டுரை பிரசுரமானதும் "ஆஹா! நாம் கூட அரசியல் பத்திரிகையாளர் ஆகலாமோ" என்று மனம் ஆனந்தத்தில் குதித்தது,

அதற்கப்புறம் நடந்ததெல்லாம் உலகத்துக்கே தெரியும்.

உரத்த சிந்தனையின் 24 ஆவது ஆண்டு விழா மலருக்கு வாழ்த்துக் செய்தி வாங்கவும் விழாவுக்கு அவரை அழைக்கவும் அவரை சந்திக்க அவ்வை சண்முகம் சாலையில் உள்ள அவரது இல்லத்துக்குச் சென்ற போது, எழுந்து நின்று அன்புடன் வரவேற்றுப் பேசினார்.



அந்தக் கட்டுரையைப் பற்றிச் சொன்னபோது, அவரது வலக்கையால் என் முதுகில் தட்டி "அந்த வேலை உங்களுடையதா?" என்று சிரித்தபடியே கேட்டு விட்டு எம். ஜி. ஆரின் சில பண்புகளை மகிழ்ச்சி பொங்கக் கூறினார். விடைபெற்ற போது எழுந்து நின்று "கட்டாயம் விழாவுக்கு வருகிறேன்" என்று சொல்லி விடை தந்தார்.

இரண்டு நாட்களுக்குள் வாழ்த்துச் செய்தியை தபாலில் அனுப்பியதோடு "நான் எழுதியிருப்பது போதுமா?" என்றுவேறு தொலைபேசியில் கேட்டதும் "அட... இத்தனை பண்புடையவர் என்பதால்தான் புரட்சித்தலைவரின் இதயக்கனியாய் விளங்கினாரோ?" என்று பாராட்டத் தோன்றியது.

18.02.2007 சென்னை மயிலாப்பூர் தட்சிணாமூர்த்தி அரங்கில் அய்யா அவ்வை நடராசன் தலைமையில் நடைபெற்ற உரத்த சிந்தனையின் 24 ஆவது ஆண்டு விழாவில் மலர் வெளியிட்டு, விருதுகள் வழங்கி, 25 நிமிடங்கள் அரசியல் கலக்காத இலக்கியம் ததும்ப ததும்ப பேசி கைத்தட்டல்களை அள்ளினார் ஆர்.எம்.வி. பின்பு கம்பன் கழகத் தலைவராக தேர்வு பெற்றதற்காக ஒரு முறையும், 90ஆவது பிறந்த நாளின் போதும் அவரை சந்தித்து ஆசி பெற்றேன்.

திரைப்படம், அரசியல், இலக்கியம் என்ற மூன்று துறைகளிலும் ஆளுமையாக விளங்கிய போது ஆர்ப்பரிக்காத எளிமையும் அன்பும் கொண்டதால் அருளாளர் என்ற சொற்றொடர் ஆர். எம். வி அவர்களால் பெருமைப்பட்டது.

தமிழகம் நல்ல தலைவர்களை இழந்து வருவது வேதனைக்குரியது.

எம்.ஜி.ஆர் தன் இதயக்கனியை தான் இருக்கும் இடத்துக்கு அழைத்துக் கொண்டார்.

உதயம் ராம்

# வவுனியாவில் 100 ஏக்கரில் கிறிஸ்தவ எழுப்புதல் மையம்

## டொரன்டோ ரிவைவல் கொஸ்பல் ஆலய தலைமைப் போதகர் வண. பிதா கலாநிதி பிலிப் கிறிஸ் கனகரத்னம் தலைமையில் இன்று திறப்பு விழா









கனடாவிலுள்ள, டொரன்டோ ரிவைவல் கொஸ்பல் கிறிஸ்தவ தேவாலயத்தின் தலைமைப் போதகர் வணக்கத்திற்குரிய பிதா கலாநிதி பிலிப் கிறிஸ் கனகரத்னம் வடமாகாணத்தில், வவுனியா, ஈச்சங்குளம், பாடசாலை வீதி எனும் முகவரியில் கிறிஸ்தவ எழுப்புதல் மையம் ஒன்றை அமைத்துள்ளார். இந்த மையம் இன்று காலை 10 மணிக்கு மிக பிரமாண்டமாக திறந்து வைக்கப்படவுள்ளது.

100 ஏக்கர் நிலப்பரப்பில் இந்த மையம் அமைக்கப்பட்டுள்ளது.வறிய மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கும் அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை செய்து கொடுப்பதற்கும், கல்வி, சுகாதாரம் ஆகிய துறைகளில் அவர்களை மேம்படுத்தவும் ஆன்மீகத்துறையில் அவர்களுடைய எதிர்காலத்தை வளப்படுத்திக் கொள்வதற்கு வழி ஏற்படுத்திக் கொடுப்பதும் இந்த மையத்தின் முக்கிய பணிகளாக இருக்கும். குறிப்பாக போதைவஸ்துக்கு அடிமையாகி தங்களுடைய வாழ்க்கையை சீரழித்துக் கொண்டிருக்கும் இளைஞர்களையும் யுவதிகளையும் நல்வழிப்படுத்தி அவர்களின் எதிர்காலத்தை சீராக்குவதும் இந்த மையத்தின் பிரதான பணியாகவும் இருக்கும்.

வவுனியா, பாடசாலை வீதி, ஈச்சங்குளம் எனும் இடத்தில் அமைக்கப்பட்டுள்ள எழுப்புதல் மையத்தின் திறப்பு விழாவில் கலந்து கொள்வதற்காக கனடா, டொரன்டோ ரிவைவல் கொஸ்பல் கிறிஸ்தவ தேவாலயத்தின் தலைமைப் போதகர் வணக்கத்திற்குரிய பிதா கலாநிதி பிலிப் கிறிஸ் கனகரத்னமும் அவர்களுடைய குழுவினரும் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

இத்திறப்புவிழாவில் கிட்டத்தட்ட 300க்கும் அதிகமான கிறிஸ்தவ மதப் போதகர்களும் பக்தர்களும் கலந்து கொள்ளவுள்ளனர். வவுனியா மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் சமந்த டி விஜேசேகர மற்றும் அரச அதிகாரிகள் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

# அவதானிக்கவும்

## புதிய வாகனங்களின் ஏற்றுமதிக்கு இன்றே விண்ணப்பிக்கவும்!

## SLTDA இல் பதிவு செய்யப்பட்ட சுற்றுலா அமைப்புகள்:

சுற்றுலா பயணிகளின் போக்குவரத்துக்காக புத்தம் புதிய வாகனங்களை இறக்குமதி செய்ய வசதி அளிப்பதன் மூலம் சுற்றுலா துறைக்கு ஆதரவு வழங்கும் நோக்குடன் சிறப்புத் திட்டம் ஒன்றை இலங்கை அரசாங்கம் உற்சாகத்துடன் அறிவிக்கிறது.

### ஏன் நீங்கள் விண்ணப்பிக்க வேண்டும்?

- உங்களின் வாகன கட்டமைப்பை மேம்படுத்தல்:
- பரந்த தேர்வு: தேர்வு செய்யுங்கள்
  - வேன்கள் (6-15 இருக்கைகள்)
  - Mini-coaches (6-30 இருக்கைகள்)
  - coaches (30-45 இருக்கை

(பொருத்தமான மின்/ கலப்பு (electric/hybrid) தேர்வுகள் உள்ளடங்கும்)

குறிப்பு

1. இந்தத் திட்டம் வாகனங்களின் மட்டுப்படுத்தப்பட்ட ஒதுக்கீட்டை கொண்டிருக்கும் (கட்டம் 1 இல் 1,000). முன்கூட்டியே விண்ணப்பித்து ஒப்புதலுக்கான வாய்ப்பை அதிகரித்துக்கொள்ளுங்கள்.
2. இறுதித் திகதிக்குள் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படும் என்பதோடு, இறுதித் திகதிக்குப் பின்னர் சமர்ப்பிக்கப்பட்ட அல்லது முழுமைபெறாதது என கருதப்படும் எந்த ஒரு விண்ணப்பமும் விண்ணப்பதாரருக்கு அறிவிக்கப்படாது நிராகரிக்கப்படும்.

**விண்ணப்ப இறுதித் திகதி: 2024 மே 30**



### தலைமை அளவுகோள்

இந்தத் திட்டத்தில் பங்கேற்பதற்கு, பின்வரும் தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்:

- SLTDA பதிவு: 2024 ஜனவரி 1ஆம் திகதிக்கு இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையுடன் (SLTDA) 5 ஆண்டுகளுக்கு மேல் பதிவு செய்யப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- செல்லுபடியான 2024 உரிமம்: SLTDA இனால் வழங்கப்பட்ட 2024 ஆம் ஆண்டுக்கான செல்லுபடியான உரிமம் ஒன்றை பெற்றிருத்தல் வேண்டும்.
- TDL இணக்கம்: இதுவரை சுற்றுலா மேம்பாட்டு வரியை (TDL) செலுத்தி இருத்தல் வேண்டும்.
- அந்நியச் செலாவணி ஈட்டல்: செயற்பாட்டில் உங்களது ஆண்டுகள் அடிப்படையில் குறைந்தபட்ச அந்நியச் செலாவணி ஈட்டல் தேவையை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். (அளவுகோலை பார்க்கவும்)

### எவ்வாறு விண்ணப்பிப்பது:

1. அளவுகோல்களை விரிவாக மீளாய்வு செய்யவும்: திட்ட விபரங்கள் மற்றும் விண்ணப்ப அளவுகோல்களுக்காக முன்மொழியப்பட்ட அளவுகோலை பார்க்கவும்.
2. ஒன்லைன் மூலம் விண்ணப்பிப்பது: 2024 ஏப்ரல் 19 ஆம் திகதிக்குப் பின்னர் பின்வரும் SLTDA இணையதளத்தில் உங்களது விண்ணப்பத்தை சமர்ப்பிக்கவும்.

**www.sltda.gov.lk**

**இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை**
**சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு**

# INVITATION FOR BIDS (IFB)

## DEPARTMENT OF LOCAL GOVERNMENT, NORTHERN PROVINCE

## MUSALI PRADESHIYA SABHA

## WORLD BANK/EU FUNDED

## LOCAL DEVELOPMENT SUPPORT PROJECT

1. The Democratic Socialist Republic of Sri Lanka has received a Loan/Credit from World Bank (WB)/EU towards the cost of Local Development Support Project (LDSP), and intends to apply part of the proceeds of this Loan/Credit to payments under the LDSP PT3 to the below mentioned Contracts.
2. The Chairman, Local Authority Procurement Committee (LAPC) on behalf of Musali Pradeshiya Sabha now invites sealed bids from eligible and qualified bidders for the Work(s) listed in the table below;

| No | Contract No. | Name of the Contract | Estimated Civil Cost (Rs. Mn) | Required CIDA Grade | Required Bid Security | | Contract Period | Bid Validity Period |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | Bid Bond Amount (Rs.) | Validity Period | | |
| 01 | LDSP/NP/ MN/ MUPS/2024/ PT3/01 | Construction of Shopping Units at Chilawaththurai | 13.842 | Building C6 or above | 210,000.00 | 28.08.2024 | 119 Days | 31.07.2024 |
| 02 | LDSP/NP/ MN/ MUPS/2024/ PT3/03 | Re-Construction of Vellimalai School Road | 3.791 | Road C8 or above | 60,000.00 | 31.07.2024 | 84 Days | 03.07.2024 |
| 03 | LDSP/NP/ MN/ MUPS/2024/ PT3/04 | Construction of Sinhala Puthukudiyiruppu Beach Road | 7.472 | Road C7 or above | 115,000.00 | 28.08.2024 | 84 Days | 31.07.2024 |


3. Bidding will be conducted through **National Competitive Bidding (NCB)** Procedure.
4. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been required valid CIDA Registration in Building Construction / Road for the Grade mentioned in the table above and possess valid Business or Company Registration.
5. Qualification requirements to qualify for contract award are given in Section 4 (Qualification Information) and Section 5 (Bidding Data/Schedule)in the Bidding Document.
6. Interested bidders may obtain further information from Chairman, Musali Pradeshiya Sabha, Chilawathurai, Mannar [Telephone No: 023-2223871 / Fax No: 023-2051672/ Email ID: musalips@gmail.com] and inspect the Bidding Documents at the address: Musali Pradeshiya Sabha, Chilawathurai, Mannar from 08:30 hrs to 15:00hrs on normal working days.
7. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on submission of a written application to the Chairman, Musali Pradeshiya Sabha,Chilawathurai, Mannar from 12th of April 2024 until 02nd of May 2024 from 09:00 hrs to 15:00 hrs on normal working days upon payment of a non-refundable fee of Rupees Four thousand /Rupees Three thousand five hundred as per the Estimated civil cost (Rs. 4,000.00 /Rs. 3,500.00). The method of payment will be by Cash.
8. Bids shall be delivered with duplicate to the address: Chairman, Musali Pradeshiya Sabha, Chilawathurai, Mannar on or before 03rd May 2024 at 10:30 hrs. Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.
9. All bids shall be accompanied by a Bid Security, as mentioned in the table above. Bid Security shall be valid up to the date mentioned in the table above, shall be same in the Sub Clause 16.2 of Section 5 (Bidding Data) / Schedule Clause 16.
10. The Pre-bid Meeting will be held on 24th of April 2024 at 10:30 hrs at the Main Office of Musali Pradeshiya Sabha, Chilawathurai, Mannar.

The address(es) referred to above is(are):

**Chairman,**
**Local Authority Procurement Committee (LAPC)**
**Musali Pradeshiya Sabha**
**Chilawathurai, Mannar.**
**Tel No : 023-2223871**
**Fax No : 023-2051672**
**Email ID : musalips@gmail.com**

## நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு

# நகர அபிவிருத்தி அதிகார சபை




**கலப்பு அபிவிருத்தித் திட்டம்**
**பெரஹெர மாவத்தை, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.**

### ஆவணங்கள் வழங்கப்படுதல்

இதில் ஆர்வம் காட்டும் விண்ணப்பதாரர்கள் தொடர்புடைய மேலதிக தகவல்களை உள்ளடக்கிய முதலீட்டுப் பிரேரணைகள் கோரும் ஆவணமொன்றை பெற்றுக்கொள்வதற்கு (வரிகள் உள்ளடக்கிய) மீளளிக்கப்படாத 100,000.00 ரூபா தொகையை பத்தரமுல்ல, செத்சிறிபாய, கட்டம் 1, 6வது மாடியில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகார சபையின் நிதிப் பிரிவிற்குச் செலுத்தி, செத்சிறிபாய, கட்டம் 1, 8ஆம் மாடியில் அமைந்துள்ள அந்த அதிகார சபையின் ஆதன முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்திப் பிரிவிலிருந்து 2024-04-18ஆம் திகதி முதல் 2024-05-17ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் பெற்றுக்கொள்ளலாம்.

விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் செத்சிறிபாய, கட்டம் 1, 9வது மாடியில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகார சபையின் கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

கிடைக்கப்பெற்றுள்ள தொழில்நுட்ப முன்மொழிவுகள் பத்தரமுல்ல "செத்சிறிபாய - கட்டம் II", 12ஆம் மாடியில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் பணிப்பாளர் (தொழில்நுட்பம்) அவர்களின் அலுவலகத்தில் உடன் திறக்கப்படும். இதில் விலைமனுதாரர் அல்லது அவரது பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.

**காணியின் அளவு:**
00ஏ - 2 ரூட் - 35.95 பேர்ச் (0.2933 ஹெக்டயார்)

**குத்தகைக் காலம்:**
99 வருட குத்தகை அடிப்படையில்

**மாற்றுவழி கொடுப்பனவு முறைகள்**

மாற்றுவழி 01 -
முதலீட்டாளர் குத்தகை தவணையின் 25% வீதத்தை அபிப்பிராய கடிதம் (LOI) வழங்கப்பட்ட நாள் முதல் 30 நாட்களுக்குள்ளும் மற்றும் மிகுதியை (75%) ஆரம்பக் கொடுப்பனவு நாள் முதல் 30 நாட்களுக்குள் செலுத்தி முடிக்கப்படல் வேண்டும்.

மாற்றுவழி 02 -
முதலீட்டாளர் குத்தகை தவணையின் 25% வீதத்தை அபிப்பிராய கடிதம் (LOI) வழங்கப்பட்ட நாள் முதல் 30 நாட்களுக்குள்ளும் மற்றும் வழங்கப்படும் வருடாந்த தவணையை 10 வருடங்களுக்குள் சமமான வருடாந்த தவணை அடிப்படையிலும் அறவிடப்படும்.

**அடிப்படை விலை:**
மாற்றுவழி 01 - ரூபா: 1,314,157,437.00
மாற்றுவழி 02 - 25% : ரூபா 324,875,000.00
75% : ரூபா 132,426,970.00
(சமமான 10 வருடாந்த தவணை)

**பிணை முறி ரூபா:**
20,000,000.00

**விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம்:**
2024-04-26ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு

**விலைக்கோரல் முடிவுறுத்தல்:**
2024-05-31ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு

**மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்ளவும்:**
பணிப்பாளர் (ஆதன அபிவிருத்தி), ஆதன அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ பிரிவு,
நகர அபிவிருத்தி அதிகார சபை, 8ஆம் மாடி,
செத்சிறிபாய, கட்டம் 1,
பத்தரமுல்ல.

தொலைபேசி: 011-2875921, 011-3611950 மற்றும் 011-2875916-20 நீடிப்பு 2960-2967
தொலைநகல் இல. 011-2875900
மின்னஞ்சல் முகவரி : directorred@uda.gov.lk
இணைய தளம் : www.uda.gov.lk

தலைவர், அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையான பேச்சுவார்த்தை இணைக்கக் குழு, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு, 12ஆம் மாடி, செத்சிறிபாய கட்டம் 11, பத்தரமுல்ல.

(05 ஆம் பக்கத் தொடர்)

# புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - II

41. மணமுடைய பூ
i. பவளமல்லிகை ii. அந்தூரியம் iii. செவ்வரத்தை

42. நுளம்புகள் எமது அருகில் வருவதைத் தவிர்ப்பதற்காக உடம்பில் பூசுவதற்குப் பொருத்தமான எண்ணெய்
i. மரக்கறி எண்ணெய் ii. நல்லெண்ணெய்
iii. சித்திரனெல்லா புல் எண்ணெய்

43. ஆழமான கிணற்றிலிருந்து நீரை மேலே எடுக்கும் வேலையை இலகுவாக்கும் பொறி எது?
i. நீர்ச்சில்லு ii. பற்சில்லு iii. கப்பி

44. மகாவலி ஆறு கடலுடன் சேரும் இடத்தை அண்டிய நகரம் எது?
i. திருகோணமலை ii. மட்டக்களப்பு iii. முல்லைத்தீவு

45. மரவேலைப்பாடுகளுக்குப் பிரசித்தி பெற்ற இடம்
i. யாப்பகூவ காவலரண் ii. லோவாமஹாபாய iii. முல்லைத்தீவு

46. இலங்கை மக்களால் சுதந்திரதினம் கொண்டாடப்படுவது
i. ஜனவரி 01 ஆந் திகதி ii. பெப்ரவரி 04 ஆந் திகதி
iii. ஏப்ரல் 13 ஆந் திகதி

47. இலங்கையின் தேசியக்கொடி, அரச இலச்சினை ஆகிய இரண்டிலும் காணப்படும் குறியீடு எது?
i. பூவிதழ்கள் ii. நிறைகுடம் iii. அரச இலைகள்

48. எல்லா இலங்கை நாணயத்தாள்களிலும் காணப்படும் ஒரு பொது இயல்பு
i. நிறைகுடத்தின் உருவம் காணப்படல்
ii. நீர்வீழ்ச்சியின் உருவம் காணப்படல்
iii. இலங்கை மத்திய வங்கி எனக் குறிப்பிடப்பட்டிருத்தல்

49. ஒலிம்பிக் கொடியில் காணப்படும் வளையங்களின் நிறங்களுள் மூன்றைக் குறிக்கும் விடையைத் தெரிவு செய்க.
i. சிவப்பு, நீலம், மஞ்சள் ii. கறுப்பு, பச்சை, கபிலம்
iii. சிவப்பு, கறுப்பு, ஊதா

50. தபால் பெட்டியில் குறிப்பிடப்பட்டிருப்பது
i. திறந்து வைத்தவரின் பெயர் ii. கடிதங்கள் எடுக்கும் நேரம்
iii. கடிதம் கொண்டிருக்க வேண்டிய கூடிய நிறை

51. மின்குமிழைக் கண்டுபிடித்த பெருமைக்குரியவர்
i. ஜோன் லொகி பெயார்ட் ii. சேர். சி. கிளாக்
iii. தோமஸ் அல்வா எடிசன்

52. கிழங்குத் துண்டுகளை நடுவதன் மூலம் பெறப்படும் தாவரம்
i. மரவள்ளி ii. உருளைக்கிழங்கு iii. முள்ளங்கி

53. காக்கிச் சட்டையும், தொப்பியும் அணிந்து தொழிலில் ஈடுபடுபவர்
i. பொலிஸ்காரர் ii. தபால் அதிபர் iii. சட்டத்தரணி

54. இலங்கை தேசிய இலச்சினையில் உள்ள சூரியனும், சந்திரனும் குறித்து நிற்பது
i. தார்மீகத்தை ii. நிலைத்திருப்பதை iii. தன்னிறைவை

55. போதைப் பொருள் தொடர்பாக அறிவிக்க வேண்டிய தொலைபேசி இலக்கம்
i. 1919 ii. 1929 iii. 1948

56. காலை வேளையில் வானவில்லை காணக் கூடிய திசை
i. வடக்கு ii. மேற்கு iii. கிழக்கு

57. சிங்கராஜா வனம் அமைந்துள்ள மாகாணம்
i. தென் மாகாணம் ii. ஊவா மாகாணம் iii. சப்ரகமுவ மாகாணம்

58. சந்தையில் தரமற்ற பொருட்களை விற்பனை செய்வதற்கு எதிராக அழைக்க வேண்டிய தொலைபேசி இலக்கம்
i. 1997 ii. 1969 iii. 1955

59. உணவைச் சுவையூட்டப் பயன்படுவது
i. இஞ்சிக் கிழங்கு ii. மரவள்ளிக் கிழங்கு iii. வள்ளிக் கிழங்கு

60. ‘நாம் சென்ற கல்விச் சுற்றுலா’ எனும் தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும்.

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

## கடந்த வார (05.04.2024) வினாத்தாள் I இற்கான விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 2 | 11. | 3 | 21. | 1 | 31. | 2 |
| 02. | 2 | 12. | 1 | 22. | 2 | 32. | 3 |
| 03. | 2 | 13. | 2 | 23. | 1 | 33. | 1 |
| 04. | 2 | 14. | 2 | 24. | 3 | 34. | 2 |
| 05. | 3 | 15. | 3 | 25. | 3 | 35. | 2 |
| 06. | 2 | 16. | 1 | 26. | 2 | 36. | 1 |
| 07. | 2 | 17. | 1 | 27. | 3 | 37. | 2 |
| 08. | 3 | 18. | 3 | 28. | 3 | 38. | 2 |
| 09. | 1 | 19. | 2 | 29. | 3 | 39. | 3 |
| 10. | 1 | 20. | 2 | 30. | 2 | 40. | 3 |

# பவள விழாக்காணும் 'நூற்றாண்டின் குரல்' B.H. அப்துல் ஹமீட்



தென்னிந்தியாவின் டிஜிட்டல் ஊடகத்துறையில் முன்னணியாகத் திகழும் பிளக்சீப் குடும்பம் அண்மையில் இந்த 'நூற்றாண்டின் குரல்' என்ற விருதினை B.H. அப்துல் ஹமீட் அவர்களுக்கு வழங்கியது.உண்மையில் இன்று பவள விழாக் காணும் B.H. இந்த நூற்றாண்டின் என்றுமே அழியாத பரவசக் குரலாக திகழ்கின்றார். உலக அறிவிப்பாளர்,சர்வதேச புகழ் அறிவிப்பாளர் என்றெல்லாம் நாடு கடந்த புகழ் பெற்ற ஒலிபரப்பாளராக அவர் பெயர் பெற்றிருக்கின்றார். இந்த நாடு கடந்த ஒலிபரப்புச் சேவைக்காக அவர் அததெரனவின் விருதினையும் பெற்றமை குறிப்பிடத்தக்கது. இது மாத்திரமன்றி உலகின் பல்வேறு நிறுவனங்கள் அவரை விருது அளித்து கௌரவித்திருக்கிறன. இந்த தமிழ்க் குரலுக்கு ஒரு நீண்ட வரலாறு உண்டு.

சுமார் அரை நூற்றாண்டுக்கு முன்னர் சிறுவர் உலகத்தை அதிகம் கவர்ந்த 'சிறுவர் மலர்' என்ற நிகழ்ச்சியின் ஊடாக வானொலி உலகிற்கு அறிமுகமான அவர் பின்னர் வானொலித்துறையில் நிரந்தரமாகப் பணியாற்றி இந்த விருதுபெறும் அளவுக்கு தன் பெருமையை உலகெங்கும் பதித்துள்ளார். இந்த உன்னதமான தமிழின் உச்சரிப்பு கொழும்புக்கு சொந்தமானது என்றால் அதனை நாம் நம்பவே முடியாது. கொழும்பு 09 இல் உள்ள தெமடகொட என்ற பிரதேசத்தில் தென்னிந்தியாவைச் சேர்ந்த பாவா ஹஸன் இலங்கையைச் சேர்ந்த ஆசியா உம்மா என்ற கலவைக்கு மகவாக சித்திரைத்திங்கள் 11 ஆம் நாள் 1949 ஆம் ஆண்டு பிறந்தவர். தமிழில் உள்ள பற்றின் காரணமாக அவர் 'தெமட கொட' என்பது 'தெமள கொட' ஆக இருந்திருக்க வேண்டும் என்று தன்னுடைய 'வானலைகளில் ஒரு வழிப்போக்கன்' என்ற புகழ் பெற்ற நூலில் குறிப்பிடுகின்றார். இந்தியாவில் இருந்து வந்த தமிழர் கூட்டம் வாழ்ந்த பகுதி அது என்பதனால் அப்பெயர் இருந்திருக்க வேண்டும் என அவர் வரையறுக்கிறார்.

தான் பிறந்த இப்பிரதேசத்தை அவர் 'தமிழர் கொடை' என்று குறிப்பிடுவார்.இவையாவுமே B.H. அப்துல் ஹமீட்டுக்கு தமிழிலே இருந்த பற்றினைக் காட்டுகிறது. அந்தத் தமிழாலே தான் அவர் இன்று உலகமெல்லாம் பெயர் பெற்றிருக்கின்றார்.அந்தப் பிரதேசத்தின் ஒரு ஏழைக் குடிசையின் மகனாக இருந்து பக்கத்தில் இருந்த தமிழ்ப் பாடசாலையில் கல்வி பயின்று பாடசாலையின் நாடகங்களிலும் பேச்சுப்போட்டிகளிலும் பங்கு பற்றி வானொலி உலகை கண்டவர் தான் அப்துல் ஹமீட். தேசிய சேவையின் சிறுவர் மலர், இளைஞர் மன்றம், நாடகம், உரைச்சித்திரம் முதலானவற்றிலும் முஸ்லிம் சேவையின் நாடகம்,உரைச்சித்திரம் என்பனவற்றிலும் கல்விச் சேவையிலும் கடமையாற்றி வீட்டுக்கு உழைக்கும் இளைஞனாக அவர் மாறினார். அதன் மூலம் தன் தாயின் துன்பத்துக்கு விடை கொடுத்தார்.இவர் வானொலி அறிவிப்பாளராக சேர்ந்த காலம் முக்கியமானது. எஸ்.கே.பரராஜசிங்கம் என்ற புகழ்பெற்ற அறிவிப்பாளர் இவருக்கு பயிற்சி வழங்கினார். இந்த காலத்தில் பல்வேறு வானொலி சேவைகளிலும் ஒலிவாங்கியை கையில் எடுத்ததும் பெரும் அறிவிப்பாளர்களாக தம்மை கற்பனை பண்ணிக் கொள்பவர்கள்தான் அதிகம் உளர்.

இலக்கணப் பிழையற எழுதி ஒரு முறைக்கு இருமுறை வாசித்துப் பார்த்து வசனங்களின் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என்பனவற்றை அறிந்து கடமையாற்ற அக்கால இளைஞர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டது.அழுத்தம் கொடுக்க வேண்டிய இடங்களில் அழுத்தம் கொடுத்து சந்தி பிரித்து வாசிக்கவும் அவர்கள் பழக்கினர். தகவல்களைத் தேடவும் தகவல்களை விரல் நுனியில் வைத்திருக்கும் ஆர்வத்தினையும் வளர்த்தனர். இதற்கெல்லாம் அவர்கள் ஒரு பெரிய அர்ப்பணத்தினைச் செய்திருக்கின்றனர். நூலகத்தினை தமது வாசஸ்தலமாகக் கொண்டிருக்கின்றனர். இவ்வாறு பெற்ற பயிற்சி அவரை உன்னதமான அறிவிப்பாளர்களாக காலமெல்லாம் நிலைத்திருக்கச் செய்தது.

ஈழத்து முஸ்லிம்கள் தமிழுக்கு முக்கிய பங்கினை ஆற்றியிருக்கின்றார்கள் குறிப்பாக இலக்கியம் என்ற அளவிலே இந்த முக்கியத்துவத்திற்கு அதிக உதாரணங்களைக்காட்ட முடியும். அதே போன்று ஒலிபரப்புத்துறைக்கு முக்கிய பங்காற்றியவர் என்ற வகையிலே B.H. அப்துல் ஹமீட் குறிப்பிடத்தக்கவர். தமிழ் எங்களுடையதும் என்பதற்கான உன்னதமான சாட்சியாக அவர் திகழ்கிறார். ஈழத்தமிழின் பல்துறைப்பாங்கை அவரை விடுத்து எழுத முடியாது.

வானொலி என்ற ஊடகம் ஒவ்வொரு வீட்டினரதும் விருந்தாளியாகும். வானொலி சேவையை வீட்டில் மாத்திரமன்றி வீதியிலும் ஆழ்கடலிலும் எந்தப் பொழுதிலும் அனுபவித்து இன்புற முடியும். படித்தவர் முதல் பாமரர் வரை அதன் ரசிகர்கள் அதிகம் பேரிருப்பர். சிறியவர்களையும் பெரியவர்களையும் இளைஞர்களையும் யுவதிகளையும் அதிகம் அது கவர்ந்திருந்தது. இந்தத் தன்மையினால் வயது வித்தியாசமின்றி பால் வேறுபாடின்றி எல்லோரையும் கவர்ந்த ஓர் அறிவிப்பாளராக B.H. அப்துல் ஹமீட் வலம் வந்தார். உண்மையில் தமிழின் உன்னதமான சாட்சியாக அவர் திகழ்ந்தார். அந்த பங்களிப்பினை – சாட்சியத்தினை நாம் பலவாறு குறிப்பிட முடியும்.

'ஒரு வீடு கோயிலாகிறது'என்ற வானொலி நாடகத்தின் மூலம் அவர் அதிகம் புகழ்பெற்றார். பிரபலமான தென்னிந்திய கலைஞர்கள் கூட இவரது நாடக ரசிகனாக – குரல் ரசிகனாக இருந்திருக்கின்றார்கள். அப்துல் ஹமீட் 'குயில்பாட்டு','தேவனே உன் குரல்','ரோமியோ ஜூலியட்','யாழ்பாடி' முதலான பா நாடகங்களை தயாரித்து அளித்ததன் மூலம் அவர் அதிகம் புகழ் பெற்றார். அதே வேளை 'ஊசியும் நூலும்' என்ற மேடை நாடகத்தையும் தயாரித்திருந்தார். அவர் இப்பணிகள் மூலம் பிரபலமான இலக்கியங்களை மக்களுக்கு கொண்டு செல்கின்ற மகத்தான பணியினை அவர் நிறைவேற்றியிருக்கிறார். மேலும் 'கோமாளிகள் கொண்டாட்டம்', 'அனிச்சமலர்' முதலான நாடகங்களைத் தயாரித்து திரைப்படத்துறைக்கும் அவர் பங்காற்றியுள்ளார். பிரபலமான இந்திய நடிகர்களை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் சார்பாக பேட்டி கண்டு நாடக – திரைப்படம் சார்பான அறிவினை வளர்ப்பதில் மிகப் பெரும் பங்களிப்புச் செய்துள்ளார். அது போல தமிழ் இசைத்துறைக்கும் அவரது பங்களிப்பு முக்கியமானதே.

தமிழ் சினிமா பாடல்கள் மாத்திரம் வானொலியை ஆக்கிரமித்த காலத்தில் மெல்லிசைப்பாடல்களையும் அறிமுகப்படுத்தி நேயர்களுக்கு மத்தியில் அதிக வரவேற்பைப் பெற்றுக் கொண்டார். 'மெலிபன் கவிக்குரல்' என்ற பெயரில் இந்நிகழ்ச்சியினை அறிமுகப்படுத்தினார். வாய்மொழி இலக்கியமாக இருந்து வந்த இசை வடிவத்தை புது மெட்டமைத்துப் பாடுகிற ஒரு முறைமையை ஏற்படுத்தினார். இந்நிகழ்ச்சியை ஒழுங்கமைப்பதில் பரராஜசிங்கம் அதிகம் ஒத்துழைப்பு வழங்கினார். 'அரிசிப் பொதியோடு வந்தீரோ தங்கம் ''கிண்ணிபோல் சந்திரரும் கிழக்கில் பார்த்த சூரியரும்', 'தென்னை மரத்துப் பாளைக்குள்ளே ரெண்டு தேர இருந்து முளிக்கிதுபார்' ஆகிய பாடல்கள் அன்றைய நிகழ்ச்சியில் முதலில் ஒலிபரப்பானது இந்த வரலாற்றுப் பதிவு B.Hக்கு மாத்திரமே தெரிந்தது. இது போன்று பொப்பிசைப் பாடல்களையும் இலங்கை வானொலியில் ஒலிபரப்புவதில் அவர் அதிகம் பங்கெடுத்திருக்கின்றார். அந்த காலத்தில் மக்கள் மயப்பட்ட இப்பாடல்கள் தொடர்பாக அறிவியல் சிந்தனைகளையும் பேராசிரியர் சிவத்தம்பி, கைலாசபதி ஆகியோரின் பங்கு பற்றுதலுடன் ஊக்குவித்தார். இதற்கப்பால் அவருடைய அளிக்கைப்பணி முக்கியமானது. வேறு எந்த வானொலிக் கலைஞரையும் விட தமிழைப் பொறுத்த வரையில் இந்த பணியை செம்மையாகச் செய்தவர் B.Hஅப்துல் ஹமீட் அவர்கள் என பேராசிரியர் சிவத்தம்பி குறிப்பிடுவார். நவரசக் கோவை, இசையணித் தேர்வு, ஆம் அல்லது இல்லை நிகழ்ச்சி, ஏசியாவின் ஏழு கேள்விகள், அருணாவின் ஆறு கேள்விகள், இசைக் கோலம் போன்ற நிகழ்ச்சிகளெல்லாம் இவருடைய அளிக்கை அறிவுக்கு சிறந்த சான்றாகும்.

மேலும் 'ஒலி மஞ்சரியும்', 'பாட்டுக்குப் பாட்டும்' இன்றும் B.H இன் பெயரை ஞாபகப் படுத்துகின்ற அற்புதமான நிகழ்ச்சிகளாகும். இவற்றின் மூலம் இலக்கிய அறிவு, படைப்பாற்றல் திறன், இசை ஞானம் முதலானவை கொண்ட ஒரு கூட்டத்தினை உருவாக்கினார். ஒலிபரப்புத் துறையிலும் சஞ்சிகைப் பண்பு மிக்க ஆளுமையை அறிமுகப்படுத்தியதில் அவருக்கு பெரும்பங்குண்டு. இந்த நிகழ்ச்சிகள் யாவும் B.H. அப்துல் ஹமீட்டை உலகெங்கும் அறிமுகப்படுத்தியிருக்கின்றது.

'வடவேங்கடம் முதல் தென்குமரியாயிடை தமிழ் கூறும் நல்லுலகம்' என்று இருந்த தமிழ் உலகம்இன்று விரிவடைந்துவிட்டது. அந்த விரிவடைந்த தமிழுலகெல்லாம் பயணம் செய்து தன் ஆற்றலை அவர் நிரூபித்திருக்கின்றார். தமிழன் எங்கெல்லாம் வாழ்கின்றானோ அங்கெல்லாம் பயணம் செய்து தன் ஆற்றலை அவர் நிருபித்திருக்கின்றார்.

இந்த அறிவிப்புத் துறைக்கு அப்பால் தன் ஒலிபரப்புத் துறைப்பயணத்தை பதிவு செய்திருக்கின்ற அவருடைய 'வானலைகளில் ஒரு வழிப்போக்கன்' என்ற நூல் மிக முக்கிய இடத்தைப் பிடித்திருக்கின்றது. பலர் இந்த ஊடக அனுபவங்களை நூலாக்கியிருக்கின்றனர்.

அவற்றிடையே இந்நூல் தனித்துவமானதாகும். அவருடைய அனுபவப் பயணம் தொட்டம் தொட்டமாக இந்த உலகெங்கும் வியாபித்திருக்கின்றது. வானொலி தோன்றிய காலத்திலிருந்து வானொலியை எப்படி ஒரு அறிவுபூர்வமான கருவியாக பயன்படுத்த முடியும் என்பதனை அவர் பதிவு செய்திருக்கின்றார்.

இலங்கை வானொலியில் வரலாற்றுத்தடயங்கள் சில இந்நூலின் மூலம் ஆவணப்படுத்தப்பட்டிருக்கின்றது.எல்லாவற்றிற்கும் மேலாக நூலினைக் கையில் எடுத்தவுடன் வாசித்து முடிக்க வேண்டும் என்ற அவாவினை எழுத் தோட்டத்தின் மூலமும் தகவல்கள் மூலமம் இந்நூல் தருகிறது. சரியான ஆய்வு ஒழுங்கின்படி இந்நூலை ஒழுங்குபடுத்தினால் இந் நூலுக்கு தக்க ஆய்வுப்பட்டத்தினை வழங்க முடியும்.

(04 ஆம் பார்க்க)



பேராசிரியர்
றமீஸ் அப்துல்லாஹ்




பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றான அழகீஸ்வரமான முன்னேஸ்வரத்தில் செவ்வாய்க்கிழமை (9) வசந்த நவராத்திரி பூசையானது கலை நிகழ்ச்சிகளுடன் மிகவும் கோலாகலமாக நடைபெற்றது.

# பேருவளை பிரதேச வீதிகளுக்கு காபட்




மர்ஜான் பளீல் எம்.பியின் வேண்டுகோளில் அமைச்சர் பந்துல குணவர்தனவின் நிதி ஒதுக்கீட்டில் பேருவளை ஜாமிஆ நளீமிய்யா கலாபீட உள்ளக வீதிகள் பல இலட்சம் ரூபா செலவில் காபட் வீதிகளாக புனரமைப்பு செய்யப்பட்டுள்ளன.

போக்குவரத்து நெடுஞ்சாலைகள் ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தனவிடம் பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல் விடுத்த வேண்டுகோளின்பேரில் நளீமிய்யா கலாபீட வீதிகளின் புனரமைப்புக்கு அமைச்சர் நிதியுதவியை வழங்கியமை விசேட அம்சமாகும்.

மேற்படி வீதி புனரமைப்பு பணிகளை பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல் நேற்றைய தினம் அதிகாரிகள் சகிதம் பார்வையிட்டார்.

இங்கு கருத்து தெரிவித்த மர்ஜான் பளீல், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான இன்றைய அரசாங்கம் நாட்டிலுள்ள கிராமப் பிரதேச வீதி அபிவிருத்தி பணிகளுக்கு கூடுதல் நிதியை ஒதுக்கீடு செய்து அபிவிருத்திகளை முன்னெடுத்து வருகிறது. அந்த வகையில் மேற்படி வீதி புனரமைப்புக்கு நிதியை பெற்றுத் தந்த அமைச்சருக்கு எமது மக்கள் சார்பில் நன்றிகளை தெரிவிப்பதோடு அடுத்த கட்டமாக தர்கா நகர் பிரதேச வீதிகளான சாவியா வீதி, இஸ்னாபுல்ல வீதிகளுக்கு காபட் இடும் பணியும் விரைவில் ஆரம்பித்து வைக்கவுள்ளேன்.

மேலும் பேருவளை நகர சபை பிரதேச மருதானை, மஹகொடை பிரதேச ஆறு வீதிகள் உட்பட சீனன்கோட்டை ரவூப் ஹாஜியார் வீதிக்கும் காபட் இடப்படவுள்ளதாகவும் மர்ஜான் பளீல் மேலும் தெரிவித்தார்.

## நகர்வலம்




கொழும்பு – 14, கிராண்ட்பாஸ் கெத்தாராம கனக துர்க்கை அம்மன் ஆலயத்தின் 12 ஆவது ஆண்டு வருடாபிஷேக பெருவிழா அண்மையில் இடம்பெற்றது.

படங்கள் வட கொழும்பு தினகரன் நிருபர்

# அநுராதபுரத்தில் இரு இடங்களில் இரு சடலங்கள்

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

அநுராதபுரத்தில் இரண்டு இடங்களில் இறந்த இருவரின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக அநுராதபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.

அநுராதபுரம் தொழில்நுட்ப கல்லூரிக்கு அருகில் இருந்து சடலம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதுடன் மற்றைய சடலம் ஹிதோகம திவுல்வெவ குளத்தில் நீரில் மூழ்கியிருந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளன.

தொழில் பயிற்சி நிலையத்திற்கு அருகில் இருந்த சடலம் நொச்சியாகம இஹலமெட்டியாவ பகுதியைச் சேர்ந்த கே.ஜீ.ஜகத் குமார என்ற (47) வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளது. அத்துடன் ஹிதோகம பொலிஸ் பகுதிக்குட்பட்ட திவுல்வெவ குளத்திலிருந்து ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அவரின் சடலம் சாக்கு கட்டில் ஒன்றில் சுற்றப்பட்டு கல்லு கட்டப்பட்டு குளத்தில் வீசப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளனர். உயிரிழந்துள்ளவர் ஹிதோகம பகுதியைச் சேர்ந்த (45) வயதுடைய நபராவார்.

இவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு உயிரிழந்துள்ளதாக மரண விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது. இதனையடுத்து பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் மூலம் இந்த கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய இவரது (39) வயதுடைய மனைவியும் (24) வயதுடைய மகனும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குடும்ப தகராறு காரணமாக இந்த கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. உயிரிழந்தவரின் சடலத்தை குளத்தில் வீசுவதற்கு பயன்படுத்தப்பட்டதாக கூறப்படும் முச்சக்கர வண்டியும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பொலிசார் மேற்கொண்டுள்ளனர்.




மக்கள் பெருந்தோட்ட யாக்கத்தின் 48ஆம் ஆண்டு விழா கொழும்பில் அமைந்துள்ள தலைமை காரியாலத்தில் நடைபெற்றது. மக்கள் பெருந்தோட்ட யாக்கத்தின் தலைவர் விங் கமாண்டர் புவனக அபேயசூரிய தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சிறப்பு அதிதியாக பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் தலைவர் பாரத் அருள்சாமி கலந்து கொண்டார். இந்நிகழ்வை சிறப்புப்படுத்தும் முகமாக நிர்வாகப் பிரிவிற்கு தோட்டப் புறங்களில் கல்வி பயின்று புலமை பெற்ற இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்பினை வழங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் பணிப்புரை விடுத்திருந்தார். அதற்கமைய முதல் கட்டமாக ஹந்தான, மவுண்ட்ஜீன், லூல்கந்தூர, ரஹத்துங்கோட பிரதேசங்களிலுள்ள தோட்ட இளைஞர், யுவதிகள் இணைத்துக் கொள்ளப்பட்டார்கள்.

(படம்: நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்)

# ஒரே கூரையின் கீழ் பொருட்களை பெற்றுக் கொள்ள வசதி

**வாச்சிக்குடா விஷேட நிருபர்**



புத்தாண்டு கொண்டாட்டத்திற்காக தயாராகிவரும் பொதுமக்களுக்குத் தேவையான பொருட்களை ஒரே கூரையின் கீழ் பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கையினை இலங்கை சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் முன்னெடுத்து வருகின்றது.

இதன் அடிப்படையில் பிரதேச செயலகங்கள் ரீதியாக 'சமுர்த்தி அபிமானி' புத்தாண்டு சந்தையினை நடாத்தும் வேலைத்திட்டத்தை ஆரம்பித்துள்ளது.

இதற்கமைவாக ஆலையடி வேம்பு பிரதேச செயலக சமுர்த்தி பிரிவின் ஏற்பாட்டில், சமுர்த்தி அபிமானி புத்தாண்டு சந்தையினை ஏற்பாடுகள் இடம்பெற்றுள்ளது. ஆலையடிவேம்பு பிரதேச செயலக சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் ந.கிருபாகரன் தலைமையில் இடம்பெற்ற இன்றைய ஆரம்ப நிகழ்வில் பிரதேச செயலாளர் ரி.கஜேந்திரன் மற்றும் அம்பாறை மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் எம்.ஏ.சி.அஹமட் ஷாபிர் பிரதம அதிதிகளாக கலந்து கொண்டதுடன் கௌரவ அதிதியாக உதவிப் பிரதேச செயலாளர் ஆர்.சுவாகர் கலந்து கொண்டார்.

சிறப்பு அதிதிகளாக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எல். ஹூசைன்டீன் நிருவாக உத்தியோகத்தர் கே.சோபிதா நிருவாக கிராம அலுவலர் பரிமளவாணி சில்வெஸ்டார் முகாமைத்துவ பணிப்பாளர் சிவப்பிரியா சுதாகரன் கருத்திட்ட முகாமையாளர் ரி.கமலபிரபா சமுர்த்தி வங்கி முகாமையாளர்களான கவிதா கிருதாசன் எஸ்.சுரேஸ்காந் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

சமுர்த்தி பிரிவினரால் மாலை அணிவிக்கப்பட்டு வரவேற்கப்பட்ட அதிதிகள் வியாபார நிலையங்களை சம்பிரதாயபூர்வமாக திறந்து வைத்தனர்.

பின்னர் அங்கு விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த பொருட்களை பார்வையிட்டதுடன் கொள்வனவிலும் ஈடுபட்டனர்.இதேநேரம் பல்வேறு உற்பத்தி பொருட்களும் இங்கு காட்சிப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

## கிழக்கின் குரல்

# ஒலுவில் அஷ்ரப் நகர் பிரதான வீதியை புனரமைக்குமாறு மக்கள் கோரிக்கை

**ஒலுவில் விசேட நிருபர்**

அம்பாறை மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தினால் சேதமடைந்து போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ள அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஒலுவில் அஷ்ரப் நகர் பிரதான வீதியை புனரமைக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வீதியில் நிர்மாணிக்கப்பட்டிருந்த மதகு வெள்ள நீரினால் அடித்துச் செல்லப்பட்டுள்ளதால் வீதியால் போக்குவரத்து செய்ய முடியாமல் மோசமாக சேதமடைந்துள்ளது.

அஸ்ரப் நகர், தீகவாபி, பள்ளக்காடு, குடிவில், இறக்காமம், வரிப்பத்தான் சேனை, மாணிக்கமடு, அம்பாறை, உள்ளிட்ட தூரப் பிரதேசங்களுக்கும் போக்குவரத்து செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

நோயாளர்கள் வைத்தியசாலைக்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதால் அசௌகரியங்களை எதிர்கொள்வதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ் வீதியால் போக்குவரத்து சேவையில் ஈடுபட்டு வந்த இலங்கை போக்குவரத்து சபையின் பாடசாலை பஸ் சேவையும் நிறுத்தப்பட்டுள்ளதால் மாணவர்கள் பாடசாலை செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதோடு, அஷ்ரப் நகர் பாடசாலைக்கு ஆசிரியர்கள் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

தற்போது சிறுபோக நெற்செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் விவசாயிகள் பெரும் அசௌகரியங்களை எதிர் கொண்டுள்ளனர்.

# புத்தாண்டையொட்டி மட்டக்களப்பில் பார்வையற்றவர்களுக்கு நிவாரண பொருட்கள், ஆடைகள் விநியோகம்




**மட்டக்களப்பு குறூப் நிருபர்**

மலரவுள்ள தமிழ், சிங்கள புத்தாண்டையொட்டி மட்டக்களப்பு உதயம் விழிப்புலனற்றோர் நிலையத்தில் உள்ள பார்வையற்றவர்களுக்கு உலருணவுப் பொருட்கள் அரசாங்க அதிபர் திருமதி ஜே.ஜே. முரளிதரனினால் வழங்கி வைக்கப்பட்டன. இதன்போது கைவிசேடமும் வழங்கி வைக்கப்பட்டமை விஷேட அம்சமாகும் .

அகிலன் பவுண்டேஷன் அனுசரணையோடு உதயம் விழிப்புலனற்றோர் நிலையத்தில் உள்ள சுமார் 87 விழிப்புலனற்றவர்களுக்கு குறித்த நிவாரண பொருட்கள் மற்றும் ஆடைகள், கைவிசேடம் என்பன வழங்கி வைக்கப்பட்டன .

உதயம் விழிப்புலனற்றோர் நிலையத்தின் தலைவர் கிசாந்தன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜே.ஜே முரளிதரன் பிரதம அதியாக கலந்து கொண்டார். மாவட்ட காணி ஆணையாளர் எம்.விமல்ராஜ் மற்றும் அகிலன் பவுண்டேசன் இலங்கைக்கான பணிப்பாளர் வி.ஆர். மகேந்திரன் சமூக சேவை உத்தியோகத்தர் மற்றும் மதத் தலைவர்கள் என பெரும் எண்ணிக்கையிலான அன்னோர் கலந்து கொண்டனர்

உதயம் விழிப்புலனற்றோர் நிலையத்தில் உள்ள உறுப்பினர்கள் தமது குடும்ப உறுப்பினர்களுடன் கலந்து கொண்டு குறித்த நிவாரண பொருட்கள் மற்றும் ஆடைகள், கைவிசேடம் என்பவற்றையும் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத் தக்கது.

# பரசூட் முறையிலான நெற்செய்கையின் நன்மைகள் பற்றி விளக்கமளிப்பு




**காரைதீவு குறூப் நிருபர்**

மட்டக்களப்பு மாவட்டத்தின் கொக்கட்டிச்சோலை விவசாய விரிவாக்கல் நிலைய பகுதியில் விவசாய போதனாசிரியர் என். பார்த்தீபன் தலைமையில் வயல்விழா நேற்று முன்தினம் நடைபெற்றது.

பரசூட் முறையிலான நெற்செய்கையின் நன்மைகள் பற்றி இங்கு தெளிவான விளக்கமளிக்கப்பட்டன. பரசூட் முறையில் பயன்படுத்தப்படும் தொழில்நுட்பங்கள் பற்றியும் விளக்கமளிக்கப்பட்டன. இங்கு முறையான செய்து காட்டல்கள் மூலம் விவசாய போதனாசிரியர்களால் விளக்கமளிக்கப்பட்டது.

நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர் எம். பரமேஸ்வரன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

சிறப்பு அதிதிகளாக உதவி விவசாய பணிப்பாளர்களான திருமதி நித்தியா நவரூபன், எஸ். சித்திரவேல் பாடவிதான உத்தியோகத்தர்களான திருமதி லாவண்யா செந்தீபன், லக்ஸ்மன், மாறன் ஆகியோருடன் தெற்கு வலய விவசாய போதனாசிரியர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர், கமநல சேவை நிலையத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் கொக்கட்டிச்சோலை விவசாயிகள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

## மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞன் பலி

முல்லைத்தீவு முள்ளியவளை நெடுங்கேணி வீதியில் மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞன் ஒருவன் உயிரிழந்துள்ளார்.

கடந்த 09 ஆம் திகதி இடம்பெற்ற விபத்தில் முள்ளியவளை பகுதியைச் சேர்ந்த 18 வயதுடைய இளைஞன் உயிரிழந்துள்ளார்.

கணுக்கேணி பகுதியில், பூண்டன் வயல் சந்தி நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள், எதிர்திசையில் வந்த மோட்டார் சைக்கிளுடன் நேருக்கு நேர் மோதியதில் இவ்விபத்து ஏற்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை முள்ளியவளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## பாடசாலை அபிவிருத்தி வாட்ஸ்அப் குழுவில் மோசடி

(யாழ். விசேட நிருபர்)

யாழ். மாவட்ட பாடசாலையொன்றில் அபிவிருத்திக்கென வாட்ஸ்அப் குழு மூலம் தொடர்ச்சியாக நிதி சேகரிக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

யாழ். வடமராட்சி வலயத்துக்குட்பட்ட பாடசாலையொன்றில் பாடசாலை அபிவிருத்திக்கென வாட்ஸ்அப் குழு உருவாக்கப்பட்டு தொடர்ச்சியாக நிதி சேகரிக்கப்பட்டமை தெரியவந்துள்ளது. இந்நிலையில், பாடசாலை அதிபரையும், வடமராட்சி வலயக்கல்வி பணிப்பாளரையும் எதிர்வரும் 24 ஆம் திகதி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் ஆஜராகி பாடசாலை நிதி சேகரிப்பு தொடர்பில் விளக்கமளிக்குமாறு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

இதேவேளை, பாடசாலையின் நற்பெயருக்கு களங்கம் ஏற்பட்டு விட்டதாக நேற்றுமுன்தினம் போராட்டமொன்றும் முன்னெடுக்கப்பட்டது. இந்நிலையில் நிதி சேகரிப்பு குறித்து விசாரணை நடாத்துவதற்காக மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மகிழ்ச்சி பொங்கும் வளமான வாழ்வுடன்

# மங்களம் பொங்கும் சித்திரை புதுவருட நல்வாழ்த்துக்கள்



தமிழ் மக்களின் பாரம்பரியம், தொன்மை என்பவற்றுக்கமைய சித்திரை 14 ஆம் நாள் புது வருடம் பிறக்கிறது. அதற்கமைய இந்த ஆண்டு ஏப்ரல் 13 ஆம் திகதி குரோதி எனும் தமிழ் புத்தாண்டு பிறக்கிறது. இந்த புது வருடத்தில் சாந்தியும், சமாதானமும் மேலோங்கி வறுமைகள் நீங்கி எல்லா வளங்களுடனும் அனைவரும் வாழ வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கின்றேன் என வடக்கு ஆளுநர் திருமதி.பி.எஸ்.எம். சார்ள்ஸ் தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார். இதே தினத்தில் சிங்கள மக்களும் தங்களின் புதுவருடப் பிறப்பை கொண்டாடுகின்றனர். பல்லின சமூகம் வாழும் இலங்கை திருநாட்டில் இன, மத நல்லிணக்கத்தை மேலும் பறைசாற்றும் வகையில் ஒரு தேசிய பண்டிகையாக சித்திரை புதுவருடப்பிறப்பு கொண்டாடப்படுகிறது.

தேசிய நல்லிணக்கத்தின் ஊடாக பொருளாதார சவால்களை வெற்றி கொள்ளும் வருடமாக மலரும் புதுவருடம் அமைய வேண்டும். 'இனி என்னை புதிய உயிராக்கி, எனக்கேதும் கவலையறச்செய்து, மதி தன்னை மிகத் தெளிவு செய்து என்றும் சந்தோசம் கொண்டிருக்கச் செய்வாய்'என்ற மகாகவி பாரதியின் வரிகளுக்கு அமைய, புது வருடத்தில் புதிய சிந்தனைகளை எம்மில் தோற்றுவித்து, மகிழ்ச்சி பொங்கும் வளமான வாழ்வை பெற இறையாசி வேண்டி அனைவருக்கும் புத்தாண்டு நல் வாழ்த்துக்களை கூறிக்கொள்கின்றேன் என தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

# வடக்கின் உதயம்

## நல்லூர் வடக்கு ஸ்ரீ சந்திரசேகர பிள்ளையார் கோவில் மஞ்சம்

(யாழ். விசேட நிருபர்)



வரலாற்று பிரசித்தி பெற்ற நல்லூர் வடக்கு ஸ்ரீ சந்திரசேகர பிள்ளையார் ஆலய வருடாந்த மகோற்சவ பெருவிழாவின் திருமஞ்ச திருவிழா நேற்றுமுன்தினம் பக்திபூர்வமாக நடைபெற்றது.

ஆலயத்தில் நடைபெற்ற விசேட பூஜை வழிபாடுகளை தொடர்ந்து வசந்தமண்டப பூஜை நடைபெற்று விநாயகப் பெருமான் உள்வீதி எழுந்தருளினார்.

அதனைதொடர்ந்து வர்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட திருமஞ்சத்தில் விநாயகப் பெருமான் வெளிவீதி வலம் வந்து அடியவர்களுக்கு அருள்பாலித்தார்.

திருமஞ்ச உற்சவத்தில் ஈழத்தின் புகழ்பூத்த நாதஸ்வர, தவில் கலைஞர்களின் விசேட தவில் நாதஸ்வர கச்சேரியும் நடைபெற்றது.

## மருதடி விநாயகர் ஆலய சப்பர வெள்ளோட்டம்

(யாழ். விசேட நிருபர்)



யாழ்ப்பாணம் மானிப்பாய், மருதடி விநாயகர் ஆலய சப்பர வெள்ளோட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

எதிர்வரும் சனிக்கிழமை இரவு சப்பர திருவிழா நடைபெறவுள்ளது.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தேர் திருவிழா நடைபெறும். தேர்திருவிழா அன்று காலை 10 மணிக்கு வசந்தமண்டப பூஜை ஆரம்பமாகி, வசந்தமண்டப பூஜையை தொடர்ந்து உள்வீதி வரும் மருதடி விநாயக பெருமான் மதியம் 12 மணிக்கு தேரில் ஆரோகணித்து பக்தர்களுக்கு அருட்காட்சி வழங்குவார்.

தொடர்ந்து தேர் உற்சவம் நடைபெற்று, மாலை 3 மணிக்கு பச்சை சாத்துதல் நடைபெறும்.

## சந்நிதியான் ஆச்சிரமத்தால் வவுனியாவில் நலன்புரி உதவிகள்

(கரவெட்டி தினகரன் நிருபர்)



வவுனியா பிரதேசசெயலகத்துக்குட்பட்ட கோவில்புளியங்குளம் கிராம சேவகர் பிரிவிலுள்ள ஸ்ரீ முத்து மாரியம்மன் அறநெறிப் பாடசாலையில் கல்வி பயிலும் 70 பாடசாலை மாணவர்களுக்கு சீருடைகள் வழங்கப்பட்டதுடன் மாதாந்தம் சத்துணவுகளுக்கான நிதியாக ரூ.10000 வழங்கப்பட்டுள்ளது.

மேலும் கணேசபுரம் கிராம சேவகர் பிரிவிலுள்ள அறநெறிப் பாடசாலையில் கல்வி பயிலும் 65 மாணவர்களுக்கும் சீருடைகளும், மாதாந்த சத்துணவுகளுக்கென ரூ.15,000 வழங்கப்பட்டுள்ளதுடன் அறநெறி பாடசாலை கட்டடம் அமைப்பதற்கான முதலாம் கட்ட நிதியாக ரூ. 75,000 வழங்கப்பட்டது. இதேவேளை கணேசபுரத்திலுள்ள திருமூலர் அறநெறிப் பாடசாலையில் கல்வி பயிலும் 60 மாணவர்களுக்கு, மாதாந்தம் சத்துணவுக்கென ரூ.15000/ வழங்கப்பட்டதுடன் சீருடைகளும் வழங்கப்பட்டுள்ளன. மேலும் வவுனியா கூமாங்குளம் கிராமத்தைச் சேர்ந்த விசேட தேவையுடைய குடும்பமொன்றுக்கு ரூ.170,000 ரூபாவும் வீடு திருத்தவேலைகளுக்கான நிதியும் வழங்கப்பட்டது

உதவித்திட்டங்களை சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகன் சுவாமிகள் தலைமையில் சமூக செயற்பாட்டாளர் இ. தயாபரன், செட்டிக்குளம் கலாசார உத்தியோகத்தர் சி.கயேந்திரகுமார், வவுனியா மாவட்ட செயலக உத்தியோகத்தர் ம.சுஜேந்திரன் ஆகியோருடன் சந்நிதியான் ஆச்சிரம தொண்டர்கள், அறநெறி பாடசாலை நிர்வாகிகள், அறநெறி பாடசாலை மாணவர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

## போபத்எல்ல நீர்வீழ்ச்சி பிரதேசம் சுற்றுலா வலயமாக அபிவிருத்தி

### ஆளுநர் நவீன் திசாநாயக்க தகவல்

இரத்தினபுரி சுழற்சி நிருபர்



இரத்தினபுரி குருவிட்ட பிரதேசத்தில் அமைந்துள்ள போபத்எல்ல நீர்வீழ்ச்சியையும் அதன் சுற்றுப்புற சூழலையும் சுற்றுலா வலயமாக அபிவிருத்தி செய்ய சப்ரகமுவ மாகாண ஆளுநர் நடவடிக்கை எடுத்துள்ளார். சப்ரகமுவ மாகாண கேட்போர் கூடத்தில் இக்கலந்துரையாடல் நடைபெற்றது.

சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவீன் திசாநாயக்க உட்பட இத்திட்டத்தின் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளும் நிறுவன அதிகாரிகளும் இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

இக்கலந்துரையாடலில் கருத்து தெரிவித்த ஆளுநர், உத்தேச சுற்றுலா பயண வலயத்தில் பொலிஸ் காவல் பாதுகாப்பு நிலையம், உயிர்காப்பு பிரிவு, குப்பை சுத்திகரிப்பு நிலையம், வாகன தரிப்பிடம், பிரதேச வீதிகள், வீதியோர வியாபார கட்டடங்கள் என்பவற்றை புனரமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

# மலைச்சாரல்



தமிழ், சிங்கள புத்தாண்டு

## அமைதியும், மகிழ்ச்சியும் நிறைந்த சிறப்பான ஆண்டாக அமையட்டும்

### கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் வாழ்த்து



பிறந்திருக்கும் தமிழ் மற்றும் சிங்கள புத்தாண்டைக் கொண்டாடும் அனைவருக்கும் எனது இதயம்கனிந்த வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன் என கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான செந்தில் தொண்டமான் வெளியிட்டுள்ள புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.

பிறந்திருக்கும் சித்திரை புத்தாண்டு இலங்கைவாழ் மக்களுக்கு சுபீட்சத்தையும், முன்னேற்றத்தையும் வழங்க வேண்டும்.

பேதங்கள் இன்றி அனைவரும் ஒன்றிணைந்து கொண்டாடும் இந்த புத்தாண்டானது, சமூகத்தின் மறுமலர்ச்சிக்கான ஒரு பண்டிகையாக உள்ளதுடன், நாட்டின் தேசிய கலாசாரமாகவும் திகழ்கிறது.

மக்கள் எல்லோரும் ஒன்றாக வாழக்கூடிய ஒரு சூழ்நிலையும், இலங்கை ஒரு சுபீட்சமடைந்த தேசமாகவும் மாறுவதற்கான ஒரு வருடமாகவும் இப்புத்தாண்டு மலரட்டும். நாட்டை வளர்ச்சி பாதையில் கொண்டு செல்வதற்கு நாம் அனைவரும் ஒரு தேசமாக ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். கடுமையான பொருளாதார நெருக்கடியை சந்தித்த எமது நாடு இன்று அதிலிருந்து மீண்டுவருகிறது.

சமகால சூழலில் சரியான திசைவழி நோக்கி பயணிப்பதன் ஊடாக எமது மக்கள் எண்ணிய எதிர்கால இலட்சியங்களை எட்டிவிட முடியுமெனவும் தமது வாழ்த்துச் செய்தியில் ஆளுநர் செந்தில் தொண்டமான் கூறியுள்ளார்.

## சித்திரைப்பிறப்பு சகல வகையிலும் வசந்தத்தை உருவாக்கக்கூடியது

தலவாக்கலை குறூப் நிருபர்



பிறக்கும் சித்திரைப் புத்தாண்டு நமது பலம், ஒற்றுமை என்பவற்றை நிலை நிறுத்தி எழுச்சி கொள்ளும் சமூகமாய் இன்புற்று வாழ்வதற்கு வழிசமைக்கட்டும் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஸ்வரன் தெரிவித்துள்ளார். சித்திரை புத்தாண்டை முன்னிட்டு அவர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

பிறக்கும் சித்திரைப் புத்தாண்டு இலங்கை வாழ் சமூகத்தினருக்கு வளமான வாழ்வும் குறைவற்ற செல்வமும், கிடைத்திட வேண்டும். சித்திரைப்பிறப்பு சகல வகையிலும் வசந்தத்தை உருவாக்கக்கூடியது. இன,மத, மொழி,சாதி,சமய வேறுபாடுகளைக் கலைந்து எல்லோரும் ஒருதாய் மக்களென உலகறியச் செய்யும் சிறப்பு நாளாகும். இச்சித்திரைப் புத்தாண்டில் மனிதம் நிரந்தரமாய் நிலைத்து புதிய சாதனைகளையும், வெற்றிகளையும் பெற்று வழிமறிக்கும் தடைகளைத் தகர்த்து மகிழ்ச்சி பொங்கும் நன்நாளாக அமைய இறைவனை பிராத்திப்போம். கடந்த வருடம் எமது மக்கள் எத்தனை துன்பங்களை அனுபவித்திருந்தாலும் இனிவரும் காலங்கள் நலமாக அமையும் என்ற திடமான நம்பிக்கை மாத்திரமே எமது மக்களுக்கு நிரந்தரமான மகிழ்ச்சியைக் கொடுக்கின்றது.

## குரோதி வருடம் நிலைபேறான பொருளாதார மாற்றங்களுக்கு வழிவகுக்க வேண்டும்

### புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார்



பொருளாதார நெருக்கடிகளிலிருந்தும் வாழ்வாதார பிரச்சினைகளிலிருந்தும் மீண்டு வருகின்ற நாம் மீண்டும் ஒரு புத்தாண்டில் காலடி பதிக்கிறோம்.

பிறந்திருக்கும் குரோதி வருடமானது அரசியல் பொருளாதார மற்றும் வாழ்வாதார விடயங்களில் நிலைபேறான மாற்றங்களுக்கு வழி வகுக்க வேண்டுமென பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் கல்வி இராஜாங்க அமைச்சருமான அருணாச்சலம் அரவிந்தகுமார் தெரிவித்துள்ளார். சித்திரை புத்தாண்டு வாழ்த்து செய்தியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நம் நாடானது கடந்த இரண்டு வருடங்களுக்கும் மேலாக பொருளாதார நடைமுறைச் சிக்கல்களை எதிர்கொண்டு வந்திருந்தது.

அந்த நிலைமை படிப்படியாக தற்போது மாற்றம் பெற்றிருப்பது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுயநல மற்றவர், அதேநேரம் நாடு பற்றியும் மக்கள் தொடர்பிலும் சிந்தித்து செயலாற்றக்கூடிய தலைவர் என்பதை நிரூபித்திருக்கின்றார். அவருக்கு எதிராக எத்தகைய விமர்சனங்களை முன்வைத்தாலும் கடந்த இரண்டு வருட காலங்களோடு இன்றைய நிலையை ஒப்பிட்டுப் பார்க்கையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மிகப்பெரிய சாதனைகளை நிகழ்த்தியுள்ளார்.

இன்று பல்வேறு விமர்சனங்களை முன்வைக்கின்ற எதிர்க்கட்சியினரும் மாற்றுத் தரப்பினரும் அரசாங்கத்துக்கு எதிராக செயற்படுகின்றவர்களும் நாடு தொடர்பிலும் நாட்டு மக்கள் தொடர்பிலும் சிந்திப்பதாக தெரியவில்லை. நாடு படிப்படியாக மீண்டும் வருகின்ற நிலையில் எல்லா விடயங்களையும் சடுதியாக நிறைவேற்ற முடியாது என்பதே உண்மையாகும். இதனை நாம் அனைவரும் புரிந்து கொள்ளவும் வேண்டும். மேலும் கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் அனைவருக்கும் எனது நல்வாழ்த்துக்களையும் நல்ல ஆசிகளையும் வழங்கி அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

## வியாபார நிலையத்திலிருந்து வெட்டுக்காயங்களுடன் சடலம் மீட்பு

இரத்தினபுரி சுழற்சி நிருபர்

ஊரகஸ்மங்கஹந்திய மீகஸ்பிட்டிய பகுதியிலுள்ள வியாபார நிலையமொன்றிலிருந்து வெட்டுக்காயங்களுடன் சடலமொன்று மீட்கப்பட்டுள்ளது. இவர் வியாபார நிலையத்தின் உரிமையாளரான 41 வயதான பெண் என தெரியவருகின்றது.

இவர் தனது கணவருடன் இங்கு வசித்து வந்ததாக ஆரம்பக் கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## ஹோட்டலில் யுவதி மர்மமாக உயிரிழப்பு

அவிசாவளை பொலிஸ்பிரிவுக்குட்பட்ட ஹோட்டலொன்றில் தங்கியிருந்த யுவதியொருவர் மர்மமான முறையில் உயிரிழந்துள்ளார். நேற்று முன்தினம் (10) மாலை விடுதியில் தங்கியிருந்த ஜோடியில் பெண்ணொருவர் சந்தேகத்துக்கிடமான முறையில் உயிரிழந்தமை தொடர்பில் முறைப்பாடு கிடைத்ததாக பொலிஸார் தெரிவித்தனர். வலப்பனை பிரதேசத்தைச் சேர்ந்த 23 வயதுடைய யுவதியொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

# ஆறு நோன்பின் மகத்துவம்

அல்லாஹ் அவனது அடியார்கள் மீது பொழிந்துள்ள கருணையின் காரணமாக ஒவ்வொரு ஃபர்ளான அமலுடனும் அதே போன்ற உபரியான இபாதத்தையும் மார்க்கமாக ஆக்கியுள்ளான். ஃபர்ளான தொழுகைக்கு முன் பின் சில சுன்னத்தான நஃபிலான தொழுகைகள் இருப்பதை நாம் அறிவோம். அதே போன்று தான் ஃபர்ளான ரமழான் நோன்பிற்கு முன்னும் பின்னும் சில சுன்னத்தான, நஃபிலான நோன்புகள் உள்ளது. இந்த உபரியான இபாதத்களைப்பொறுத்தவரை அது ஃபர்ளான இபாதத்தில் நம்மிடம் ஏற்பட்ட கோளாறுகளையும் குறைகளையும் ஈடுசெய்யக்கூடியதானவாக விளங்குகின்றன.

அதன் அடிப்பையில் தான் ஷவ்வால் மாத ஆறு நோன்பை அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்கள் ஆர்வமூட்டியும் அதன் சிறப்பை எடுத்துக்கூறியும் உள்ளார்கள்.

ரமழானைத் தொடர்ந்து வரும் ஷவ்வால் மாதம் ஆறு நோன்பு நோற்பது விரும்பதக்க சுன்னாவாகும். இது கடமையான நோன்பல்ல. என்றாலும் இதற்கென சிறப்பும் கூலியுமுள்ளது. இது குறித்து அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், ரமழான் மாதம் நோன்பு நோற்று அதைத் தொடர்ந்து ஷவ்வால் மாதத்தில் ஆறு நோன்பு நோற்றவர், காலமெல்லாம் நோன்பு நோற்றவரைப் போன்றவராவார் என்று கூறியுள்ளார்கள்.

(ஆதாரம்: ஸஹீஹ் முஸ்லிம்)

இந்நபி மொழிக்கு இமாம் நவவி (ரஹ்) அவர்கள் வழங்கியுள்ள விளக்கத்தில், ஈதுல் ஃபித்ரைத் தொடர்ந்து ஆறு நாட்கள் தொடர்ச்சியாக நோன்பு நோற்பது சிறந்ததாகும். அதே போன்று அதை பிரித்து ஷவ்வாலின் ஆரம்பத்திலிருந்து இறுதி வரை நோற்றாலும் ஷவ்வாலின் நோன்பை தொடர்ந்து நோன்பு நோற்றதின் சிறப்பை அடையலாம் என்பது நமது தோழர்கள் கருத்தாகும்.

(ஆதாரம்: ஷரஹ் ஸஹீஹ் முஸ்லிம்)

ரமழான் மாதம் நோன்பு நோற்று அதைத் தொடர்ந்து வரக்கூடிய ஷவ்வால் ஆறு நாள் நோன்பு நோற்பது ஒரு வருடம் நோன்பு நோற்பதற்கு ஈடாகும் என்பதை மேற்கூறிய நபிமொழித் தெரிவிக்கிறது. இதற்கான விளக்கத்தை நபி(ஸல்) அவர்கள் இவ்வாறு கூறியுள்ளார்கள்.ரமழானுக்குப் பிறகு யார் ஆறு நாள் நோன்பு நோற்பார்களோ அது வருடம் முழுமைக்குமான நோன்பாகும். யார் ஒரு நன்மைக் கொண்டு வருவாரோ அவருக்கு அது போன்று பத்து மடங்கு நன்மைகள் வழங்கப்படும்.

(ஆதாரம்: சுனன் இப்னு மாஜா)

அதேநேரம், ஒரு (ரமழான்) மாத நோன்பு பத்து மாதத்திற்கு ஈடாகும். அதைத் தொடர்ந்து ஆறு நாள் நோன்பு இரண்டு மாதத்திற்கு ஈடாகும் அது தான் வருடம் முழுமைக்குமானதாகும்' எனவும் நபிகளார் குறிப்பிட்டுள்ளார்கள்.

(ஆதாரம்: சுனன் தாரமி)

சில ஃபுகஹாக்கள் ரமழானுக்குப் பின் உள்ள ஷவ்வாலின் ஆறு நோன்பு ஒரு வருட ஃபர்ளான நோன்பிற்கு ஈடாகும் என்று கூறியுள்ளார்கள். என்றாலும் இரட்டிப்பான கூலி என்பது ஒரு நன்மைக்கு பத்து மடங்கு கூலி என்ற பொதுவான செய்தியின் மூலம் உறுதியாகியுள்ளது.

ஷவ்வால் நோன்பின் பலனைப் பொறுத்தவரை ரமழானின் ஃபர்ளான நோன்பில் ஏற்பட்டுள்ள குறைகளுக்கும் தவறுகளுக்கும் அது பரிகாரமாகிவிடும். ஏனெனில் மறுமையில் ஃபர்ளான நமது கடமைகளில் நாம் செய்த தவறுகளுக்கு உபரியான வணக்கங்களின் மூலம் தான் ஈடுசெய்யப்படும்.

ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள், நிச்சயமாக மறுமையில் அல்லாஹ் தனது அடியானிடம் அவர்களின் அமலில் முதலாவதாக தொழுகையைக் குறித்துத் தான் விசாரணை செய்வான். அது சரியாக இருந்தால் அவன் ஈடேற்றத்தையும் வெற்றியையும் அடைவான்.

அது கெட்டுவிட்டால் அவன் நஷ்டமடைந்து விடுவான். அவனது ஃபர்ளுகளில் ஏதாவது குறை ஏற்பட்டால் மேன்மையும் மகத்துவமும் மிக்க அல்லாஹ் என்னுடைய அடியானுக்கு ஏதாவது உபரியான வணக்கங்கள் உள்ளதா? என்று பாருங்கள் அதன் மூலம் ஃபர்ளான வணக்கத்தில் ஏற்பட்ட குறையை நிவர்த்தி செய்யுங்கள் என்று கூறுவான். பின்னர் ஏனைய அமல்களும் அது போன்று தான் இருக்கும் என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

(ஆதாரம்: ஜாமிஉத் திர்மிதி)

ஆகவே ரமழான் மாத நோன்பைத் தொடர்ந்துவரும் ஷவ்வால் மாதத்தின் ஆறு நோன்பையும் நோற்று இறைவனின் அன்பையும் அருளையும் பெற்றுக்கொள்வோம்.

அப்துல்லாஹ்



# ஆயுளை அதிகரித்துக் கொள்ள...



நம்மில் சிலர் உறவினர்கள் விஷயத்தில் பாரபட்சமாகவும், பாராமுகமாகவும் இருப்பதை காண்கிறோம். உறவிலேயே பணக்காரர் என்றால் அவர்களுக்கென்று தனி மரியாதை, ஏழை என்றால் கண்டும் காணதது போல் விட்டுவிடுவது போன்ற செயல்கள் நடந்து வருவதைக் காணக்கூடியதாக உள்ளது.

ஆனால் உறவுகளைப் பேணுவதின் முக்கியத்துவத்தையும் அவசியத்தையும் அல் குர்ஆனும், நபிமொழிகளும் தெளிவாக எடுத்தியம்பியுள்ளன.

அந்த வகையில் அல்லாஹ்த ஆலா, 'மனிதர்களே! உங்களை ஒரே ஒருவரிலிருந்து படைத்த உங்கள் இறைவனை அஞ்சுங்கள்! அவரிலிருந்து அவரது துணையைப் படைத்தான். அவ்விருவரிலிருந்து ஏராளமான ஆண்களையும், பெண்களையும் பல்கிப் பெருகச் செய்தான். எவனை முன்னிருத்தி ஒருவரிடம் மற்றவர்கள் கோரிக்கை வைப்பீர்களோ அந்த அல்லாஹ்வை அஞ்சுங்கள்! உறவினர்கள் விஷயத்திலும் (அஞ்சுங்கள்!) அல்லாஹ் உங்களைக் கண்காணிப்பவனாக இருக்கிறான்.' (4:1)

இவ்வசனத்தின் ஊடாக இறை நம்பிக்கை கொண்டு நற்செயல்களை புரியக்கூடிய அடியார்கள் என்ன செய்ய வேண்டும்? என்பதை அல்லாஹ் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கின்றான்.

சுவனத்திற்குச் செல்லக்கூடிய அவர்கள் தங்களுடைய உறவினர்களுடன் அன்பு செலுத்த வேண்டும் சகோதரத்துவம் உள்ளிட்ட நெருங்கிய உறவினர்களுடன் உறவைப் பேண வேண்டும், அவர்களை ஆதரிக்க வேண்டும் என்பதை இவ்வசனத்தின் ஊடாக அவன் வலியுறுத்துகிறான். 'நம்பிக்கை கொண்டு நல்லறங்கள் செய்த தனது அடியார்களுக்கு இதையே அல்லாஹ் நற்செய்தியாகக் கூறுகிறான்.

'உறவின் அடிப்படையில் ஏற்படும் அன்பைத் தவிர இதற்காக( வேறு) கூலியை நான் உங்களிடம் கேட்கவில்லை' என்று (முஹம்மதே!) கூறுவீராக! நன்மை செய்வோருக்கு அதில் நன்மையை அதிகரிப்போம். அல்லாஹ் மன்னிப்பவன். நன்றி செலுத்துபவன்.' ஸூரா அஷ்ஷுரா(42:23)

ஏழை, எளிய உறவினர்கள் தங்களுடைய அவசியமான தேவைகளைக்கூட நிறைவேற்ற முடியாமல் வாய் திறந்து கேட்பதற்குக் கூச்சமுடையவர்களாக இருக்கலாம். நாம்தான் அவர்களுடைய நிலையைக் கவனித்து நம்முடைய தேவைக்கு அதிகமாக உள்ள செல்வத்தைக் கொண்டு உதவுவது நம்முடைய முக்கியமான கடமையாகும்.

'உறவினருக்கும், ஏழைக்கும், நாடோடிக்கும் அவர்களின் உரிமையை வழங்குவீராக! அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தை நாடுவோருக்கு இதுவே சிறந்தது. அவர்களே வெற்றி பெற்றோர். (30:38) என்றும் அல் குர்ஆன் குறிப்பிட்டிருக்கிறது.

இதேநேரம் நபி (ஸல்) அவர்கள், 'ஆதமின் மகனே! (உன்னுடைய தேவைக்கு) மேலதிகமானதை நீர் செலவிடுவதே உமக்குச் சிறந்ததாகும். அதனைச் செலவிடாமல் தடுத்து வைத்திருப்பது உமக்குக் கெடுதியாகும். தேவைக்கெனத் தடுத்து வைத்திருப்பதற்காக நீர் சபிக்கப்பட மாட்டீர். எனவே (செலவிடும்போது) சுற்றத்தினரைக் கொண்டு ஆரம்பம் செய்வீராக! உயர்ந்து நிற்கும் கரமே தாழ்ந்திருக்கும் கரத்தினை விடச் சிறந்ததாகும்.' (ஆதாரம்: முஸ்லிம்)

எனவே, நம்முடைய தேவைக்காக தடுத்து வைத்துக் கொள்வது தவறில்லை. ஆனால், தேவைக்கு மேலதிகமாக உள்ள செல்வத்தை தர்மம் செய்வது மிகவும் சிறந்தது. நம்முடைய மறுமை வாழ்க்கை சிறப்பாக இருக்க உதவும். அப்படி தர்மம் செய்யும்போது நம்முடைய உறவினர்களுடைய தேவைகளை முதலில் நிறைவேற்ற வேண்டும். நபி (ஸல்) அவர்கள் குறிப்பிடும் போது, ஏழைக்குச் செய்யும் தர்மம் ஒன்று மட்டுமேயாகும். ஆனால், அது உறவினருக்குச் செய்யப்பட்டால், தர்மமும் உறவினரை ஆதரித்தல் ஆகிய இரண்டு (நன்மைகள் செய்தது) ஆகும் என்றுள்ளார்கள்.

(ஆதாரம்: திர்மிதீ)

இந்நபிமொழி படி, உறவினருக்கு பொருளாதார உதவிகள் செய்வது தர்மத்தின் நன்மையை மட்டுமின்றி, உறவினரை ஆதரித்ததற்கான கூலியையும் பெற்றுக்கொடுக்கும். ஆனால் வறுமையில் வாடியவர்கள் புதுப் பணக்காரராக மாறியவுடன் உறவுகளையும் மறந்துவிடுகின்றனர். ஒரு பணக்காரன் உறவில்லாத மற்ற பணக்காரர்களுடன் நெருங்கிப் பழகுகின்றனர். விருந்துகளில் கூட நெருங்கிய ஏழை உறவினர்களை, ஏழை என்ற ஒரே காரணத்திற்காக கண்டுகொள்ளாமல் விட்டு விடுகின்றனர்.

ஆனால் நபி (ஸல்) அவர்கள், 'அல்லாஹ்வையும், மறுமை நாளையும் நம்பிக்கை கொண்டவர் தம் விருந்தாளியைக் கண்ணியப்படுத்தட்டும்! அல்லாஹ்வையும், மறுமை நாளையும் நம்பிக்கை கொண்டவர் தம் உறவினரைச் சேர்த்துக் கொள்ளட்டும் (ஆதாரம்: புஹாரி, முஸ்லிம்) என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

இரத்த பந்த உறவு அல்லாஹ்வின் அர்ஷைப் பிடித்துக் கொண்டு, 'என்னை யார் சேர்த்துக் கொள்கிறாரோ அவரை அல்லாஹ் சேர்த்துக் கொள்வான். யார் என்னைத் துண்டிக்கிறாரோ, அவரை அல்லாஹ் துண்டித்து விடுவான்' என்று குறிப்பிடும் எனவும் நபிகளார் கூறியுள்ளார்கள்.

(ஆதாரம்: புஹாரி, முஸ்லிம்)

மற்றொரு நபிமொழியில்,'யார் உறவைத் துண்டிக்கிறாரோ, அவருடன் அல்லாஹ்வும் தன் உறவைத் துண்டித்து விடுவதாக' கூறுகிறார்கள். அல்லாஹ்வுடைய உறவை துண்டித்துவிட்டு நாம் இம்மையிலும், மறுமையிலும் என்ன பலனை அடைய முடியும்? இவ்வாறு கண்டிக்கும் இறைவன் உறவைப் பேணுபவர்களுக்கு இவ்வுலகில் சிறந்த சலுகைகளையும் அளிக்கிறான்.

இது தொடர்பில் நபி (ஸல்) அவர்கள் குறிப்பிடும் போது, 'ஒருவர் செல்வ வளம் தமக்கு வழங்கப்பட வேண்டும் அல்லது தமது வாழ்நாள் அதிகரிக்கப்பட வேண்டும் என்று விரும்பினால், அவர் தமது உறவினர்களுடன் சேர்ந்து வாழட்டும்' என்றுள்ளார்கள். (ஆதாரம்: புஹாரி)

எல்லா மனிதர்களும் தனக்கு அதிக செல்வம் கிடைக்க வேண்டும் என்பதையும், தாங்கள் அதிக நாட்கள் வாழவேண்டும் என்பதையும் விரும்புவர். அப்படி விரும்பக்கூடியவர்கள், உறவினர்களைப் பேணுவதன் மூலம் செல்வத்தையோஅல்லது அதிக ஆயுளையோ பெறலாம். இது அல்லாஹ்வின் அருட்கொடை, இந்த உலகில் மனிதர்கள் தங்களுடைய இரத்த உறவினர்களுடன் சேர்ந்து வாழ்வதற்கான அன்பளிப்புகள். மறுமையிலும் அவர்கள் அல்லாஹ்விடம் நிறைய வெகுமதிகளை இன்ஷா அல்லாஹ் பெறமுடியும்.

அபூ முஷீரா

## ஆலமுல் இஸ்லாம்

மர்லின் மரிக்கார் aalamulislam.tkn@lakehouse.lk

# இஸ்லாம் வலியுறுத்தும் உளத்தூய்மை

மறுமையின் வெற்றிக்கு உளத்தூய்மை அடிப்படையானதாகும். ஆனால் அந்த மனத்தூய்மை செல்வாக்கு இழந்து முழுமையாக மறைந்து விடக்கூடிய அச்சுறுத்தலை எதிர்நோக்கியுள்ளது.

அல் குர்ஆன், வணக்கத்தை அல்லாஹ்வுக்கே கலப்பற்றதாக்கி வணங்குமாறும், உறுதியாக நிற்குமாறும், தொழுகையை நிலை நாட்டுமாறும், ஸகாத்தைக் கொடுக்குமாறும் தவிர அவர்களுக்கு வேறு கட்டளை பிறப்பிக்கவில்லை. இதுவே நேரான மார்க்கம். (98:5) என்று குறிப்பிட்டுள்ளது. அல்லாஹ்வுக்குச் செய்ய வேண்டிய கடமைகளின் ஊடாக அவனிடம் மட்டுமே கூலியை எதிர்பார்க்க வேண்டும். அவன் கட்டளையிட்டதால் தான் இதைச் செய்கிறோம் என்ற எண்ணமும் எம்மில் இருக்க வேண்டும். இதனையே மேற்கூறிய வசனம் தெளிவுபடுத்துகின்றது.

ஆனால் இன்று அல் குர்ஆனைப் படிப்பதும், படித்துக் கொடுப்பதும், தொழுவதும், தொழ வலியுறுத்துவதும் உலக நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டதாக உள்ளது. சிலர் தன்னை அறிஞனாகக் காட்டிக் கொள்வதற்காகவும், புகழுக்காகவும் இவற்றைச் செய்கின்றனர். படித்த கல்வியின் உண்மையான போதனையை எடுத்துச் செயல்படுத்துவதில்லை. மேலும் தர்மங்களைச் செய்பவர்கள், மற்றவர்கள் புகழ்வதற்காகவும் அதன் மூலம் சொந்த இலாபங்களை அடைந்து கொள்வதற்காகவும் செய்கின்றனர். 'நம்பிக்கை கொண்டோரே! அல்லாஹ்வையும், இறுதி நாளையும் நம்பாது மக்களுக்குக் காட்டுவதற்காக தனது செல்வத்தைச் செலவிடுபவனைப் போன்று, உங்கள் தர்மங்களைச் சொல்லிக் காட்டியும், தொல்லை தந்தும் பாழாக்கி விடாதீர்கள். இவனுக்கு உதாரணம் மேலே மண் படிந்திருக்கும் வழுக்குப் பாறை. அதன் மேல் மழை விழுந்ததும் மேலே ஒன்றுமில்லாமல் ஆக்கி விடுகிறது. தாம் பாடுபட்ட எதன் மீதும் அவர்கள் சக்தி பெற மாட்டார்கள். (தன்னை) மறுக்கும் கூட்டத்திற்கு அல்லாஹ் நேர் வழிகாட்ட மாட்டான். (2:264) அல் குர்ஆனின் இந்த எச்சரிக்கையின்படி, மறுமை நாளை நம்பாதவன் தான், தான் செய்யும் தர்மங்களைச் சொல்லிக் காட்டுவான், அதன் மூலம் தொந்தரவு செய்வான் என்பது தெளிவாகிறது. அதேநேரம் இறைநம்பிக்கையாளனின் நடவடிக்கை எவ்வாறு அமைய வேண்டும் என்பதையும் அல்லாஹ் தெளிவுபடுத்தியே இருக்கிறான். இறையில்லத்தைக் கட்டிக் கொடுத்தல், பொதுச் சேவை நிறுவனங்களுக்கு உதவிகளை வழங்குதல் உள்ளிட்ட நற்காரியங்களின் ஊடாக உலக ஆதாயங்களை எதிர்பார்ப்பது இன்று சர்வ சாதாரணமாகி விட்டது. தன்னைத் தலைவராக அல்லது செயலாளராக அல்லது வேறு முக்கியப் பொறுப்புகள் தருமாறு கேட்பது அல்லது தான் சொன்ன படி நடக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது என்பன இன்று பரவலாக இடம்பெறக்கூடியனவாக உள்ளன. இவ்வாறு செய்பவர்கள் இறைவனின் கூற்றுப்படி நன்மையை இழந்தவர்கள் என்பதில் ஐயமில்லை. எவ்வளவு பெரிய கஷ்டமான காரியங்களைச் செய்தாலும் அதில் உளத்தூய்மை இல்லாவிட்டால் அந்தக் கஷ்டத்திற்கு அல்லாஹ்விடம் மறுமை நாளில் எந்தப் பலனும் கிடைக்கப் பெறாது. நபி (ஸல்) அவர்கள் காலத்தில் மிகப் பெரிய தியாகமாக இருந்த ஹிஜ்ரத் எனும் நாடு துறத்தல் சம்பவத்தைப் பற்றி நபிகளார் இவ்வாறு கூறியுள்ளார்கள். 'அமல்கள் அனைத்தும் எண்ணங்களைப் பொறுத்ததே! எவருடைய ஹிஜ்ரத் அல்லாஹ்வுக்காகவும் அவனது தூதருக்காகவும் அமையுமோ அது அல்லாஹ்வுக்காகவும், அவனது தூதருக்காகவும் செய்த ஹிஜ்ரத்தாக அமையும். எவருடைய ஹிஜ்ரத் உலக நோக்கத்தைக் கொண்டதாகவோ, அல்லது ஒரு பெண்ணைத் திருமணம் செய்வதாகவோ இருந்தால் அவர் எதற்காக ஹிஜ்ரத் செய்தாரோ அதற்காகவே அமையும் என்று நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். (ஆதாரம்: புஹாரி)

அப்பாஸ்

# அல்லாஹ்வின் நிழல் தரும் காரியம்



எல்லாம் வல்ல கண்ணியமிக்க அல்லாஹ் மனிதனைப் படைத்து, அவன் இந்த உலகில் சந்தோஷமாக வாழ வேண்டும் என்பதற்காக செல்வம், பெற்றோர், உறவினர், மனைவி, மக்கள் என்ற எண்ணற்ற அருட்கொடைகளை வழங்கியுள்ளான்.

அவை மட்டுமின்றி அவனுக்கு வரவிருக்கும் மற்றொரு வாழ்க்கையிலும் அவன் சந்தோஷமாக வாழ வேண்டும் என்பதற்காக நன்மை தரும் பல காரியங்களைத் தனது தூதர் (ஸல்) அவர்கள் மூலம் எடுத்துரைத்து வழிகாட்டியுள்ளான். அதில் ஒன்று தான் தர்மம். தனது தேவைக்கு மிஞ்சிய செல்வம் படைத்தவர்கள், தனக்குக் கீழுள்ள கஷ்டப்படும் ஏழைகளுக்குக் கொடுத்து அதன் மூலம் அவர்களது சிரமத்தை நீக்க வேண்டும்.

அல்லாஹ் நமக்குக் காட்டித் தந்த எத்தனையோ நற்காரியங்களுக்கு கணக்கின்றி எண்ணற்ற நன்மைகளை அல்லாஹ் அள்ளிக் கொடுக்கின்றான். அதேபோன்று தர்மத்திற்கும் எண்ணற்ற பலன்கள் உண்டு. இப்பலனை அறியாத மக்கள் தர்மம் செய்வதில் ஆர்வம் காட்டாதுள்ளனர்.

ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள் 'தேவை போக எஞ்சியதை தர்மம் செய்வதே சிறந்ததாகும். இதனை உங்கள் வீட்டாரிடமிருந்து ஆரம்பம் செய்யுங்கள்' என்று கூறினார்கள். (ஆதாரம்: புஹாரி)

அதேநேரம், 'ஆதமின் மகனே! நீ மற்றவர்களுக்காகச் செலவிடு! உனக்கு நான் செலவிடுவேன்' என்று அல்லாஹ் கூறியதாக நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். (ஆதாரம்: புஹாரி)

இந்த நபிமொழிகள் தர்மம் செய்வதை ஊக்குவிப்பதாக அமைந்துள்ளன. அதிலும் அல்லாஹ் குறிப்பிடுவதாக நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டிருக்கும் வாசகம் தர்மம் செய்வதை எவ்வளவு தூரம் ஊக்குவிக்கிறது என்பதற்கு நல்ல எடுத்துக்காட்டாகும். 'உன்னிடம் இருப்பதை நீ மற்றவர்களுக்குக் கொடுத்தால் உன் பசியை நான் போக்குவேன்' என்பதே அந்த வாக்குறுதியாகும்.

இந்த உலகில் நாம் நன்றாக வாழ்வதற்குத் தர்மம் வழிவகுப்பது போன்றே மறுமை வாழ்க்கையும் நன்றாக அமைய துணைபுரிகிறது.

மறுமை என்பது, மனிதர்களின் அழிச்சாட்டியங்கள் அடங்கி ஒடுங்கி பரிதாபத்துடன் நிற்கும் வாழ்க்கை! அவ்வாழ்க்கையின் கடுமைகளில் ஒன்று தான் வெப்பம், வியர்வை! மனிதன் இவ்வுலகில் செய்த பாவத்திற்கேற்ப அவன் வியர்வையில் மூழ்கும் நேரம். அந்த நேரத்தில் அவன் எப்பேற்பட்ட செல்வாக்கு மிக்கவனாக இருந்தாலும் எதுவும் செய்ய முடியாது. இந்நிலையில் அந்தக் கொடிய வெப்பத்தை விட்டும், வியர்வையை விட்டும் காப்பதற்கு தர்மம் கேடயமாக அமையும்.

இது தொடர்பில் ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள் கூறும் போது, 'அல்லாஹ்வின் நிழலைத் தவிர வேறு நிழலே இல்லாத அந்நாளில் அல்லாஹ் தன் நிழலை ஏழு பேருக்கு அளிக்கிறான். அவர்களின் ஒருவர் தம்முடைய வலக்கரம் செய்யும் தர்மத்தை இடக்கரம் அறியாதவாறு இரகசியமாக தர்மம் செய்பவர்' என்று கூறினார்கள். (ஆதாரம்: புஹாரி)

மற்றொரு சந்தர்ப்பத்தில் நபி (ஸல்) அவர்கள், 'அல்லாஹ் மறுமை நாளில் உங்களில் ஒவ்வொருவருடனும் பேசாமல் இருப்பதில்லை. அப்போது அல்லாஹ்வுக்கும் உங்களுக்கும் இடையில் மொழி பெயர்ப்பாளர் எவரும் இருக்க மாட்டார். பிறகு அவர் கூர்ந்து பார்ப்பார். தமக்கு முன்புறம் எதையும் அவர் காண மாட்டார். பிறகு தமக்கு எதிரே பார்ப்பார். அப்போது அவரை (நரக) நெருப்பு தான் வரவேற்கும். ஆகவே முடிந்தால், பேரீச்சம் பழத்தின் சிறு துண்டையேனும் தர்மம் செய்து நரகத்திருந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்' என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

(ஆதாரம்: புஹாரி)

இவையும் அல்லாஹ் நமக்குச் செய்யும் மிகப் பெரும் உதவி தான். நாம் நரகத்திலிருந்து விடுதலை பெறுவதற்காகத் தான் அனைத்து நற்காரியங்களையும் செய்கிறோம். அந்த நரகத்திலிருந்து காக்கும் கேடயமாக தர்மம் அமைந்துள்ளது.

ஒவ்வொரு நாளும் இரண்டு மலக்குகள் இறங்குகின்றனர். அவ்விருவரில் ஒருவர், 'அல்லாஹ்வே! தர்மம் செய்பவருக்குப் பிரதிபலனை அளித்திடுவாயாக!' என்று கூறுவார். இன்னொருவர், 'அல்லாஹ்வே! (தர்மம் செய்யாமல்) தடுத்து வைத்துக் கொள்பவர்களுக்கு அழிவை ஏற்படுத்துவாயாக!' என்று கூறுவார் என்றும் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்கள் (ஆதாரம்: புஹாரி).

அதனால் நாம் செய்யும் சாதாரண தர்மத்திற்கு அல்லாஹ் மிகப் பெரும் கூலியாக சிறப்பான மறுமை வாழ்வை அளிக்கிறான். அதனால் தர்மம் செய்வதன் முக்கியத்துவத்தையும் சிறப்பையும் உணர்ந்து செயற்படுவது அவசியம். ஏனெனில் இவ்வுலகில் இறைவன் நமக்கு அளித்திருக்கும் பொருளாதாரம் தொடர்பில் மறுமை நாளில் அவன் விசாரிக்கவே செய்வான். இதனை அல் குர்ஆன், 'அந்நாளில் அருட்கொடை பற்றி விசாரிக்கப்படுவீர்கள் (102:8) என்றுள்ளது.

இவ்வசனத்தில் இடம்பெற்றுள்ள அருட்கொடை என்பது பொருட் செல்வம், மக்கட் செல்வம் என மனிதனுக்கு வழங்கப்பட்டுள்ள அனைத்துச் செல்வங்களையும் குறிக்கும். இந்தச் செல்வங்களைப் பற்றி மறுமையில் அவன் விசாரிக்காமல் இருக்கப்போவதில்லை.

எனவே இந்த அற்ப உலகில் ஆடம்பரமாகச் செலவு செய்வதைத் தவிர்த்து, வறுமையிலும் பசியிலும் வாழும் மக்களுக்கு அதிகமதிகம் தர்மம் செய்து மறுமையில் அல்லாஹ்வின் நிழலில் மறுமையில் ஒன்று கூட முயற்சிப்போம்.

மின்ஸார் இப்றாஹீம்

தினகரன் விளையாட்டு
sports.tkn@lakehouse.lk
2024 ஏப்ரல் 12 வெள்ளிக்கிழமை

## டி20 மகளிர் உலகக் கிண்ண தகுதிகாண்

# இலங்கை குழாத்தில் 15 வயது வீராங்கனை ஷஷினிக்கு இடம்



மகளிர் டி20 உலகக் கிண்ண தகுதிகாண் போட்டிக்கான இலங்கைக் குழாத்தில் 15 வயதான இடது கை சுழற்பந்து வீராங்கனை ஷஷினி கிம்ஹானி அழைக்கப்பட்டுள்ளார்.

டி20 மகளிர் உலகக் கிண்ணத்திற்கான தகுதிகாண் போட்டி எதிர்வரும் ஏப்ரல் 25 ஆம் திகதி தொடக்கம் மே 7 ஆம் திகதி வரை அபூதாபியில் நடைபெறவுள்ளது. இதற்காக அறிவிக்கப்பட்டிருக்கும் 15 பேர் கொண்ட இலங்கைக் குழாத்திற்கு சமரி அத்தபத்து அணித் தலைவியாக செயற்படவுள்ளார்.

இதில் அண்மையில் நடந்த இங்கிலாந்து மற்றும் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான 19 வயதுக்கு உட்பட முக்கோணத் தொடரில் சோபித்ததை அடுத்தே ஷஷினி சர்வதேச போட்டியில் ஆட அழைக்கப்பட்டுள்ளார். இந்தத் தொடரில் அவர் மொத்தமாக 7 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

அறிவிக்கப்பட்டிருக்கும் இலங்கை குழாத்திற்கு விளையாட்டுத் துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ ஒப்புதல் அளித்திருப்பதாக இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. தற்போது தென்னாபிரிக்கா சுற்றுப்பயணம் மேற்கொண்டிருக்கும் இலங்கை மகளிர் அணி அங்கிருந்து நேரடியாக அபூதாபி சென்றடையவுள்ளது.

இதில் தாய்லாந்து, ஸ்கொட்லாந்து, உகண்டா மற்றும் அமெரிக்கா உள்ள குழுவில் இடம்பெற்றிருக்கும் இலங்கை இந்த ஆண்டு பிற்பகுதியில் பங்களாதேஷில் நடைபெறும் உலகக் கிண்ணத்திற்கு தகுதி பெற இந்தக் குழுவில் முதலிடத்தை பிடிக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை குழாம்: சமரி அத்தபத்து (தலைவி), விஷ்மி குணரத்ன, நிலக்ஷி டி சில்வா, ஹர்ஷிதா சமரவிக்ரம, கவிஷா டில்ஹாரி, ஹசினி பெரேரா, அனுஷ்கா சஞ்சீவனி, உதேஷிகா பிரபோதனி, இனோகா ரணவீர, அச்சினி குலசூரிய, ஹன்சிமா கருணாரத்ன, காவியா காவிந்தி, இனோஷி பெர்னாண்டோ, சுகன்திகா குமாரி, ஷஷினி கிம்ஹானி.

## உடற்கட்டழகு போட்டி ஆரம்பம்



*Muscle Max Fitness Kingdom* மற்றும் *Iron Arms* ஆகியவற்றின் அனுசரணையுடன் *MUSCLE MAX SRI LANKA* உடற்கட்டழகு இறுதிப் போட்டி எதிர்வரும் மே 26 ஆம் திகதி களனி, கோணவல க்ளாவர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கை உடற்கட்டழகு சம்மேளனத்தின் ஆதரவுடன், களனி உடற்கட்டழகு சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தப் போட்டி பல கட்ட ஆரம்ப சுற்றுகளை அடுத்தே இறுதிப் போட்டி நடைபெறவுள்ளது. மாபெரும் இறுதிப்பட்டமான *MR. MUSCLE MAX* என்பது அகில இலங்கை மட்டத்தில் பகிரங்க போட்டியின் அடிப்படையில் வழங்கப்படவுள்ளது.

## ஒலிம்பிக் தடகளத்தில் தங்கம் வென்றால் பரிசு



ஒலிம்பிக் தடகளப் போட்டிகளில் தங்கப் பதக்கம் வெல்லும் வீர, வீராங்கனைகளுக்கு 50 ஆயிரம் டொலர் பரிசுத் தொகையை உலக தடகள அமைப்பு அறிவித்துள்ளது.

எதிர்வரும் ஜூலை மற்றும் ஓகஸ்ட் மாதங்களில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டியில் மொத்தம் 2.4 மில்லியன் பரிசுத் தொகையை உலகத் தடகள அமைப்பு அறிவித்துள்ளது. 2028 லொஸ் ஏஞ்சல்ஸ் போட்டிகளில் இந்தப் பரிசு வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்கள் வெல்பவர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

பாரிஸ் ஒலிம்பிக் போட்டியில் 48 தடகள நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளதோடு அஞ்சலோட்டப் போட்டிகளில் தங்கம் வெல்லும் அணிகள் பரிசுத் தொகையை பகிர்ந்துகொள்ளும்.

# சர்வதேச செய்திகள்

## இஸ்ரேலிய தாக்குதலில் ஹமாஸ் தலைவரின் மூன்று பிள்ளைகள் பலி

### போர் நிறுத்த நிலைப்பாட்டில் அந்த அமைப்பு உறுதி

காசா மீதான இஸ்ரேலின் தாக்குதல்கள் தொடரும் நிலையில், இஸ்ரேலின் வான் தாக்குதலில் தனது மூன்று மகன்கள் கொல்லப்பட்டது போர் நிறுத்த பேச்சுவார்த்தைகளில் தாக்கம் செலுத்தாது என்று ஹமாஸ் தலைவர் இஸ்மைல் ஹனியே தெரிவித்துள்ளார்.

கொய்ரோவில் இடம்பெற்று வரும் போர் நிறுத்தம் மற்றும் பணயக்கைதிகளை விடுவிக்கும் பேச்சுவார்த்தைகளில் இழுபறி நீடித்து வரும் நிலையில் இந்தக் கொலைகளை இஸ்ரேல் உறுதி செய்துள்ளது.

இந்நிலையில் கட்டாரைத் தளமாகக் கொண்ட அல் ஜசீரா தொலைக்காட்சியில் பேசிய ஹனியே, தனது மூன்று மகன்கள் மற்றும் நான்கு பேரக்குழந்தைகள் கொல்லப்பட்ட தாக்குதல் ஹமாஸின் நிலைப்பாட்டை மாற்றும் முயற்சி என்று குறிப்பிட்டுள்ளார்.

'இதனால் ஹமாஸ் தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளும் என்று நினைத்தால், அவர்கள் மயக்கத்தில் இருக்கிறார்கள்' என்று அவர் குறிப்பிட்டார்.

போர் நிறுத்தத்திற்கான புதிய முன்மொழிவை ஆராய்ந்து வருவதாக ஹமாஸ் குறிப்பிட்டிருக்கும் நிலையில் அந்த அமைப்பு 'முன்னோக்கி நகர வேண்டும்' என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலின் நெருங்கிய கூட்டாளியான அமெரிக்கா, போர் நிறுத்தம் ஒன்றுக்கு இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவுக்கு அழுத்தம் கொடுத்து வருவதோடு, முற்றுகையில் உள்ள காசாவுக்கு உதவிகள் செல்வதை அதிகரிப்பதற்கும், தெற்கு நகரான ரபா மீது திட்டமிடப்பட்டிருக்கும் படையெடுப்பை கைவிடவும் வலியுறுத்தி வருகிறது.

நெதன்யாகு போரை கையாளும் விதம் தவறாக இருப்பதாக கடந்த செவ்வாயன்று வழங்கிய தொலைக்காட்சி நேர்காணல் ஒன்றில் பைடன் குறிப்பிட்டிருந்தார். பின்னர் இஸ்ரேல் காசாவுக்கு போதுமான உதவிகளை அனுமதிப்பதில்லை என்று அவர் கடந்த புதனன்று குற்றம்சாட்டி இருந்தார்.

போர் நிறுத்த அழைப்புக்கு மத்தியிலும் காசா மீது இஸ்ரேல் நேற்றைய (11) தினத்திலும் உக்கிர தாக்குதல் நடத்தியதோடு குறிப்பாக தெற்கில் அது தீவிரமாக இருந்ததாக அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.



இதில் வடக்கு காசாவின் அல் ஷட்டி அகதி முகாமில் வைத்து குடும்பத்தினர் பயணித்த கார் ஒன்றை இலக்கு வைத்து கடந்த புதனன்று (10) இஸ்ரேல் நடத்திய ஆளில்லா விமானத் தாக்குதலிலேயே கட்டாரைத் தளமாகக் கொண்ட ஹமாஸ் தலைவர் ஹனியேவின் மகன்கள் மற்றும் பேரக் குழந்தைகள் கொல்லப்பட்டனர்.

இதில் தாக்குதலுக்கு இலக்கான கார் உருக்குலைந்திருப்பதையும் அதனை பலஸ்தீனர்கள் பார்வையிடுவதையும் காட்டும் புகைப்படங்களை ஏ.எப்.பி. செய்தி நிறுவனம் வெளியிட்டுள்ளது.

'ஹாசிம், ஆமிர் மற்றும் முஹமது ஆகிய எனது மூன்று மகன்கள் மற்றும் சில பேரக் குழந்தைகளும் அவர்கள் சென்ற கார் தாக்கப்பட்டதில் உயிர்த் தியாகம் செய்துள்ளனர்' என்று ஹனியே குறிப்பிட்டார்.

இந்த செய்தி கேள்விப்பட்ட விரைவில் அவர் கருத்துத் தெரிவித்தபோது, 'ஹமாஸ் தலைவர்கள் மற்றும் அவர்களின் உறவினர்களை இலக்கு வைப்பதன் மூலம் எமது மக்களின் உறுதியை குலைக்க முடியும் என்று ஆக்கிரமிப்பாளர்கள் (இஸ்ரேல்) நம்புகின்றனர்' என்றார்.

கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி வெடித்த காசா போரில் இதுவரை கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை தற்போது 33,500 ஐ தாண்டியுள்ளது. இதில் 70 வீதத்துக்கும் அதிகமானவர்கள் சிறுவர்கள் மற்றும் பெண்களாவர்.

அமெரிக்கா, எகிப்து மற்றும் கட்டாரின் மத்தியஸ்தத்திலான போர் நிறுத்த பேச்சுவார்த்தைகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் நீடித்து வருகிறது.

டோஹாவில் உள்ள ஹமாஸ் பேச்சாளர் ஹொசம் பத்ரான் ஏ.எப்.பி. செய்தி நிறுவனத்திற்கு கூறியதாவது, 'முன்வைக்கப்பட்டிருக்கும் முன்மொழிவை ஹமாஸ் ஆராய்ந்து வருகிறது... இன்னும் அதற்கு பதிலளிக்கவில்லை' என்றார்.

இதில் நூற்றுக்கணக்கான பலஸ்தீன கைதிகளுக்கு பகரமாக சுமார் 40 பணயக்கைதிகள் பரிமாற்றம் மற்றும் ஆறு வார போர் நிறுத்தம் ஒன்றுக்கு இந்த முன்மொழிவு பரிந்துரைத்துள்ளது.

கடந்த புதனன்று செய்தியாளர்களிடம் பேசிய பைடன், 'தற்போது ஹமாஸின் கைகளிலேயே உள்ளது. மேற்கொள்ளப்பட்டிருக்கும் முன்மொழிவை கொண்டு ஹமாஸ் முன்னோக்கிநகரவேண்டும்'என்று குறிப்பிட்டுள்ளார்.

இஸ்ரேல் போரை கையாளும் விதம் மற்றும் அது காசாவுக்கான உதவிகளை கட்டுப்படுத்துவது தொடர்பில் சர்வதேச அளவில் விமர்சனம் வலுத்து வருகிறது.

காசாவில் இஸ்ரேலின் சமமற்ற பதில் நடவடிக்கை மத்திய கிழக்கின் சீர்குலைவு மற்றும் ஒட்டுமொத்த உலகிலும் விளைவுகளை ஏற்படுத்தும் என்று ஸ்பெயின் பிரதமர் பெட்ரோ சான்செஸ் எச்சரித்துள்ளார்.

பரந்த அளவிலான அமைதி பேச்சுவார்த்தைகளுக்கான ஆரம்பப் புள்ளி ஒன்றாக குறுகிய எதிர்காலத்தில் பலஸ்தீன நாடு ஒன்றை அங்கீகரிப்பது குறித்து உறுதி அளித்திருக்கும் பல மேற்கத்திய நாடுகளில் ஆஸ்திரியா, அயர்லாந்துடன் ஸ்பெயினும் உள்ளது.

## ஈரானின் தாக்குதல் அச்சுறுத்தல்: இஸ்ரேலுக்கு அமெரிக்கா ஆதரவு

ஈரானிய மூத்த அதிகாரிகள் கொல்லப்பட்ட தாக்குதலுக்கு ஈரான் பதிலடி கொடுக்கும் அச்சுறுத்தல் அதிகரித்திருக்கும் சூழலில் இஸ்ரேலுக்கு அமெரிக்கா 'இரும்புக் கவசமாக' ஆதரவு அளிக்கும் என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் உறுதி அளித்துள்ளார்.

பத்து நாட்களுக்கு முன் சிரியாவில் உள்ள ஈரானிய துணைத் தூதரகத்தின் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலுக்கு ஈரான் பதில் தாக்குதல் ஒன்றை நடத்தும் அச்சுறுத்தல் பற்றி பைடன் எச்சரித்துள்ளார்.

'இஸ்ரேலின் பாதுகாப்பை உறுதி செய்ய எம்மால் ஆன அனைத்தையும் நாம் மேற்கொள்வோம்' என்று அவர் குறிப்பிட்டார்.

முன்னதாக கடந்த புதனன்று பேசிய ஈரானி உயர்மட்டத் தலைவர் ஆயதுல்லா அலி கமனெய், டஸ்கஸில் இஸ்ரேல் நடத்தி தாக்குதல் ஈரான் மீதான தாக்குதலுக்கு சமமாக இருந்தது என்றார்.

'அவர்கள் எமது துணைத்தூதரக பகுதி மீது தாக்கியபோது, அது எமது நிலத்தை தாக்கியது போன்று இருந்தது' என்றார். 'தீய அரசு தண்டிக்கப்பட வேண்டும் என்பதோடு அது தண்டிக்கப்படும்' என்றும் கூறினார்.

ஈரான் எவ்வாறான பதில் தாக்குதல் ஒன்றை நடத்தும் என்பது குறித்து பல ஊகங்கள் எழுந்த வண்ணம் உள்ளன.

இந்நிலையில் இஸ்ரேலிய மண்ணில் இராணுவ மற்றும் அரச இலக்குகள் மீது ஈரான் அல்லது அதன் ஆதரவுக் குழு விரைவில் தாக்குதல் ஒன்றை நடத்தும் என்று நம்புவதாக அமெரிக்க அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

அமெரிக்க மற்றும் இஸ்ரேலிய உளவுப் பிரிவுகளை மேற்கோள்காட்டி ப்ளூம்பர்க் செய்தி நிறுவனம் வெளியிட்டிருக்கும் தகவலில், அதிக துல்லியமான ஏவுகணைகளைக் கொண்டு எதிர்வரும் நாட்களில் சாத்தியமான இந்தத் தாக்குதல் நிகழக் கூடும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் கடந்த புதன்கிழமை நள்ளிரவு தொடக்கம் இராணுவ ஒத்திகைக்காக ஈரான் தலைநகர் டெஹ்ரன் வான் பரப்பில் அனைத்து விமானப் போக்குவரத்துகளும் இடைநிறுத்தப்பட்டிருப்பதாக அந்நாட்டின் மஹ்ர் செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.



டஸ்கஸ் தாக்குதலை தொடர்ந்து கடந்த ஒரு வாரத்துக்கு மேலான இஸ்ரேல் உஷார் நிலையில் உள்ளது. இந்நிலையில் இஸ்ரேல் மீது ஈரான் நேரடி தாக்குதல் நடத்தும் பட்சத்தில், அது பாரிய போர் ஒன்றுக்கு தூண்டுதலாக அமைப்பு அச்சுறுத்தல் உள்ளது. எனினும் பாரிய போர் ஒன்றுக்கான ஈரானின் இராணுவ திறன் தொடர்பில் அவதானிகள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இதற்கு மாற்றாக ஹிஸ்புல்லா போன்ற ஈரான் ஆதரவு அமைப்புகளை பயன்படுத்தி தாக்குதல்களை நடத்த வாய்ப்பு இருப்பதாக நம்பப்படுகிறது. ஏற்கனவே ஹிஸ்புல்லா அண்டை நாடான லெபனானில் இருந்து இஸ்ரேல் மீது அடிக்கடி தாக்குதல்களை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேநேரம் இஸ்ரேலிய தூதரகங்கள் தொடர்ந்தும் பாதுகாப்பான இடங்களாக இருக்காது என்று ஈரானிய அதிகாரி ஒருவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை எச்சரித்திருந்தார். இதனால் துணைத்தூதரகங்கள் சாத்தியமான இலக்குகளாகவும் மாறியுள்ளன.

இதில் இஸ்ரேல் சைபர் தாக்குதல் ஒன்றை நடத்தவும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

ஈரான் துணைத் தூதரகத்தின் மீது கடந்த ஏப்ரல் 1ஆம் திகதி நடத்தப்பட்ட தாக்குதலில் ஈரானின் மூத்த இராணுவத் தளபதிகள் உட்பட பதின்மூன்று பேர் கொல்லப்பட்டனர்.

இந்தத் தாக்குதலுக்கு இஸ்ரேல் இன்னும் பொறுப்பேற்காதபோதும், இதன் பின்னணியில் அது இருப்பதாக பரவலாக நம்பப்படுகிறது. அது தொடக்கம் அமெரிக்காவும் பிராந்தியத்தில் உஷார் நிலையை அதிகரித்துள்ளது.

இந்நிலையில் கடந்த புதன்கிழமை வெள்ளை மாளிகையில் ஜப்பான் பிரதமர் புமியோ கிஷிடாவுடனான சந்திப்பின்போது செய்தியாளர்களிடம் பேசிய பைடன், இந்த பதற்ற நிலை குறித்தும் கருத்து வெளியிட்டிருந்தார்.

'பிரதமர் நெதன்யாகுவிடம் நான் கூறியது போன்று, ஈரான் மற்றும் அதன் ஆதரவுக் குழுக்களிடம் இருந்து வரும் இந்த அச்சுறுத்தலுக்கு எதிரான இஸ்ரேலின் பாதுகாப்பு தொடர்பாக எமது பொறுப்பு இரும்புக் கவசமாக இருக்கும் என்பதை நான் மீண்டும் ஒருமுறை கூறிக்கொள்கிறேன்' என்று பைடன் குறிப்பிட்டார்.

காசா போர் தொடர்பில் இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா இடையிலான முறுகல் அதிகரித்திருக்கும் நிலையிலேயே பைடன் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

பைடன் மற்றும் நெதன்யாகுவுக்கு இடையிலான முறுகல் அதிகரித்தபோதும் இஸ்ரேல் மீதான எந்த ஒரு தாக்குதலுக்கும் அமெரிக்கா கடுமையான பதிலை அளிக்கும் என்ற செய்தியை ஈரானுக்கு வழங்க அமெரிக்க அதிகாரிகள் முயன்று வருகின்றனர்.

பதற்றத்தை தணிக்கும் முயற்சியாக, சவூதி அரேபியா, ஐக்கிய அரபு இராச்சியம், கட்டார் மற்றும் ஈராக் வெளியுறவு அமைச்சர்கள் ஈரானிய வெளியுறவு அமைச்சரை இந்த வாரம் சந்தித்துப் பேசவிருப்பதாக செய்தி வெளியாகியுள்ளது.

இதன்போது பதற்றத்தை தணிப்பது பற்றி பைடனின் மத்திய கிழக்குக்கான ஆலோசகர் பிரெட் மக்குர்க்கின் செய்தியை ஈரானிடம் தெரிவிக்க இந்த அமைச்சர்கள் முயலவுள்ளனர்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஏப்ரல் மாதம் 12ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.